REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 மார்ச் 5 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
වරු. 90 இல. 55 | Saturday 05, March, 2022 | 16பக்கங்கள் | 30/-

## அருந்திக பெர்னாண்டோ மீண்டும் இராஜாங்க அமைச்சராக பதவியேற்பு



புத்தளம் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ மீண்டும் தெங்கு, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை ஊக்குவிப்பு மற்றும் அது சார்ந்த கைத்தொழில், உற்பத்தி 06

### நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஜனாதிபதி திடீர் விஜயம்

## நெல் கொள்வனவுக்கு கடன் வழங்குமாறு 02 அரச வங்கிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

### எவ்வித முறைகேடுகளுக்கும் இடமளிக்க வேண்டாமெனவும் தெரிவிப்பு



நெல் கையிருப்பை பிணையாக வைத்து, நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு கடன் வசதிகளை வழங்குமாறு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

போட்டித் தன்மையுடன் நெல்லைக் கொள்வனவு செய்து, அரசாங்கத்திடம் போதியளவு நெல் கையிருப்பைப் பேணுவதை இலக்காகக் கொண்டு, இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைமை அலுவலகத்தை நேற்று (04) முற்பகல் பார்வையிட்ட போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். 06

### மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள்:

## தொடர்ச்சியாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்

### புதிய எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் மின் துண்டிப்பு ஏற்படாதவாறு மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக புதிய எரிசக்தி அமைச்சராக பொறுப்பேற்றுள்ள காமினி லொக்குகே தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் கலந்துரையாடி அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

எரிசக்தி அமைச்சராக பதவி வகித்த உதய கம்மன்பில 06

### அமைச்சரவை மறுசீரமைப்பு

## திலும், சி.பி. ரத்நாயக்கவுக்கு புதிய அமைச்சுப் பொறுப்புகள்




அமைச்சுகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்திற்கிணங்க, இரண்டு அமைச்சரவை அமைச்சர்களும் இரு இராஜாங்க அமைச்சர்களும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில், நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தனது பதவியை இராஜினாமா செய்த அருந்திக பெர்னாண்டோ மீண்டும் இராஜாங்க அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

வனவிலங்கு மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சராக சி.பி. ரத்நாயக்கவும், போக்குவரத்து அமைச்சராக திலும் அமுனுகமவும் அனர்த்த முகாமைத்துவ 06

### கப்பலிலிருந்து நேற்று இறக்கப்பட்ட எரிபொருள்

## மின்சார சபை, இ.போ.ச., ரயில்வேக்கு விசேட முன்னுரிமை பட்டியல் தயாரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



### நாடு முழுவதும் சீரான விநியோகம் ஆரம்பம்

நாட்டுக்குள் நேற்று வந்துள்ள எண்ணெய்த் தாங்கி கப்பலிலிருந்து 37,300 மெற்றிக் தொன் டீசல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதலே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எரிபொருளை விநியோகிப்பதற்காக முக்கியத்துவமளிக்க வேண்டிய நிறுவனங்கள் உள்ளடங்கிய பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதன்படி 8,000 மெற்றிக் தொன் டீசலை மின்சார சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலின்படி இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே திணைக்களம், மின்சார சபை, சுதந்திர வர்த்தக வலயம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வழமையாக இலங்கை போக்குவரத்து சபைக்கு மூன்றரை இலட்சம் மற்றும் நான்கு இலட்சம் லீற்றருக்கு இடைப்பட்ட அளவு எரிபொருள் வழங்கப்பட்டு வந்தன. இம்முறை அதனை இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தனியார் பஸ்கள் மற்றும் சுற்றுலாத் துறையுடன் சம்பந்தப்பட்ட வாகனங்களுக்கும் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 8,000 மெற்றிக் தொன் டீசல் மின்சார சபைக்கு வழங்கப்படவுள்ளது. 06



சந்தையில் நிலவுகின்ற அரிசிக்கான தேவையை தொடர்ந்து பேணுவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று (04) கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைமை அலுவலகத்துக்கு ஜனாதிபதி திடீர் விஜயம் செய்தபோது பிடிக்கப்பட்ட படம்.



## நிலைபேறான அபிவிருத்திக்கு முதலீடுகள், ஒத்துழைப்புக்களையும் வரவேற்கின்றோம்

உலக அமைப்புக்களிடம் அமைச்சர் டக்ளஸ் பகிரங்க வேண்டுகோள் 03

### அமைச்சர்களாக இருந்துகொண்டு

## அரசின் வேலைத் திட்டங்களை விமர்சிக்க இடமளிக்க முடியாது

### போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கம் பொருளாதார நெருக்கடியிலுள்ள இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை பாதிக்கும் வகையில் விரிவான அரசியல் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கத்திற்குள்ளேயேயுள்ள ஒரு தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள 'சரியான பாதை' என்ற மாநாட்டில் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சரையும் விமர்சித்துள்ளதுடன் அத் தரப்பினர் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களையும் நிராகரித்துள்ளதாகவும் அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிதாக போக்குவரத்து அமைச்சர் பதவியை பொறுப்பேற்றுள்ள அமைச்சர் திலும் அமுனுகம நேற்றைய தினம் பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 06

## யுகதனவி வழக்கு விசாரணை உச்ச நீதிமன்றம் நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கெரவலபிட்டிய, யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதை உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதிபதிகளான டி. பி. தெஹிதெனிய, புவனேக அலுவிஹார மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று அந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிபதிகள் குழாம் அதனை நிராகரித்துள்ளது.

அது தொடர்பான ஐந்து மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரிக்கப்படுவதாக பிரதம நீதியரசர் நேற்று நீதிமன்றத்தில் அறிவித்தார்.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, 06

### தேர்தலுக்கு முன்னரோ, பின்னரோ

## விமல், கம்மன்பிலவுடன் கூட்டணி அமைக்க மாட்டோம்

### மனோ எம்.பியிடம் சஜித் தெரிவிப்பு



அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோருடன் நாம் ஒருபோதும் கூட்டணி அமைக்க மாட்டோம். தேர்தலுக்கு முன்னும் சரி, பின்னும்சரி இத்தகைய இனவாதிகளை எம்முடன் சேர்க்க மாட்டோமென எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாச எம்பி, தம்மிடம் உறுதியாக தெரிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 06

## நிலையான வைப்பு வசதி, கடன் வசதி வீதங்களை அதிகரிக்க தீர்மானம்

### மத்திய வங்கி அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தையும் அதிகரிப்பதற்கும் மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க நிலையானவைப்புத்தொகை வசதியை 6.5 சதவீதமாகவும் நிலையான கடன் வசதியை 7.5 சதவீதமாகவும் அதிகரிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. 06






## உக்ரைன் அணுமின் நிலையம் மீது ரஷ்யா சுற்றி வளைத்து தாக்குதல்

03



### ராகமை மருத்துவ பீட விடுதி மோதல் சம்பவம்

## ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிப்பு அருந்திக பெர்னாண்டோ குற்றமற்றவர்

03

## மனித உரிமைகள் பேரவையின் தலைவருடன் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குழு சந்திப்பு



வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மனித உரிமைகள் பேரவையின் தலைவரும் ஆர்ஜென்டினாவின் நிரந்தரப் பிரதிநிதியுமான ஃபெடரிகோ வில்லேகாஸை ஜெனிவாவிலுள்ள பலாஸ் டெஸ் நேஷன்ஸில் சந்தித்தார்.

அவருடன் நீதி அமைச்சர் அலி சப்ரி, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் 06

## ஐ.நா.மனித உரிமைப்பேரவையில் இலங்கை தொடர்பான விவாதம்

### நேற்று இரவு ஆரம்பம்?




ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் நேற்று இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இலங்கை நேரப்படி நேற்று இரவு 9.00 மணியளவில் இலங்கை தொடர்பான விவாதம் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையர் மிச்செல் பச்லெட் இலங்கை தொடர்பான அறிக்கையை உத்தியோகப்பூர்வமாக வெளியிடுவதன் மூலம் அதன் சாராம்சம் ஒன்றை பேரவையில் 06

## எதிர்க்கட்சியுடன் ஒருபோதும் நாம் இணையப் போவதில்லை

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



### விமல், கம்மன்பிலவுக்கு நீதி கிடைக்கும் வரை விலகியே இருப்பேன்

தமது குழு எதிர்க்கட்சியுடன் ஒருபோதும் இணையப் போவதில்லையென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தாம் மாற்று வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க போவதாகவும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு நேற்று தெரிவித்துள்ளது.

அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் நேற்று முன்தினம் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதையடுத்து அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றைய தினம் கொழும்பில் விசேட செய்தியாளர் மாநாடொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, 06

### விக்கல் வீராச்சாமி



இந்திய திரைப்பட துறைக்குள் இலங்கை கலைஞர்கள் உள்வாங்கப்பட வேணும் எண்டு கலா மாஸ்டர் வவுனியா–வில கூறியிருக்கிறார்.

இங்க வரும்போது இந்திய கலைஞர்–கள் இப்படித்தான் சொல்லுவாங்க, அங்க போனா கண்டுக்க மாட்டாங்க, கலா அக்கா எப்படியோ பார்ப்போம்...!!!

# சர்வதேச செய்திகள்

# உக்ரைனில் அணு நிலையத்தில் மோதல்: தீ பரவியதால் பரபரப்பு

**பல நகரங்கள் ரஷ்ய படையால் சுற்றிவளைப்பு**





ரஷ்யா மற்றும் உக்ரைன் படைகளுக்கு இடையிலான மோதலின் போது ஐரோப்பாவின் மிகப்பெரிய அணு மின் நிலையத்திற்கு அருகில் இருக்கும் பயிற்சிக் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டதாக உக்ரைனின் அவசர சேவை பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கு இலக்காகி இருக்கும் செபோரிசியா நிலையத்தில் கதிரியக்க அளவு அதிகரித்ததற்கான சமிக்ஞைகள் இல்லை என்று அமெரிக்க வலுசக்தி செயலாளர் ஜெனீபர் கிரன்ஹோல் தெரிவித்துள்ளார். இந்த அணு மின் நிலையம் உக்ரைனின் ஐந்தில் ஒரு மின் உற்பத்தியை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த அணு மின் நிலைய வளாகத்தில் அணு மின் ஆலைக்கு அருகில் இருக்கும் கட்டடம் ஒன்றின் மீது ஷெல் குண்டுகள் வீசப்பட்டு தீப்பற்றி எரியும் காட்சிகளைக் கொண்ட வீடியோ ஒன்று வெளியாகி இருந்தது.

இரவு நேரத்தில் எடுக்கப்பட்ட அந்த வீடியோவில் ஒரு கட்டடம் தீப்பற்றி எரிவதும் ஷெல் குண்டுகள் விழுந்த வண்ணம் இருப்பதும், பின்னர் பாரிய தீப்பிழப்பு ஒன்று வெளிப்படுவதும் தெரிகிறது. இந்த வளாகத்தின் கார் தரிப்பிடம் ஒன்றுக்கு அருகில் வெடிப்பு இடம்பெறுவதோடு அது வளாகம் எங்கும் தீ பரவுவதற்கு காரணமாகியுள்ளது. இந்நிலையில் அணு மின் நிலையம் எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்பது பற்றிய விபரம் உடன் வெளியாகவில்லை.

அணு உலை மீதான ரஷ்யத் தாக்குதலை மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள் உடனடியாக கண்டித்தனர். அவர்கள் அதை “பயங்கரமான” “பொறுப்பற்ற” செயல் என்று குறிப்பிட்டனர். இது ஐரோப்பா முழுவதற்குமான அச்சுறுத்தலாக இருந்தது.

‘ஐரோப்பியர்களே தயவு செய்து எழுந்திருங்கள். உக்ரைனில் அணு மின் நிலையம் ஒன்றின் மீது ரஷ்யர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்பதை உங்களது அரசியல்வாதிகளுக்கு கூறுங்கள்’ என்று உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலென்ஸ்கி வெளியிட்ட வீடியோ உரை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்ய டாங்கிகள் அணு உலை ஆலைகள் மீது சுட்டதாக செலென்ஸ்கி கூறியபோதும், அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று கூறப்படுகிறது.

தலைநகர் கியேவில் இருந்து தென்கிழக்காக 550 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இந்த அணு உலைக்கு அருகில் இருக்கு நகரின் மேயர், எதிரிகளின் தொடர்ச்சியான ஷெல் வீச்சு மற்றும் உக்கிர தாக்குதல்களால் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டி கடந்த வாரம் உக்ரைன் மீது படையெடுத்த நிலையில், இதுவரை ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருப்பதாக நம்பப்படுவதோடு, ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் அகதிகளாக நாட்டை விட்ட வெளியேறியுள்ளனர்.

அணு நிலையத்தில் தீப்பற்றிய சம்பவத்தை அடுத்து ஆசிய பங்குச் சந்தைகளில் பங்குகள் வீழ்ச்சி கண்டதோடு எண்ணெய் விலை மேலும் அதிகரித்துள்ளது.

டோக்கியோ மற்றும் ஹொங்கொங் பங்குச் சந்தைகள் மிகுந்த வீழ்ச்சியை எதிர்கொண்டன. ஜப்பானின் முக்கியக் குறியீடான நிக்கேய் 2.5 வீதம் குறைந்தது. ஹொங்கொங்கின் செங் 2.6 வீதம் குறைந்தது.

காலை வணிகத்தின் போது, ஆசியாவில் எண்ணெய் விலை உயர்ந்தது. ப்ரெண்ட் மசகுஎண்ணெய் ஒரு பீப்பாய் 112 டொலருக்கும் மேல் உயர்ந்துள்ளது.

‘அணு அனர்த்தம் தொடர்பில் சந்தைகள் கவலை அடைந்துள்ளன. போர் நீடிக்கும் நிலையில் தவறான கணிப்பு மற்றும் அதிகப்படியான எதிர்வினை பிரச்சினைக்கு காரணம்’ என்று ஓ.சி.பி.சி வங்கியின் முதலீட்டு மூலோபாய நிறைவேற்று பணிப்பாளர் வாசு மேனன் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா ஏற்கனவே கியேவில் இருந்து சுமார் 100 கி.மீற்றர் தொலைவில் இருக்கும் செயலிழந்துள்ள செர்னோபில் அணு மின் நிலையத்தை கைப்பற்றியுள்ளது. இந்த அணு மின் நிலையத்தில் 1986 ஆம் ஆண்டு ஏற்பட்ட அனர்த்தத்தை அடுத்து ஐரோப்பாவின் பெரு பகுதிக்கு கதிர்வீச்சு கசிந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் செபோரிசியா ஆலை வித்தியாசமானது மற்றும் பாதுகாப்பானது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அந்த ஆலையில் வெடிப்பு ஏற்பட்டால், அது செர்னோபில் வெடிப்பைவிட 10 மடங்கு மோசமானதாக இருக்கலாம் என்று உக்ரைனிய வெளியுறவு அமைச்சர் முன்பு எச்சரித்திருந்தார்.

இந்த நிலையத்தின் தற்போதைய நிலை பற்றி உக்ரைன் ஜனாதிபதியுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் ஆகியோர் பேசியுள்ளனர்.

‘குறித்த பகுதியில் இராணுவ செயற்பாடுகளை நிறுத்தும்படியும் அவசர நடவடிக்கை பிரிவினருக்கு அந்தத் தளத்தை அடைய அனுமதிக்கும்படியும் ஜனாதிபதி செலெஸ்கியுடன் இணைந்து ஜனாதிபதி பைடன் ரஷ்யாவை வலியுறுத்துகிறார்’ என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ரஷ்ய படைகள் உடன் தமது தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றும் போர் நிறுத்தம் ஒன்று தீர்க்கமானது என்பது பற்றி செலென்ஸ்கியுடன் இணங்கியதாக ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

‘ஜனாதிபதி புட்டினின் பொறுப்பற்ற நடவடிக்கை தற்போது அனைத்து ஐரோப்பாவையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் என்று பிரதமர் குறிப்பிட்டார்’ என்ற பிரிட்டன் பிரதமர் அலுவலகம் கூறியது.

செபோரிசியா அணு மின் நிலையம் வலுவான கட்டுப்பாட்டு கட்டமைப்புகளால் பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும் அது பாதுகாப்பாக மூடப்பட்டது என்றும் அமெரிக்க வலுசக்தி செயலாளர் குறிப்பிட்டார்.

அணு மின் நிலைத்தின் நிலைமை குறித்து பெரிதும் கவலை அடைவதாக குறிப்பிட்டுள்ள சர்வதேச அணு சக்தி நிறுவனம் உக்ரைன் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்ய படை நடவடிக்கையை ஆரம்பித்த பின் முதல் நகராக தெற்கின் துறைமுக நகர் செர்சன் ரஷ்யாவிடம் வீழ்ந்துள்ளது. எனினும் ஏனைய நகரங்களை ரஷ்யப் படை சுற்றி வளைத்தும் தாக்குதல் நடத்தியும் வருகின்றது.

அசொவ் கடலின் பிரதான துறைமுக நகரான மரியுபோல் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதோடு சரமாரி தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. நகரில் மின்சாரம் மற்றும் நீர் துண்டிக்கப்பட்டிருப்பதோடு காயமடைந்தவர்களை வெளியேற்ற முடியாதிருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

நகரின் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் இடைவிடாது சூட்டு சத்தங்கள் இடம்பெற்ற வருவதும் வாகனத் தரிப்பிடம் ஒன்றில் வானங்கள் தீப்பற்றி எரியும் வீடியோ ஒன்று வெளியாகி உள்ளது.

ரஷ்ய படையெடுப்பு ஆரம்பித்தது தொடக்க உக்ரைனின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கிவ் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது. கடும் ஷெல் வீச்சுக்கு இலக்காகி வரும் இந்த நகரை உக்ரைனிய படை தொடர்ந்து தக்க வைத்துள்ளது.

எனினும் தலைநகர் கியேவ் மீது ஷெல் வீச்சுகள் இடம்பெற்ற போதும் அங்கு கடந்த 24 மணி நேரத்தில் எந்த பாரிய தாக்குதல்களும் இடம்பெறவில்லை. புறநகர் பகுதியான பொரோடியங்காவின் பாதுகாப்பு அரணை முறியடிக்க ரஷ்ய பயங்கர தாக்குதல்களை நடத்துவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கியேவ் நகரின் மையப் பகுதியில் இருந்து 25 கிலோமீற்றருக்குள் ரஷ்ய படைகள் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். கியேவை நோக்கி முன்னேறும் ரஷ்யாவின் மிக நீண்ட இராணுவ வாகனத் தொடரணி எதிர்ப்புகள் மற்றும் ஏற்பாட்டியல் பிரச்சினைகள் காரணமாக மெதுவடைந்திருப்பதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஸ்தான்புல்லின் உய்குர் பாடசாலைக்கு பூட்டு



சீன எதிர்ப்பு பாடங்கள் கற்பிக்கப்படுவதாக சீனா முறையிட்டதை அடுத்து ஸ்தான்புல் நகரில் இருக்கும் ஆரம்ப பாடசாலை ஒன்றை துருக்கி மூடியுள்ளது.

ஹிரா உய்குர் ஆரம்ப பாடசாலையை மூடிய தேசிய கல்வியின் ஸ்தான்புல் மாகாண பணியகம் 300க்கும் அதிகமான மாணவர்கள் நுழைவதற்கு அனுமதி மறுத்ததாக ரேடியோ பிரீ ஏசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த பாடசாலை துருக்கியின் ஒழுங்கு முறைகளை மீறி இருப்பதாக சீனா கூறியபோதும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த பாடசாலையை மீண்டும் திறக்க வலியுறுத்தியுள்ளனர். பாடசாலைக்கு எதிராக சீனா முறையிட்டதாக தமக்கு கூறப்பட்டது என்ற அந்த பாடசாலையின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## ரஷ்ய படைகளிடம் இருந்து தற்காப்பிற்கு போராட்டம்



ரஷ்யப் படையினர் உக்ரைனியத் தலைநகர் கியேவை நெருங்கி வருகின்றனர் அவர்களிடமிருந்து தற்காத்துக்கொள்வதற்கு முக்கியமான வழிகளில் தடைகளை ஏற்படுத்த கடுமையாக முயல்கின்றனர் கியேவ் நகர மக்கள்.

கவச வாகனங்கள் தாண்டி வரமுடியாதவாறு கனத்த உலோகத் தடுப்புகளை அமைக்கின்றனர். உக்ரைனில் உள்ள மிகப்பெரிய சொத்து நிறுவனம் இதற்குத் தோள் கொடுக்கிறது.

தற்காப்பை வலுப்படுத்தி, எதிரிளின் கவச வாகனப் படையணி முன்னேற்றத்தை முடக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போரில் உக்ரைன் நிச்சயம் வெல்லும் என்பது கியேவ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

## இந்தியர்கள் போலந்தில் கல்வியை தொடர உறுதி



உக்ரைனில் இருந்து வெளியேற்றப்பட்ட இந்திய மாணவர்களுக்கு போலந்து பல்கலைக்கழகங்கள் கதவுகளை திறந்துள்ளன. இதன்மூலம் அவர்களுக்கு கல்வியை நிறைவு செய்ய முடியும் என்று இந்திய மத்திய அமைச்சர் வி.கே சிங் தெரிவித்துள்ளார்.

போலந்து, ரெசோவில் பிரசிடென்கி ஹோட்டலில் உள்ள 600 இந்திய மாணவர்களுடன் வி.கே சிங் தொடர்புகொண்டுள்ளார். “உங்களது கற்கை நிறைவு பெவில்லை என்றால், உக்ரைனில் இருக்கும் அனைத்து மாணவர்களின் கல்விக்கான பொறுப்பையும் தாம் ஏற்பதாக போலந்தில் நான் சந்தித்த அனைவரும் கூறினார்கள்” என்று தெரிவித்தார்.

இந்திய அரசின் நட்பு நாடான போலந்து இந்த மாணவர்களின் கல்வியை நிறைவு செய்ய தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

## புட்டினுக்கு நெருக்கமானோர் மீது அமெரிக்கா புதிய தடை



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடனான நெருக்கமான உயர் அடுக்கைச் சேர்ந்த பல செல்வந்தர்களை இலக்கு வைத்து அமெரிக்கா புதிய தடை விதித்துள்ளது. இதில் ரஷ்ய ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் டிமிட்ரி பெஸ்கோவும் அடங்குகிறார்.

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிராக ரஷ்யாவுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கும் மற்றொரு நடவடிக்கையாகவே அமெரிக்கா கடந்த வியாழக்கிழமை புதிய தடைகளை விதித்துள்ளது.

இதில் 19 தன்னலக் குழுவினர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 47 பேர் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இதில் விசா கட்டுப்பாடுகள் மற்றும் சொத்துகள் முடக்கப்படுவது ஆகிய நடவடிக்கைகளும் அடங்கும். கூட்டணி நாடுகளின் ஒருங்கிணைப்புடன் இந்தத் தடை அமுல்படுத்தப்படுவதாக அமெரிக்க நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

“இந்த உயரடுக்கைச் சேர்ந்தவர்களில் ஒருவரான அலிஷர் புர்ஹோவிக் உஸ்மானோவ், ரஷ்யாவின் செல்வந்தர்களில் ஒருவர் என்பதோடு புட்டினின் நெருங்கிய கூட்டாளி” என்று வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மனிதாபிமானப் பாதைக்கு உக்ரைன்–ரஷ்யா இணக்கம்



ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் நடந்த சந்திப்பில், மனிதாபிமான பாதைகளை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அவற்றின் வழி பொதுமக்கள் வெளியேறுவதுடன் மனிதாபிமான உதவிப் பொருட்களும் விநியோகிக்கப்படலாம்.

மனிதாபிமான பாதைகளைச் சுற்றிய பகுதியில் வன்செயல்கள் தற்காலிகமாக நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பெலாரஸில் கடந்த வியாழக்கிழமை நடந்த சந்திப்பில் தாங்கள் எதிர்பார்த்த அனைத்து முடிவுகளும் எட்டப்படவில்லை என்று உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியின் ஆலோசகர் கூறினார்.

எனினும் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் காலம் பற்றி எந்த விபரமும் வெளியிடப்படவில்லை. தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் தற்காலிக போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதற்கு சாத்தியம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், தம்முடன் நேரடி பேச்சு வார்த்தையை மேற்கொள்ளும்படி ஸெலென்ஸ்கி கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில், உக்ரேன் படையெடுப்பு திட்டமிட்டதைப்போல் நடைபெறுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

## உக்ரைன் எல்லையில் இருந்து 17,000 இந்தியர் வெளியேற்றம்



கியேவில் இருக்கும் இந்திய தூதரகத்தினால் பயண ஆலோசனை வெளியிடப்பட்ட பின் சுமார் 17,000 இந்திய நாட்டவர்கள் உக்ரைன் எல்லையை விட்டு வெளியே இருப்பதாகவும் அடுத்த 24 மணி நேரத்தில் 15 வரையான விமானங்கள் இயக்கப்படவிருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைனில் இருந்து இந்தியர்களை மீட்டுவரும் கங்கா திட்டம் பற்றி ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் அரிந்தாம் பக்சி, “உக்ரைனை விட்டு வெளியேறிய இந்தியர்கள் எண்ணிக்கை வேகமாக உயர்ந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது ஆலோசனை வெளியிடப்பட்டது தொடக்கம் உக்ரைன் எல்லையில் இருந்து சுமார் 17,000 இந்திய நாட்டவர்கள் வெளியேறி இருப்பதாக நாம் கணித்துள்ளோம்.

இதில் தூதரகத்துடன் முன்னர் பதிவு செய்யாத இந்தியர்கள் சிலரும் உள்ளனர்” என்றார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 5 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினකරන්



**தொழுகை நேரம்**

05 முதல் 09 வரை

| | |
|---|---|
| சுபஹ் - | 05.06 |
| லுஹர் - | 12.23 |
| அஸர் - | 03.41 |
| மஃரிப் - | 06.22 |
| இஷா - | 07.32 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 21

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: திரிதியை

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | சுகம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | முயற்சி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

அமைச்சரவையில் திடீர் மாற்றங்கள்

# லொக்குகே, பவித்ரா, எஸ்.பிக்கு புதிய அமைச்சுப் பொறுப்புகள்





**ஜனாதிபதி அதிரடி தீர்மானம்**



**காமினி லொக்குகே – எரிசக்தி**

**பவித்ரா வன்னியாராச்சி – மின் சக்தி**

**எஸ்.பி. திஸாநாயக்க – கைத்தொழில்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைச்சரவையில் சில அதிரடி மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோரை அந்த பதவிகளிலிருந்து நீக்கியுள்ளதுடன், அமைச்சர் காமினி லொக்குகே புதிய எரிசக்தி அமைச்சராகவும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி புதிய மின் சக்தி அமைச்சராகவும் எஸ்.பி. திஸாநாயக்க கைத்தொழில் அமைச்சராகவும் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

இதுவரை அமைச்சர்களாக பதவி வகித்த உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் அவர்கள் வகித்த அமைச்சுப் பதவிகளை இழந்துள்ளனர். உதய கம்மன்பில வகித்து வந்த எரிசக்தி அமைச்சர் பதவி இதுவரை மின்சக்தி அமைச்சராக பதவி வகித்த காமினி லொக்குகேவுக்கு வழங்கப்பட்டுள்ளது .

அமைச்சுப்பதவிகள் ஏற்ற இருவரும் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோரைஅமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் ஆளும்

06

## யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் பிரதமர் அலுவலக பிரதிநிதியாக கீதநாத் நியமிப்பு



யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுவின் பிரதமர் அலுவலக பிரதிநிதியாக பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளர் கீதநாத் காசிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைய யாழ். மாவட்ட அபிவிருத்தி குழு மற்றும் பிரதேச அபிவிருத்தி குழுவில் பிரதமர் அலுவலக பிரதிநிதியாக எதிர்வரும் காலங்களில் கீதநாத் காசிலிங்கம் செயற்படுவார்.

மார்ச் மாதம் 02ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

# உக்ரைன் அணுமின் நிலையம் மீது ரஷ்யா சுற்றி வளைத்து தாக்குதல்

## உடனடியாக அணைக்காவிட்டால் பாரிய ஆபத்து என எச்சரிக்கை

உக்ரைனினுள்ள அணுமின் நிலையத்தை சுற்றிவளைத்து ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதால், அணுமின் நிலையம் தீப்பிடித்து எரிந்து வருவதாகவும், இதனை உடனடியாக அணைக்காவிட்டால், செர்னோபில் உலையை விட 10 மடங்கு அதிக பாதிப்பை ஏற்படுத்துமென்று உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா எச்சரித்துள்ளார்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, உக்ரைன் மீது கடந்த 24ஆம் திகதி முதல் ரஷ்ய இராணுவப்படை நுழைந்து தாக்குதல் நடத்தி வருகிறது. அனைத்து திசைகளிலும் ரஷ்ய இராணுவம் முன்னேறி வருவதன் விளைவாக அந்நாட்டின் தலைநகரான கீவ், மிகப்பெரிய நகரான கார்கீவ், கெர்சன், செர்னோபில் போன்ற முக்கிய நகரங்களை ரஷ்யா முழுமையாக கைப்பற்றியுள்ளது.

ரஷ்யாவின் தாக்குதலில் இராணுவ வீரர்கள் உள்பட பொது மக்கள் பலர் உயிரிழந்துள்ளனர். இதுவரை 15 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உக்ரைனை விட்டு வெளியேறியுள்ளனர்.

ரஷ்ய இராணுவம் ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான சபரோஸ்ஸியா மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் அணுமின் நிலையத்தின் ஒரு பகுதி தீப் பிடித்து எரிந்துவருகிறது. இதனை உக்ரைன் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா உறுதிப்படுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் பதிவிட்டுள்ளதாவது, சபரோஸ்ஸியா அணுமின் நிலையத்தின் மீது ரஷ்ய இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஏற்கெனவே உலையில் ஒருபகுதியில் தீப்பிடித்து எரிந்து வருகிறது. இதில் விபத்து நேரிட்டால் செர்னோபில் உலையை விட 10 மடங்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும். ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும். தீயணைப்புப் படையினருக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் அணுமின் நிலையத்திற்கு பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# தவக்கால சிந்தனை



## அன்பு, ஏற்றுக் கொள்ளலின் பிரதிபலிப்பு

இன்றைய நற்செய்தியானது கப்பர்நாகுமில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த திருத்தூதர்களாகிய பேதுரு,அந்திரேயா, யாக்கோபு, யோவான் மத்தியில் பணியாற்றிய அனைவராலும் வெறுக்கப்பட்ட வரி வசூலிப்பவராகிய மத்தேயுவின் அழைப்பினைப் பற்றியதாகும்.

மத்தேயுவின் பணியானது நாளாந்தம் பிடிக்கப்படும் மீன்களை மதிப்பீடுசெய்து அவற்றில் எவ்வளவு உரோமையருக்கு வரியாக செலுத்த வேண்டுமென்பதனைத் தீர்மானிப்பதாகும். அதனைக் கொண்டுதான் இஸ்ரவேலில் குடியேறியிருந்த உரோமைப் படை வீரர்கள் கவனித்துக் கொள்ளப்பட்டார்கள்.

இந்தநிலைமை தெரிந்திருந்தும் அக்காலத்தில் கப்பர்நாகுமில் வாழ்ந்த இயேசுகிறிஸ்து திருத்தாதர்களை அதிகம் மன உளைச்சலுக்கு உள்ளாக்கிய மத்தேயுவை தனது சமூகத்தில் ஒருவராக இணைந்து கொள்ள அழைக்கின்றார்.

சமூகத்தில் பாவியான அடையாளப்படுத்தப்பட்டவன் தங்களது வாழ்விலும் பணியிலும் ஒருவராக இணைந்து கொள்வது திருத்தூதர்களுக்கு அதிர்ச்சியளித்திருக்கும்.

மத்தேயுவின்அழைப்பானது மத்தேயுவிற்கும் திருத்தூதர்களுக்குமான மனமாற்றத்தின் அழைப்பாகும். இவ்வழைப்பானது ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கான முக்கிய அழைப்பாகும். அதன் மூலம் தன் பணியால் அனைவரையம் ஏமாற்றிய மத்தேயு தன்னை பணிக்கு அமர்த்திய அந்நிய சக்தியிடமிருந்து விடுபட்டு இயேசுவை பின்பற்ற அழைக்கப்படுகின்றார்.

இயேசுகிறிஸ்து பாவிகளைஅரவணைத்து அவர்களுடன் உணவருந்தியது போன்றுஅவர்களை நோக்கி நகர அழைக்கப்படுகின்றார்கள்.

நாம் அனைவரும் 'திருத்தூதர் சமூகத்தின்'உறுப்பினர்கள். நாமும் மத்தேயு, திருத்தூதர்கள் போன்று மனமாற்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளோம். நாம் அனைவரும் நமது பற்றுக்களையும் தப்பபிப்ராயங்களையும் துறந்து யாரையெல்லாம் 'பாவிகள்'–போதைக் குஅடிமையானவர்கள், ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், குடியேறிகள், வீதியில் வசிப்போர் என்று கருதுகின்றோமே அவர்களோடு நமது வாழ்வினையும் பணியினையும் பகிர்ந்து கொள்ள அவர்களை நமது சமூகத்திற்குள் வரவேற்போம்.

அருட்தந்தை நவாஜி...

கொவிட் சடலங்கள் அடக்கம்; புதிய சுற்றுநிருபம்

## ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் ஐக்கிய காங்கிரஸ் நன்றி தெரிவிப்பு



கொவிட்19 சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்படுமென்றும் எந்தவொரு மையவாடிகள், மயானங்களிலும் அடக்கலாமென அரசு திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிட்டுள்ளமைக்காக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சியான ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அரசுக்கும் நன்றி தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொவிட்19 தொற்றினால் மரணிப்போரின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 05 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவினால் இது தொடர்பான திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது .

கொவிட் தொற்றினால் மரணிப்போரின் உடல்கள் விடுவிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் அடக்கம் அல்லது தகனம் செய்யப்பட வேண்டுமென அதில் அறிவித்துள்ளமை மூலம் எமது கட்சியால் ஜனாதிபதி கோட்டாபயவிடம் விடுத்த கோரிக்கைக்கு கௌரவம் கிடைத்துள்ளதன் மூலம் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொண்ட முதலாவது முஸ்லிம் கட்சி என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறோம்.

கொரோனாவினால் மரணிக்கும் சடலங்களை அந்தந்த ஊர்களில் அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவரால் கடந்த 2021 நவம்பர் மாதம் 19ந்திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அநுராதபுரத்திலுள்ள ஜனாதிபதி

06

ராகமை மோதல் சம்பவம்

## அருந்திக்க குற்றமற்றவர் என ஆய்வறிக்கையில் தெரிவிப்பு

ராகமை மருத்துவ பீட விடுதி வளாகத்தில் இரண்டு மாணவ குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான அறிக்கை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி 01ஆம் திகதி இரவு ராகமை மருத்துவ பீட விடுதி வளாகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதியினால் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ரமேஷ் பத்திரன ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பான அறிக்கைகளை அவதானித்து, விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை இக்குழு தயாரித்துள்ளது.

இந்தச் சம்பவம் மருத்துவ பீடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களின் பொறுப்பற்ற செயலாக உள்ளதோடு, திட்டமிட்டோ அல்லது வேண்டுமென்றோ நடத்தப்பட்ட விடயமல்ல என கிடைத்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அவர்கள் சில செயல்களை செய்ததாக ஒப்புக்கொண்டதையடுத்து, பணம் மற்றும் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதாக அறிக்கையின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அருந்திக பெர்னாண்டோவின் மகனும் அவரது நண்பர்களையும் உடனடியாக கைது செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனத்தை பயன்படுத்தியமைக்காக, ஒழுக்காற்று நடவடிக்கை வாகனத்துக்குப் பொறுப்பான அரச நிறுவனத்திற்கும், இதனை முன்னுதாரணமாகக் கொண்டு வெளியாருக்கு

06

## நிலைபேறான அபிவிருத்திக்கு முதலீடுகள், ஒத்துழைப்புக்களையும் வரவேற்கின்றோம்

### உலக அமைப்புக்களிடம் அமைச்சர் டக்ளஸ் பகிரங்க வேண்டுகோள்

நிலைபேறான அபிவிருத்தியை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் உலக வங்கி போன்ற அமைப்புக்களிடமிருந்து வரவேற்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் ஆழ்கடல் மீன்பிடி மற்றும் நீர்வேளாண்மை துறைகளில் மேற்கொள்ளக்கூடிய நிலையான அபிவிருத்தி முகாமை தொடர்பாக உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. கொழும்பு, ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், "இலங்கையின் கடற்றொழில் மற்றும் நன்னீர், பருவகால மீன் வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை சார்ந்த வளங்களை அடையாளப்படுத்தி ஒருங்கிணைப்பதன் மூலம் நிலைபேறான பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவது

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 143.95 | 149.96 |
| கனடியன் டொலர் | 155.27 | 161.13 |
| யூரோ | 218.91 | 228.36 |
| ஜப்பான் யென் | 1.7086 | 1.7726 |
| சிங்கப்பூர் டொலர் | 145.58 | 150.30 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 214.59 | 222.18 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 534.77 | கட்டார் ரியால் | 55.31 |
| குவைத் டினார் | 665.00 | சவூதி ரியால் | 53.74 |
| ஓமான் ரியால் | 523.70 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.89 |

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 21ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 01

### குறள் தரும் சிந்தனை

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்

*அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.*

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்

போதைப்பொருள் கடத்தலையும், பாவனையையும் முற்றாக ஒழிப்பதற்கு அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அது தொடர்பான குற்றச்செயல்களை முடிவுக்குக் கொண்டு வருவதென்பது கடினமான காரியமாகவே உள்ளது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அவ்வப்போது போதைப்பொருட்கள் பொலிசாரால் கைப்பற்றப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தபடியே உள்ளன.

ஒருபுறம் பொலிசார் போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அதேசமயம் கடல்வழியாக நாட்டுக்குள் போதைப்பொருள் கடத்தப்படுவதைக் கண்காணிக்கும் கடுமையான நடவடிக்கையில் கடற்படையினர் இரவுபகலாக ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் கடத்தல்காரர்கள் பலவிதமான தந்திரங்களைக் கையாண்டு நாட்டுக்குள் போதைப்பொருளை கடத்தி வருவதற்கு முயற்சித்தபடியே உள்ளனர்.

இலங்கையில் இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் போதைப்பொருள் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வாகனங்களில் கடத்திச் செல்லப்படுகின்ற போதைவஸ்துகள் ஏராளமாக அகப்பட்டுள்ளன. அதேசமயம் கடல்வழியாக நாட்டுக்குள் கடத்தி வரப்பட்ட போதைப்பொருட்கள் பெருமளவில் அகப்பட்டுள்ளன. போதைப்பொருள் கடத்தலுக்கும், பாவனைக்கும் எதிராக இன்றைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள கடுமையான நடவடிக்கையின் காரணமாகவே போதைவஸ்துகள் அடிக்கடி கைப்பற்றப்படுகின்றன.

போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதில் கடற்படையினர் மேற்கொண்டுள்ள தீவிரமான நடவடிக்கை உண்மையிலேயே பாராட்டத்தக்கது. அவர்களது கடுமையான கண்காணிப்பின் காரணமாகவே பெருந்தொகையான போதைவஸ்துகள் கப்பல்கள் மற்றும் படகுகளில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை கைப்பற்றப்பட்டிருக்காவிடின் அத்தனை தொகை போதைப்பொருளும் நாட்டுக்குள் வந்து சேர்ந்திருக்கக் கூடும். பலரது வாழ்க்கையை அது நாசமாக்கியும் இருக்கும்.

அரசாங்கம் பதவிக்கு வந்ததும் சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. போதைப்பொருள் குற்றவாளிகள் சிலர் சிறைச்சாலைக்குள் இருந்தவாறே போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததாக அந்நாட்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இவ்வகையான குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அதன் பயனாக சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

ஆனாலும் போதைப்பொருள் கடத்தலும் பாவனையும் இன்னுமே முற்றாக ஒழிக்கப்படவில்லை. நாட்டில் ஆங்காங்கே போதைப்பொருட்கள் அகப்படுகின்றன. சிறியதொகை போதைவஸ்து என்றாலும் கூட அது ஏற்படுத்துகின்ற பாதிப்புகள் அதிகம் என்பதால், எமது நாட்டில் இருந்து போதைப்பொருள் பாவனையையும், கடத்தலையும் முற்றாகவே முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் இன்னும் தீவிரப்படுத்தப்படுவது அவசியமாகும்.

கிழக்கில் காத்தான்குடியில் போதைவஸ்து கைப்பற்றப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுள்ளன. அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்திலும் போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நாட்டின் தூரப்பிரதேசங்களில் இருந்து போதைப்பொருட்கள் கிழக்குக்கு கடத்தப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன. அப்பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனையானது பாரிய சமூக சீரழிவாக அதிகரித்து வருகின்றது.

இளவயதினர் பலர் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளமை தெரியவந்துள்ளது. அதேசமயம் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைவஸ்து வியாபாரிகள் செயற்பட்டு வருவதாக தகவல்கள் வெளிவருகின்றன. எதிர்கால தலைமுறையினரை இலக்கு வைக்கும் விதத்தில் போதைப்பொருள் வியாபாரிகள் செயற்பட்டு வருவது மிகவும் ஆபத்தானதாகும். இதனை மேலும் வளர விடாமல் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைத்து தரப்பினருக்கும் உள்ளது.

இவை ஒருபுறமிருக்க நாட்டின் வடபகுதியில் கேரள கஞ்சா கடத்தல் அதிகரித்து வருவதை சமீப கால ஊடகச் செய்திகள் புலப்படுத்துகின்றன. தென்னிந்தியாவில் இருந்து நாட்டின் வடபகுதிக்கு கடல் மார்க்கமாக கேரள கஞ்சா கடத்தி வரப்படுகின்றது. கடற்படையினரால் அடிக்கடி இக்கடத்தல் முறியடிக்கப்படுவதுடன், பெருமளவு கேரள கஞ்சா கைப்பற்றப்படுகின்றது. யாழ்குடாநாட்டுக்குள் வைத்தும் பெருமளவு கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டிருக்கின்றது. ஆனாலும் கேரள கஞ்சா கடத்தல் இன்னுமே முற்றாக கட்டுப்படுத்தப்படவில்லை.

தென்னிந்தியாவில் இருந்து வடபகுதிக்கு கடத்தி வரப்படுகின்ற கேரள கஞ்சா நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவதாக பொலிஸ் தரப்பினர் சந்தேகிக்கின்றனர். அதாவது வடபகுதியானது கேரள கஞ்சா கடத்தலின் இடைத்தங்கல் தளமாக பயன்படுத்தப்படுவதாகத் தெரிகின்றது. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் உள்ள சட்டவிரோத குழுவினர் இக்காரியத்தில் ஈடுபடுவது தெரிகின்றது.

இவை போன்ற சமூக சீர்கேடு நிறைந்த குற்றச்செயல்களை முற்றாக ஒழிப்பதற்கு பொலிசார் மற்றும் படையினரின் நடவடிக்கைகள் மாத்திரம் போதாது. பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதற்கு அதிகம் தேவை. பொதுமக்கள் வழங்குகின்ற தகவல்கள் பொலிசாருக்கு பேருதவியாக அமையும். சமூகத்தின் நலன் கருதி பொதுமக்கள் இவ்விடயத்தில் அதிக ஒத்துழைப்பு வழங்குவது அவசியம். எமது நாட்டின் சமூகத்தை சீரழிக்கும் போதைப்பொருள் ஊடுருவலுக்கு எதிராக செயற்பட வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

editor.tkn@lakehouse.lk

# ரயில் போக்குவரத்து சேவை அபிவிருத்தி; குளிரூட்டப்பட்ட ரயில் பரீட்சிப்பு

*இலங்கையின் ரயில் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்தியா வழங்கியுள்ள குளிரூட்டப்பட்ட ரயில் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரயில்வே திணைக்கள அதிகாரிகள் , கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், ஆர்.ஐ.ரி.ஈ.எஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து பயணம் செய்து இப்பரீட்சிப்பை மேற்கொண்டுள்ளனர். அதன் ஊடாக இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ள குளிரூட்டப்பட்ட ரயில் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*இலங்கையின் ரயில் சேவை உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் தண்டவாளப் பாதைகளை மேம்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் இரு தரப்பினரும் பரஸ்பரம் இணக்கம் கண்டுள்ள ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு உதவுமாறு இந்நாட்டு அரசாங்கம் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அக்கோரிக்கைக்கு அமைய இத்திட்டங்களுக்கு உதவும் வகையில் 2014 2015 இல் 318 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா கடனாக வழங்கியுள்ளது. அக்கடன் திட்டத்தின் கீழ் ரயில் தண்டவாளப் பாதைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு இணக்கம் காணப்பட்ட ஏனைய துறைகளின் அபிவிருத்தி நடவடக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கொழும்பு மாத்தறை தண்டவாளப் பாதை மேம்படுத்துப்பட்டுள்ளன. அத்தோடு, ஓமந்தை பளை, மடு தலைமன்னார், மதவாச்சி மடு, பளை காங்கேசன்துறை என்பவற்றுக்கிடையில் ரயில் பாதைகள் அமைக்கப்படுவதோடு சமிங்ஞைகளும் பொறுத்தப்படுகின்ன.*

*இக்கடன் திட்த்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள குளிரூட்டப்பட்ட ரயிலே கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் இலங்கை ரயில்வே திணைக்கள உத்தியோகத்தர்களால் உத்தியோகபூர்வமாகப் பரீட்சிக்கப்பட்டிருக்கின்றன. இப்பரீட்சிப்பு வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் அது தொடர்பான படங்களையும் ட்வீட் வெளியிட்டுள்ளது.*

*இலங்கையின் ரயில் போக்குவரத்து சேவையின் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்தும் இந்நடவடிக்கைகளின் ஊடாக இந்நாட்டு ரயில் பயணிகள் பெரிதும் நன்மைகள் அடைவர். அது எமது ரயில் பயணிகளின் வசதிகளையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதோடு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என்று ரயில்வே அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.*



# மனித வாழ்வுக்கு சவாலான நீரிழிவு; கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்

*மனிதனுடைய வாழ்வில் பெரும் தாக்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்தவல்ல தொற்றா நோய்களில் நீரிழிவு நோயும் ஒன்றாகும். இந்நோயை சலரோகம், சர்க்கரை வியாதி, மதுமேகம் என பல பெயர்களால் அழைப்பர். அத்தோடு வசதி படைத்தவர்களுக்கு அதிகமாக ஏற்படுவதனால். இதனை பணக்கார நோய் என்றும் கூறுவர். ஆனால் தற்காலத்தில் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரையும் இலகுவில் தாக்கக்கூடிய ஒரு நோயாக நீரிழிவு காணப்படுகிறது. குருதியில் சீனியின் / குளுக்கோசின் அளவு 120 mg/dl விட அதிகரிப்பதால் இந்நோய் ஏற்படுகின்றது. இது சர்வதேச அளவில் பாரிய பிரச்சனையை ஏற்படுத்தக்கூடிய வகையில் அதிகரித்துவருகிறது.*



*உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகள் படி, உலகளவில் கிட்டத்தட்ட 422 மில்லியன் மக்கள் இந்நோயுடன் வாழ்வதாகக் கூறப்படுகின்றது. சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் புள்ளி விபரங்களின் படி, இலங்கையில் வளர்ந்தவர்களில் 12 பேரில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருப்பதுடன் மொத்தமாக 1.16 மில்லியன் மக்கள் நீரிழிவு நோய்க்கு உட்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.*

*பொதுவாக வெள்ளைச்சீனி, செயற்கை இனிப்புக்கள், அதிகளவு மாப்பொருள் சேர்ந்த உணவுகள், நார்ச்சத்து அற்ற உணவுகள், இயற்கையான உணவுகளைத் தவிர்த்து சமைத்த உணவுகளை அதிகளவில் உள்ளெடுத்தல், அளவுக்கு அதிகமாக உணவுகளை உண்ணல், உடற்பயிற்சி செய்யாமை, அதிக வேலை, தொடர்ச்சியான உடல் உழைப்பு போன்றன காரணங்களாக கருதப்பட்டாலும் பிரதானமாக பரம்பரை மற்றும் உளத்தாக்கம் போன்றன இந்நோயை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.*

*தற்காலத்தில் உளத்தாக்கங்கள் அதிகளவு மக்களிடையே காணப்படுவதால் இளநரை, இரத்தக் கொதிப்பு, வயிற்றுப் புண், சலரோகம், கொலஸ்திரோல், மாரடைப்பு போன்ற நோய்களால் பீடிக்கப்படும் அளவும் அதிகரித்து செல்கின்றது.*

*சலரோகம் முற்றினால் கண்பார்வை பாதிக்கும், சிறுநீரகம் பழுதடையும். இருதய பாதிப்புக்கள் ஏற்படும். நரம்புத் தாக்கம், பாரிசவாதம் போன்றனவும், நீண்ட நாள் மாறாத புண்கள் போன்றனவும் ஏற்பட வாய்ப்பு உண்டு.*

*நீரிழிவு நோயானது பரம்பரை மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை பொறுத்து ஏற்படலாம். இந்நோயைப் பூரணமாக குணப்படுத்த முடியாது. ஆனால் மருந்து, மாத்திரை, ஊசி அளவுகளை குறைத்து இயற்கை வழியில் இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் இந்நோயால் ஏற்படக்கூடிய உபத்திரங்களை தவிர்த்து நீண்ட நாட்கள் ஆரோக்கியமுடன் இயற்கையுடன் இசைந்த நல் வாழ்வு வாழலாம்.*

*இதற்காக ஒவ்வொருவரும் முதலில் தம்மைத் தாமே பாதுகாக்க முடிவு எடுக்க வேண்டும். நோய் வருமுன் காத்தலே சிறப்பு. ஆனாலும் நோயின் அறிகுறிகள் இல்லாமலே பலர் இந்நோயால் பாதிக்கப்பட்டு காணப்படுகின்றனர். ஆகவே 40 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் ஆண்டுக்கு மூன்று முறையாவது மருத்துவப் பரிசோதனைகள் செய்தல் அவசியம். இந்நோயின் அறிகுறிகளான உடல் அதிகளவில் மெலிந்து செல்தல், அதிகளவு சிறுநீர் கழிதல், இரவில் அதிகமாக சிறுநீர் கழிதல், தாகம், பசியின்மை, உடல் சோர்வு, களைப்பு, கை கால்களின் விறைப்பு, தலைச்சுற்றல், வாய்ப்புண் அடிக்கடி ஏற்படுதல், கண் பார்வை மங்குதல், மலச்சிக்கல் போன்றன பற்றி தெளிவாக அறிந்திருத்தல் வேண்டும்.*

*சலரோக நோயாளிகள் முக்கியமாக மலச்சிக்கல் ஏற்படாமல் கவனம் எடுக்க வேண்டும். தினமும் மலங்கழிப்பதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். நார்த் தன்மையான உணவுகள், நீர், பழங்கள் போன்றவற்றை உள்ளெடுப்பதன் மூலம் மலச்சிக்கல் ஏற்படாமல் பேணலாம்.*

*மேலும் இந்நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இயன்றளவு நாட்களில் இடையிடையே 'உண்ணா நோன்பு' மேற்கொள்ளலாம். 'உண்ணா நோன்பே உயரிய மருந்து' இதுவே ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையாத விடயமாகும். ஏனெனில் நாம் அதிகமாக உணவுகளை முழுவதும் சமைத்து உட்கொண்டு வாழ்பவர்களாக இருக்கின்றோம். இயற்கை உணவுகளை மாத்திரம் உட்கொண்டு வந்தால் எவ்விதமான நோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. எனவே இடையிடையே உண்ணா நோன்பு இருப்பதன் மூலம் உடலில் உண்டான நச்சுக்களை விரைவில் வெளியேற்றுவது இலகுவாகலாம். இதன் காரணமாகவே நம் முன்னோர் ஒவ்வொரு மாதத்திலும் சஷ்டி, கிருத்திகை, அமாவாசை, பௌர்ணமி, ஏகதாசி போன்ற நாட்களில் நோன்புகளை அறிமுகப்படுத்தி எமது உடலும் உள்ளமும் புனிதம் பெறவும், நோய்களிலின்றி ஆரோக்கியமாக வாழவும் வழியமைத்து தந்திருக்கிறார்கள்.*

*அதனால் நீரிழிவைத் தவிர்த்துக் கொள்வதிலும் அதற்கு சிகிச்சை பெற்று கட்டுப்படுத்திக் கொள்வதிலும ; கவனம் செலுத்துவது அவசியம். இவற்றுக்கு உணவுமுறை, உடற்பயிற்சி, நோயின் தீவிரத்தன்மையை சரிவர கவனித்து அதற்குரிய மருந்துகளை உள்ளெடுத்தல், இன்சுலினைப் பயன்படுத்தல் போன்றன இன்றியமையாதவையாக விளங்ககுகின்றன.*

*இந்த வகையில் இந் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க பின்வரும் உணவுப் பழக்க வழக்கங்களை கையாளலாம்.*

- *அதிகாலையில் 4.30 – 5.00 மணி எழுந்ததும் வெறுவயிற்றில் 3 கோப்பை தூய நீரை அருந்துதல். அதிகமாக நீரை அருந்துவதன் மூலம் நீரிழிவு நோயை எதிர்த்து போராடலாம். மாவிலைகளுக்கு இன்சுலின் ஓமோனை அதிகரிக்கும் தன்மை இருப்பதால் 34 மாவிலைகளை நீரில் கொதிக்க வைத்து அருந்தி வரலாம். ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை 100 மி.லீ. நீரில் முதல் நாளிரவு ஊறவைத்து மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் உண்ணலாம்.*
- *காப்பி, ரீ, தேநீர் இற்கு பதிலாக 6 மணி காலையில் அறுகம்புல் சாறு, ஆவாரம் பூச்சாறு, நெல்லிக்காய் சாறு, வாழைத் தண்டுச்சாறு, வாழைப்பூச் சாறு, எலுமிச்சைசாறு, மாந்தளிர் இலைச்சாறு, வில்வ இலைச்சாறு, வல்லாரை இலைச்சாறு, கறிவேப்பிலைச்சாறு ஏதேனும் ஒன்றின் சாற்றை ஒரு கோப்பை படி அருந்தி வரலாம். தேநீருக்கு பதிலாக நாவல் கொட்டை பொடி அல்லது ஆவாரம் பூ பொடி பயன்படுத்தி தேநீராக அருந்ததலாம். மல்லி நேநீர் அருந்தலாம்.*
- *மூன்று மணிநேரத்தின் பின்னர் 9 மணியளவில் காலையுணவாக கடலை அல்லது தானிய வகைகளான பாசிப் பயறு, கொண்டைக் கடலை, வேர்க் கடலை, பட்டாணி, கம்பு, கௌப்பி, வரகு போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை நீரில் ஊற வைத்து முளை வந்த பின்னர் சிறிதளவு தேங்காய்ப்பூ சேர்த்து உண்ணலாம் அல்லது கம்பு, வரகு, கோதுமை, உழுந்து, சாமை போன்ற தானியங்களை மாவாக்கி கூழ், களி, பிட்டு, இடியாப்பம் போன்றவற்றை தயாரித்து உண்ணலாம்.*
- *காலை 11 மணிக்கு முன்னராக மரக்கறி சூப் அருந்தலாம். சர்க்கரை சேர்க்காத திராட்சைப் பழச்சாறு அல்லது ஆரஞ்சுசாறுடன் தேன் கலந்து அருந்தி வரலாம். நாவற்பழக் கொட்டைச்சாறு அருந்துதலும் சிறப்பு. வேகவைத்த வாழைக்காயுடன் பாகற்காய் ரசம் சேர்த்தும் அருந்தலாம்.*
- *மதியம் 1 மணியளவில் பசுமையான காய்கறிகளால் சலாட் செய்து உண்ணலாம். அவலை பயன்படுத்தி உப்புமா அல்லது ரொட்டி செய்து உண்ணலாம் அல்லது தவிட்டரிசி, கம்பு, கோதுமை, சாமை, வரகு அரிசியை சோறாக்கி அதனுடன் பருப்புக்கள், வெந்தய கீரை, அரைக்கீரை, ஆரைக்கீரை, முளைக் கீரை, கங்கூன் போன்ற கீரை வகைகள் மற்றும் மரக்கறிகளில் பாவற்காய், கத்தரி, சோயா, பருப்பு, கோவா, பயற்றங்காய், போஞ்சி, வெண்டிக்காய், முருங்கைக்காய் சேர்த்து உண்ணலாம்.*
- *மாலை 4 மணியில் மூலிகைத் தேநீர், காரட் சாறு, உப்பு, மிளகு கலந்த தக்காளி பழச்சாறு, மல்லிநீர் ஏதாவது அருந்தலாம்.*
- *இரவு 7 மணிக்கு பப்பாளிப்பழம், திராட்சைப்பழம், நாவற்பழம், தர்பூசணிப்பழம் ஆகிய பழங்களில் ஒன்றிரண்டு வகையான பழங்களை தேவையான அளவு உண்ணலாம்.*
- *கொழுப்பு நீக்கிய பால், தாவர எண்ணெய்களை பயன்படுத்துதல் சிறப்பு.*
- *கொழுப்பு அதிகமான இறைச்சி, மீன், வெண்ணெய் நெய், பொரித்த உணவுகள், மற்றும் சீனிச்சத்து நிறைந்த உணவுகளான வெல்லம், ஜாம், கேக், ஐஸ் கிறீம், சாக்லேட்டு போன்றவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.*
- *நாள்தோறும் 7 பேரீச்சம் பழத்துடன் 10 கருவேப்பிலை சேர்த்து சாப்பிட்டு வரலாம்.*
- *காலையில் 5-8 துளசி இலைகளை வெறும் வயிற்றில் உண்டு வரலாம்.*
- *கொய்யாவில் அதிகளவு நார்ச்சத்து காணப்படுவதால் கொய்யாவை காயாக தோலை நீக்கி உண்ணலாம்.*
- *காலையில் 15 நிமிடங்கள் பிராணாயாமம் செய்து வரல் சிறப்பு. பிராணாயாமம் மற்றும் தியானம் சரிவர தவறாமல் செய்வதன் மூலம் இன்சுலினின் செயல்பாட்டை தடுக்கும் அட்ரினலின் போன்ற ஓமோன்களின் அளவு குறைவதனால் நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். மன அழுத்தம் குறைந்து மனஅமைதி ஏற்படும்.*
- *நாள் தோறும் சூரிய ஒளிக்குளியல் 30 நிமிடங்கள் செய்யலாம் அல்லது 20 நிமிடங்கள் இடுப்புக் குளியல் எடுக்கலாம்.*

*அனைவரும் தத்தமது உடல்நிலை, வயது மற்றும் காலநிலைகளுக்கு ஏற்றவாறு தமது உணவுப் பழக்கவழக்கங்களை அமைத்துக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதே மிகமிக அவசியமான விடயமாகும்.*



வைத்திய கலாநிதி (செல்வி)
**வினோதா சண்முகராஜா...**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*சித்த மருத்துவ அலகு,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கலாநிதி. (திருமதி)
**கௌரி ராஜ்குமார்...**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*தாவரவியல் துறை, விஞ்ஞானபீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

## "காதலர்கள் அகலக் கல்லென்றவே"

# நாட்டுப்புறப் பாடல்களில் நயம் ததும்பும் காதல் இரசனை



இலக்கியங்கள் காதலுக்கு முன்னுரிமையளித்து அதனை மனிதவாழ்வின் முக்கியமானதாக வலியுறுத்தியும் கூறியுள்ளன. காதலைச் சொல்லாதே இலக்கியப் படைப்புகளே இல்லை எனக் கூறலாம்.

அன்று தொடக்கம் இன்று வரை காதலின் மகத்துவம் பேணப்பட்டே வருகின்றது.

ஆணும் பெண்ணும் மனதால் ஒன்றுபடுவதே காதல். அடியவர் ஆண்டவனிடத்தில் கொள்வதும், அன்னை மகனிடத்தில் காட்டுவதும், நண்பன் இன்னொரு நண்பனிடத்தில் செலுத்துவதும், கணவன் மனைவியிடத்தில் வைப்பதும், மனைவி கணவனிடத்தில் கொள்வதும் காதல்தான்.



காதல் என்பதற்கு அன்பு என்பது பொருள். தற்போது இக்காதல் என்னும் சொல் ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் தோன்றும் நட்பினையே குறிக்கின்ற அளவிற்குத் தன் பொருள் வளம் குறைந்து சுருங்கிவிட்டது.

மனித சமூகத்தின் ஆணிவேரான காதல் குறித்து பாரதி தனது குயில் பாட்டில்

"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்"

என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் ஏழு திணைகளிலும் காதலைப் பற்றி இலக்கணம் வகுத்திருக்கிறார். தெய்வப்புலவர் திருவள்ளுவரோ திருக்குறளில் 25 அதிகாரங்கள் வாயிலாக காதல் உணர்வை மென்மையாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

"மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படுவார்" (காமத்துப்பால் 1289)

என்று காதலை மலரினும் மெல்லியதாகக் கூறியிருக்கிறார். இப்படி தொல்காப்பியம் தொடங்கி இன்றைக்கு இலக்கிய உலகில் உலா வரும் இக்கால இலக்கியம் வரை காதலைப் பாடாத இலக்கியம் எதுவும் இல்லை என்று துணிந்து கூறலாம். இத்தகைய காதல் உணர்வுகளை ஏட்டிலக்கியங்கள் வெளிப்படுத்துவதற்கு முன்னரே நாட்டுப்புற மக்கள் தங்களின் பாடல்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் ஏட்டிலக்கியக்கியக் கவிஞர்கள் தங்கள் படைப்புக்களை அமைத்திருக்கின்றனர் என்றால் அது மிகையாகாது. அதிலும் குறிப்பாகச் சங்க இலக்கியங்களில் இத்தகைய நாட்டுப்புறக்காதல் உணர்வுகள் மிகுதியாகக் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

பஞ்ச காலத்தில் வேலை தேடித் தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்குச் சென்றான் காதலன். மழை பெய்து பயிர் செய்யும் காலம் வந்ததும் திரும்புகிறேன் என்று சொல்லிச் சென்றான். மழை வந்தது. புஞ்சைக் காட்டு வேலைகளும் தொடங்கிவிட்டன. காதலனை இன்னும் காணவில்லை. காதலியோ அவனது வாக்குறுதியை எண்ணி வருந்துகிறாள். இதை,

"கழுகு மலைக் குருவி குளம்
கண்டெடுத்தேன் குண்டு முத்து
குண்டுமுத்தைக காணாமல்
சுண்டுதனே கண்ணீரை
வேப்பம்பூ புராதோ
விடிந்தால் மலராதோ
நேற்று வந்த நேசருக்கு
நேரம் தெரியாதோ!
வேம்பு தளுக்காதோ
வீசுங் கொம்பு ஓடாதோ
வீசுங் கொம்பு மேலிருந்து
வெள்ளை தெரியாதோ
எலுமிச்சம் பழம் போல
இருபேரும் ஒரு வயது
யாரு செய்த தீவினையோ
ஆளுக்கொரு தேசமானோம்" (தமிழர் நாட்டுப்பாடல்கள் பக் 151152)

என்ற நாட்டுப்புறக்காதல் பாடல் வாயிலாகத் தன் மன உணர்வுகளைக் காதலி வெளிப்படுத்துகிறாள். இதே கருத்தினைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் ஒன்று விளக்குவதைக் காணலாம்.பிரிந்த தலைவன் மீண்டு வருவதாகச் சொல்லிச் சென்ற இளவேனிற் பருவமும்; வந்துவிட, தலைவன் வராதது கண்டு தலைவி வருந்திக் கூறுவதாக அமையும்; பாடல்.

"கருங் கால் வேம்பின் ஒண் பூ யாணர்
என்னை இன்றியும் கழிவதுகொல்லோ
ஆற்று அயல் எழுந்த வெண் கோட்டு அதவத்து
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென்றவே"
(குறுந்தொகை 24)

நாட்டுப்புறத்தில் வாய்வழியாகப் பாடப்படும் பாடல்களின் அடிப்படையிலேயே ஏட்டிலக்கியப் பாடல்களும் அமைந்திருக்கின்றன.

(ஸ)

## ஆங்கில சிறுகதைகளுடன் ஒப்பிடுகையில்

# தமிழ்சிறுகதைகள் மேலும் மெருகூட்டப்பட வேண்டும்

## குரு சதாசிவத்தின் 'வடக்கு வீதியிலே' நூல் தொடர்பில் விமர்சகர் மு.தயாளன்

(முன்னைய தொடர்)

மாற்றங்களின் அடிப்படையிலே தான் இந்த நான்கு கதைகளையும் நான் நோக்கினேன். ஆரம்ப காலத்திலே முதல் முதல் சிறுகதைகள் எழுதப்பட்ட போது, தொடக்கம் நடுவிலே சற்று விளக்கம் பின்பு முடிவு. இவற்றை கிளாசிக் ஸ்டோரி என சொல்லப்பட்டது.

ஜெயகாந்தன் சிலதை மாற்றி எழுதினார். சுஜாதா அதைவிட இன்னும் மாற்றத்தைக் கொண்டு வந்தார். குரு சதாசிவம் இன்னுமொரு பாணியிலே அதனை எழுதியிருக்கின்றார். சிறுகதைகள் எப்படி மாற்றம் அடைந்து கொண்டு போகின்றன என்பதை இதனுடாகப் பார்க்க முடிகின்றது.



திருப்பம் என்று ஒன்று இருக்கிறது. ஆரம்ப காலத்திலே புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் போன்றவர்களது கதைகள் வாசகன் அந்த கதைகளோடு பயணித்துக் கொண்டு வந்து முடிவிலே வாசகன் நினைக்கின்றான் இதுதான் நடக்கப் போகின்றது என்று நினைக்கையில் எழுத்தாளர் வேறு ஒரு முடிவை கொடுத்திருப்பார். அது சிறுகதையுடைய ஒரு அம்சமாக குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்தது.

புதுமைப்பித்தனின் கதையாக இருக்கட்டும் அல்லது ஜெயகாந்தனின் கதையாக இருக்கட்டும் முடிவிலே திருப்பம் ஒன்றை வைப்பார்கள். பின்பு அது அற்றுப் போகிறது.

சிறுகதைகள் பழசாகிக் கொண்டு போகின்ற போது இந்த திருப்பமே முதலில் வரத் தொடங்கிவிட்டது. வாசக பயணம் வாசக இடைவெளியாக மாறிவிட்டது.முந்தின கதைகளிலே வாசகன் கதையோடு பயணித்துக் கொண்டு வந்தான். இப்போது அது வாசக இடைவெளியாக மாறிவிட்டது.

இந்த வாசக இடைவெளியானது கதை எங்கே முடிக்கப்படுவதாக எழுத்தாளர் நினைக்கிறாரோ அங்கிருந்து ஆரம்பிக்கத் தொடங்குகின்றன.

முடிவை முன்னுக்குக் கொடுக்கப்பட்ட மாதிரி கதை வருகிறது.

அவ்வாறு அந்த முடிவு அங்கே கொடுக்கப்பட்ட உடனே வாசகனுக்கு ஒரு இடைவெளி ஏற்படுகிறது. எதை நோக்கி அந்தக் கதை போகப் போகின்றது என அவன் சந்தேகிக்கின்றான்.

வடக்கு வீதியிலே கதை இடையிலே தான் தொடங்குகின்றது. அந்தக்கதை கோவிலைப் பற்றி சொன்னதும் கோவில் வீதியைப் பற்றிச் சொன்னதும் மற்றும் நடந்த விடயங்கள் பற்றி சொல்ல வருவது எதுவும் கதையோடு ஒன்றவில்லை என்பதை குறிப்பிட வேண்டும். கதை இடையில் இருந்து தொடங்கி அழகாக முடிகிறது. இது நூலாசிரியரின் எழுத்துக்கள் மீதான பலவீனமாகவே நான் கருதுகிறேன்.

நூலாசிரியருக்கு நான் ஆலோசனைகள் வழங்கிய போதுபக்கங்களை அதிகரிக்காமல் சிறுகதைகளை சுருக்கி எழுதுமாறு ஆலோசனை வழங்கியிருந்தேன்.

இவரது சிறுகதைகள் குறுநாவல் போன்று நீண்டு செல்கின்றன. ஒரு கட்டத்தில் தான் ஒரு திருப்பத்துடன் அது சிறுகதையாக மாறுகிறது. சிறுகதைக்குரிய அமைப்பு நீண்டு செல்லக்கூடாது. முடிந்தளவு சுருக்கமாகக் சொல்ல வேண்டியதை சொல்ல வேண்டும். அதிகமானதை சொல்ல முற்படும் போது அந்தக் கதையின் அமைப்பே மாறுபடுவதற்கும் இடமுண்டு.

நான் பலவிதமான சிறுகதைகளை வாசிக்கின்றவன் என்பதால் ஒவ்வொரு சிறுகதை ஆசிரியர்களும் அதனை பல்வேறு விதமாக எழுதுவதைக் காணமுடிகிறது. அப்போது அவற்றிலுள்ள பிரச்சினைகளை நான் ஆராய்ந்து பார்ப்பதுண்டு. ஆங்கில சிறுகதைகளையும் நான் வாசிக்கின்றேன். அதனைப் பார்க்கும் போது எமது சிறுகதைகள் இன்னும் மெருகூட்டப்பட வேண்டியதைக் குறிப்பிட வேண்டும்.

பெரும் ஆற்றல்களையும் திறமைகளையும் கொண்டுள்ள இந்த நூலாசிரியர் குரு சதாசிவம். நான் வாசித்த அவரின் கதைகளில்' நிஜத்தின் நிழல்' எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதை நான் மீண்டும் ஒரு தடவை வாசிக்கவுள்ளேன்.

குருசதாசிவம் அருமையான கதைகளை தரக்கூடிய நண்பர். சில விடயங்களை அவர் கவனத்திற்கொண்டு கதைகளை படைப்பாரானால் இலக்கிய உலகத்திற்கு அவர் பெரும் பங்களிப்பை வழங்குவதுடன் அவரும் ஒரு சாதனையாளராக முன்னேற முடியும்.

தொகுப்பு:
லோரன்ஸ் செல்வநாயகம்...

## கலைக் கதம்பம்

சைத்திரியன்



## நிற்கட்டுமா – போகட்டுமா?

செக்கச் சிவந்திருப்பாள் குட்டி
..செட்டிமகள் போலிருப்பாள்
வாரி முடிஞ்சிருப்பாள் குட்டி
...வந்திருப்பாள் சந்தைக்கடை

சந்தையிலே மருக்கொழுந்து குட்டி
... சரசமாத்தான் விற்குதடி!
கையிலொரு காசுமில்லைகுட்டி
... கடன்கொடுப்பார் யாருமில்லை!

வட்டவட்டப் பாறையிலே குட்டி
... வரகரிசி தீட்டையிலே
ஆர்கொடுத்த சாயச்சீலை குட்டி
... ஆலவட்டம் போடுதடி!

மஞ்சள் புடவைக்காரி குட்டி
... மாதுளம்பூக் கூடைக்காரி!
மஞ்சள் புடவையிலேகுட்டி
... மருக்கொழுந்து வீசுதடி!

கானக் கரிசலிலே
... களையெடுக்கும் பெண்மயிலே!
நீலக் கருங்குயிலே!
... நிற்கட்டுமா போகட்டுமா?

இனியவன்

## வலம்புரி கவிதா வட்டத்தின் கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 77வது கவியரங்கு கவிஞர் கம்மல்துறை இக்பால் தலைமையில் அண்மையில் போருத் தொட்டவில் நடைபெற்றது. பலகத்துறை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் கவிஞர் யூ.எம். தாஸ் அரங்கில் நடைபெற்ற இந்த கவியரங்கில் பிரதம அதிதியாக சிரேஷ்ட பத்திரிகையாளர் எம். ஜே.எம். தாஜுதீன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வகவ செயலாளர் கவிஞர் முர்சுதீன் பொருளாளர் கவிஞர் ஈழ கணேஷ் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஸ)

## கொடகே சாகித்திய விருது படைப்புக்கள் கோரல்

2021 ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை நூல்களில் சிறந்தவை தெரிவு செய்யப்பட்டுக் கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது. சிங்கள தமிழ் மொழிகளில் இன ஐக்கியத்தையும், இனங்களிடையே நல்லுறவை கௌரவிக்கும் முகமாக 2021ஆம் ஆண்டு வெளிவந்த சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட நூல் ஒன்றுக்கும் இன ஐக்கியத்திற்கான மொழிபெயர்ப்பு நூலுக்கான கொடகே தேசியச் சாகித்திய விருது வழங்கப்படும்.அதன் மூலநூல் இலங்கையில் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.நாவல், சிறுகதை, கவிதை ஆகிய துறையில் தன் முதல் நூல் வெளியிட்ட சிறந்த படைப்பாளி ஒருவருக்குக் கொடகே தேசிய சாகித்திய விருதுக்கான பணப்பரிசிலும், சான்றிதழும் விருதும் வழங்கப்படும்.அத்தோடு தமிழ் கலை இலக்கியத்திற்குப் பணியாற்றிய படைப்பாளி ஒருவருக்கு கொடகே வாழ்நாள் சாதனை விருதும் வழங்கப்படவுள்ளது.

அனுப்பப்படும் நூல்கள் முதல் பதிப்பாக இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN பெற்றுக் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும்.பரிசீலனைக்கு நூலின் மூன்று பிரதிகள் இம் மாதம் 31ஆந் திகதிக்கு முன்னதாக இந்த விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

661,651, 675, பீ. டீ.எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு10.
தொடர்புகளுக்கு மேமன்கவி 0778581464 (ஸ)

# விதுர விக்கிரமநாயக்க, பிரேமநாத் தொலவத்த ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

## இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொதுஜன பெரமுனவின் ஒழுக்க விதிகளை மீறி 'சரியான பாதை' என்ற மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் தொலவத்த மற்றும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு தீர்மானம் எடுப்பது அவசியமென கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பொதுஜன பெரமுன கட்சியானது தனியான அரசியல் கட்சியாக வினைத்திறன் மற்றும் தனித்துவத்தை தக்கவைத்துக்கொண்டுள்ள கட்சியாகும்.

இத்தகைய நிலையில் வேறு ஒரு கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் தொலவத்த மற்றும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகியோருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அது தொடர்பில் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் கலந்துரையாடி தீர்மானமொன்றை மேற்கொள்வர் என்றும் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா.மனித உரிமைப்பேரவையில் ...

முன்வைப்பாரென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறும் என்பதுடன் மிச்சேல் பச்லேட் இலங்கை தொடர்பான அறிக்கையை முன்வைத்ததன் பின்னர் பதிலளிக்கவேண்டிய நாடு என்ற வகையில் இலங்கை தூதுக்குழுவின் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் உரையாற்றுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், சீனா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் இலங்கை தொடர்பான விவாத்தில் பங்கேற்று உரையாற்றவுள்ளதாகவும் அதேபோன்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு என்பவனவற்றின் பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுவர் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

## நிலையான வைப்பு வசதி, ...

பொருளதார நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்கொள்ள நேரும் தடைகளை களையும் வகையில் மத்திய வங்கி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது

மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீத மட்டம் நூறு அலகாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதேவேளை வட்டி வீதத்தை செயற்படுத்துவது தொடர்பிலான ஆலோசனைகள் விரைவில் வெளியிடப்படும் என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடன் அட்டை மூலம் பெற்றுக் கொள்ளப்படும் வட்டி நூற்றுக்கு 20 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் எரிபொருள் விலை மற்றும் மின்சார கட்டணங்களை அதிகரிப்பதற்கும் மத்திய வங்கி அரசாங்கத்திடம் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.(ஸ)

## அரசின் வேலைத் திட்டங்களை...

அமைச்சர்களான விமல் வீரவன்சவும் உதய கம்மன்பிலவும் அரசாங்கத்திற்கு சரியான பாதையைக் காட்டுவதற்காகவே சரியான பாதை என்ற யோசனையை முன்வைத்ததற்காக மேற்படி மாநாட்டை கூட்டியதாக தெரிவித்துள்ளனர். கூறியது எவ்வாறெனினும் அங்கு யோசனைகளை முன்வைப்பதற்கு மாறாக அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களையும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களையும் விமர்சித்தமையே இடம்பெற்றுள்ளது. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியுற்ற வேளையில் அவர் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்காக மேற்படி தரப்பினர் பெரும் பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர். நானும் அப்பொது அவர்களுக்கு நெருக்கமாக செயற்பட்டவன். பொதுஜன பெரமுன கட்சியை உருவாக்கி அனைவரும் ஒன்றிணைந்து மூன்றிலிரண்டு பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்கமுடிந்துள்ளது. அதற்கான கௌரவத்தை நாம் எப்போதும் அவர்களுக்கு வழங்கியுள்ளோம்.

அதேவேளை, அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவி வகித்துக் கொண்டுஅரசாங்கத்தைதாக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஜனாதிபதி இந்த தீர்மானத்தை கொள்கை ரீதியாகவே மேற்கொண்டுள்ளார். அதைவிடுத்து அவர், தனிப்பட்ட ரீதியில் மேற்கொண்ட தீர்மானமல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## யுகதனவி வழக்கு விசாரணை ...

எல்லே குணவன்ச தேரர். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, ஜேவிபி எம்பி சுனில் ஹந்துன்நெத்தி, வசந்த சமரசிங்க உள்ளிட்ட தொழிற்சங்க தரப்பினரும் மேற்படி மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அதற்கிணங்க யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்கினை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தினை செல்லுபடியற்ற தாக்குமாறு அவர்கள் நீதிமன்றத்தை கோரியிருந்தனர்.

மேற்படி மனுக்களில் பிரதிவாதிகளாக பிரதர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள், வெஸ்ட் கோஸ்ட் பவர் தனியார் நிறுவனம், அந்த நிறுவனத்தின் பங்குகள் வழங்கப்பட்ட அமெரிக்க நிறுவனமான நியூ போட்ரஸ் எனர்ஜி மற்றும் சட்டமா அதிபரும் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.(ஸ)

## தொடர்ச்சியாக வழங்குவதற்கு...

பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பிலும் எரிபொருள் தட்டுப்பாட்டை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்.

அரசாங்கத்தின் அமைச்சராக பதவி வகித்துக் கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு முரணாக செயற்பட முடியாது. தொடர்ச்சியாக எரிபொருளை கொள்வனவு செய்ய முடியுமென்ற நம்பிக்கையுடன் செயற்பட வேண்டுமே தவிர இன்னும் மூன்று தினங்களுக்குத்தான் எரிபொருள் கையிருப்பு உள்ளது என்று அமைச்சர் ஒருவர் கூறுவது மக்களை அதைரியப்படுத்தும் செயலாகும்.

அமைச்சர் என்ற வகையில் அரசாங்கத்தோடு இணைந்து செய்ய வேண்டிய நடவடிக்கைகள் உள்ளன. அதனை முறையாக முன்னெடுப்பது முக்கியம்.

புதிய அமைச்சராக பதவியேற்ற நான் மக்கள் முன் இன்னும் 03 நாட்களுக்கே எரிபொருள் உள்ளதென கூறினால் உடனடியாக நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும். அவ்வாறான கருத்துக்களை முன்வைப்பதற்கு நான் ஒருபோதும் தயாரில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.(ஸ)

## அருந்திக்க பெர்னாண்டோ...

மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தும் இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் இவ்வாறு நேற்று சத்தியபிரமாணம் செய்து கொண்டார்.

ராகமை மருத்துவ பீடத்தின் சில மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமைதொடர்பில், விசாரணைகள் நிறைவடையும் வரையில் அருந்திக்க பெர்ணான்டோ இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

எனினும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் பரிந்துரையின் படி சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ எந்தவிதமான தலையீட்டையும் செய்யவில்லையென்றும் சட்டத்தை பாரபட்சமின்றி அமுல்படுத்தவும் அவர் வழிவகை செய்துள்ளாரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ குற்றமற்றவரென முடிவு செய்வதாகவும் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் மீண்டும் இராஜாங்க அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

## விமல், கம்மன்பிலவுடன்...

மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

அரசாங்கம் ஆட்டம் காண்கிறது. வரலாறு முழுக்க தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் கக்கிய முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இன்னமும் பலர் வெளியேற்றப்பட உள்ளனர். இந்நிலையில் வழமைபோல் புதிய கூட்டணிகள். புதிய நகர்வுகள் நிகழ்கின்றன.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் பற்றிய கருத்துகள் எதிர்க்கட்சி தலைவர் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் ஆகியோர் மத்தியில் நேற்று நடைபெற்ற உரையாடலின் போது, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் ஒருபோதும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணியாக சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் கணேசனிடம் தெரிவித்துள்ளார்.

இவர்களை தேர்தலுக்கு, முன்னரோ, பின்னரோ இணைத்துக்கொள்ள மாட்டேன் என சஜித் பிரேமதாச எம்பி தன்னிடம் கூறியதாக மனோ எம்பி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

அரசிலிருந்து வெளியேறும், வெளியேற்றப்படும் வேறு சிலருக்கு இங்கே இடம் இருக்கலாம். ஆனால், நிச்சயமாக இத்தகைய இனவாதிகளுக்கு இடமிருக்க முடியாது. இடம் தந்து மீண்டும் ஒருமுறை இன்னொரு சுற்றுவட்டம் போக முடியாது. அதை எமது தமிழ், முஸ்லிம் மக்கள் தாங்க மாட்டார்கள்.

இன்று தேசிய சூழல், சர்வதேச சூழல் ஆகியவை பொருந்தி வருகின்றன. அவற்றை மீண்டும் பாழடிக்க இந்த இனவாதிகளுக்கு இடமளிக்க முடியாது. அத்தகைய எந்தவொரு முயற்சியையும் நான், முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து எதிர்ப்பேன் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமைகள் பேரவையின் ...

நெரின் புள்ளே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இணைந்திருந்தனர்.

## திலும், சி.பி. ரத்நாயக்கவுக்கு...

இராஜாங்க அமைச்சராக விமல வீர திஸாநாயக்கவும் தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறை பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப் படுத்தல் இராஜாங்க அமைச்சராக அருந்திக பெர்னாண்டோவும் நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தும் கலந்துகொண்டார்.

## மின்சார சபை, இ.போ.ச., ரயில்வேக்கு...

கப்பலிலிருந்து எரிபொருளை இறக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின. கப்பலிலிருந்து இறக்கப்படும் எரிபொருளை முத்துராஜவெலயிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய தொகுதியில் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அந்த 37,300 மெற்றிக் தொன் எரிபொருளை இறக்குவதற்கு நான்கு நாட்கள் செல்லும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மேலும் 37,300 மெற்றிக்தொன் எரிபொருளுடன் கப்பலொன்று நேற்று மாலை நாட்டுக்கு வரவிருந்தது. அந்த கப்பலிலிருந்து எரிபொருளை இறக்குவதற்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தக் கப்பலில் 28,300 மெற்றிக் தொன் டீசலும், 9,000 மெற்றிக் தொன் விமானங்களுக்கான எரிபொருளும் உள்ளடங்குவதாக தெரிவித்த அவர், அந்த எரிபொருள் மாதிரிகள் நேற்று மாலையே பரிசோதனைக்கு உட்படுத்தப்படவிருந்ததாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக நேற்றைய தினமும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்ததைக் காணமுடிந்தது. போதிய எரிபொருள் இல்லாமை காரணமாக மின் துண்டிப்பு செயற்பாடுகள் நேற்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## லொக்குகே, பவித்ரா,... 

03ஆம் பக்கத் தொடர்

கட்சி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. அதன் போதே அவர்கள் ஜனாதிபதியிடம் மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

அமைச்சர்கள் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதால், அவர்களோடு முன்னோக்கி பயணிக்க முடியாதென்ற கூற்றையும் அமைச்சர்கள் அதன்போது முன்வைத்துள்ளனர்.

அந்தக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, சரத் வீரசேக்கர, ரோஹித்த அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாரச்சி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டருந்தனர்.

இதேவேளை, இறுதியாக அமைச்சரவையில் கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய 06 அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் புதியதொரு அமைச்சுப் பொறுப்பும் வழங்கப்பட்டது.அதன்படி சுகாதார அமைச்சு பொறுப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

அதுவரை சுகாதார அமைச்சராக பதவி வகித்த பவித்ரா வன்னியாராச்சி அந்த அமைச்சுப் பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டார்.

ஊடகத்துறை அமைச்சராக பதவி வகித்த கெஹெலிய ரம்புக்வெல்ல, புதிய சுகாதார அமைச்சராகவும் சுகாதார அமைச்சராக பதவி வகித்த பவித்ரா வன்னியாராச்சி போக்குவரத்து அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர். கெஹெலிய ரம்புக்வெல்ல வசமிருந்த ஊடகத்துறை அமைச்சு பொறுப்பு டளஸ் அழகபெரும வசமானது.

அதேவேளை மின்சக்தி அமைச்சராக பதவி வகித்த டளஸ் அழகபெரும ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

போக்குவரத்து அமைச்சராக பதவி வகித்த காமினி லொக்குகேவுக்கு மின்சக்தி அமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டது.

கல்வி அமைச்சராக பதவி வகித்த ஜீ.எல்.பீரிஸ் புதிய வெளிவிவகார அமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த தினேஷ் குணவர்தன புதிய கல்வி அமைச்சராகவும் பதவியேற்றனர்.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்த நாமல் ராஜபக்ஷவுக்கு மேலதிகமாக அபிவிருத்தி இணைப்பு கண்காணிப்பு அமைச்சு பொறுப்பும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## ஜனாதிபதிக்கும்... 

03ஆம் பக்கத் தொடர்

மாளிகையில் நேரடியாக சந்தித்த போது கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு ஜனாதிபதி, சாதகமாக பதில் தந்திருந்தார்.

அதற்கமைய தற்போது சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிவித்தலின் படி இதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

ஐக்கிய காங்கிரசின் கோரிக்கையை ஏற்று இத்தனை விரைவாக அந்தந்த ஊர்களில் அடக்கம் செய்ய அனுமதி தந்தமைக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது அரசுக்கும் நன்றி தெரிவிக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

## அருந்திக்க குற்றமற்றவர் என... 

03ஆம் பக்கத் தொடர்

விடுதி வளாகத்திற்குள் அனுமதியின்றி நுழைவதைத் தடுக்க முழு பல்கலைக்கழக வளாகத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமெனவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ எந்தவிதமான தலையீட்டையும் செய்யவில்லை என்று குழுவின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தை பாரபட்சமின்றி அமுல்படுத்தவும் அவர் வழிவகை செய்துள்ளார். அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ குற்றமற்றவரென முடிவு செய்வதாகவும் குழு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சியுடன் ஒருபோதும்...

அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு நீதி கிடைக்கும் வரை தாம் தமது அமைச்சு பதவிக்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகியிருக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, தாம் தொடர்ந்தும் 11 கட்சிகளில் கூட்டணியுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரும் கருத்துக்களை முன்வைத்தனர்.

தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத்தில் எதிர்காலத்தில் எந்தவொரு அமைச்சர் பதவியையும் பொறுப்பேற்கத் தயாரில்லையென முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் இருவரும் தமது பதவிகளிலிருந்து நீக்கப்பட்டமை பிரச்சினை இல்லை என்றும் பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் குழுவின் போராட்டம் தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடு வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

இந்த நெருக்கடி நிலை தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது. அமைச்சரவையிலும் அது தொடர்பில் சிக்கல்கள் தொடர்ந்தன. 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டு சூழ்நிலையோடு இந்த நெருக்கடி நிலை ஆரம்பித்தது.

மக்கள் ஆதரவில் அமைச்சராக வந்த நாம் அதனை கடுமையாக எதிர்த்து வந்துள்ளோம். அப்போது சிக்கல் ஏற்பட்டது. அதேபோன்று துறைமுகத்தில் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் போதும் சிக்கல்கள் ஏற்பட்டன. அதையடுத்து யுக தனவி மின் உற்பத்தி நிலைய பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் போதும் எதிர்ப்புகள் கிளம்பின. அவை அனைத்துமே கொள்கை ரீதியான நெருக்கடிகளாகும். தனிப்பட்ட சிக்கல்கள் அல்ல. தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலும் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இத்தகைய நிலைக்கு மத்தியில், நாட்டில் எந்த பிரச்சினையும் கிடையாது, எதிர்வரும் காலத்தில் நாம் முன்னேறுவோம் என வெறுமனே கூறிக்கொண்டிருக்க எம்மால் முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நிலைபேறான,... 

03ஆம் பக்கத் தொடர்

தொடர்பான பல திட்டங்களும் பொறிமுறைகளும் கடற்றொழில் அமைச்சிடம் காணப்படுன்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலில், நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் ஆலோசனைகளுடன் திட்டமிடப்பட்டுள்ள இப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களையும் முதலீடுகளையும் உலக வங்கி போன்ற அமைப்புக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்" என்று தெரிவித்தார்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சர்வதேச அமைப்புக்களின் எதிர்பார்ப்புக்களையும் சர்வதேச நியமங்களையும் பூர்த்தி செய்யும் வகையில் பலநாள் மீன்பிடிக் கலன்களின் தொழில்முறைகள் உட்பட கடற்றொழில்சார் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புதிய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, நன்னீர் மற்றும் பருவகால மீன்வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை மூலம் தற்போது மொத்த மீன் உற்பத்தியில் 17 வீதத்தித்தை பெற்றுக்கொள்வதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், எதிர்வரும் 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உற்பத்தியில் சுமார் 30 வீத உற்பத்தியை நீர்வேளாண்மை ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பை பெற்று வருகின்ற கடலட்டை பண்ணைகளை உருவாக்குவதிலும் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், கிளிநொச்சி மாவட்டத்தில் 06 கடலட்டை கிராமங்கள் ஊடாக சுமார் 355 பண்ணைகளை உருவாக்கியுள்ளமையையும், யாழ் மாவட்டத்தில் 19 கடலட்டை ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கி சுமார் 467 பண்ணைகளை உருவாக்கி இருக்கின்றமையையும் சுட்டிக்காட்டியதுடன் ஆழ்கடல் மீன்பிடியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மயிலிட்டித் துறைமுகம் உள்ளிட்ட துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதையும், பருத்தித்துறை, குருநகர், பேசாலை போன்ற தேவையான பிரதேசங்களில் புதிய துறைமுகங்களை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளையும் தெளிவுபடுத்தினார்.

## நெல் கொள்வனவுக்கு கடன் வழங்குமாறு ...

பெரும் போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப் படுத்தல், விற்பனை மற்றும் தட்டுப்பாடின்றி சந்தையில் நிலவுகின்ற அரிசிக்கான தேவையை தொடர்ந்து பேணுவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஆராய்வதே ஜனாதிபதியின் இந்த திடீர் விஜயத்தின் நோக்கமாகும்.

1971ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நெல் சந்தைப்படுத்தல் சபையின் நோக்கு, "நெல் மற்றும் அரிசி கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகியவற்றில் முன்னணி அரச இடைத்தரகராகச் செயற்படுதல்" போன்றவையாகும். நெல் விவசாயிக்கு இடைத்தரகர்கள் இன்றி நியாயமான விலையை பெற்றுக்கொடுத்தல் மற்றும் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் போது நெல் கையிருப்புக்களை வழங்குவதும், நெல் சந்தைப்படுத்தல் சபையின் முதன்மையான பணிகளாகும்.

கடந்த அரசாங்கத்தில் 2017 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் நெல் கொள்வனவு செய்யப்படாததாலும், பயன்படுத்தக்கூடிய நெல் கையிருப்புக்களை கால்நடை தீவனமாகக் கருதி தனியார்த்துறை வியாபாரிகள் ஒரு சிலருக்கு மிகக் குறைந்த விலைக்கு வழங்கியதாலும் நிறுவனத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்காமை, இடைத்தரகர்களுக்கு கமிஷன் வழங்குவது, நெல் கொள்வனவுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள், களஞ்சியசாலைகளை உரிய முறையில் பராமரிக்காமை போன்ற காரணங்களால் விவசாயிக்கும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கும் இடையிலான உறவு தூரமாக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டுக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் நிலவிய 35 ரூபாவிற்கும் குறைவாக இருந்த கட்டுப்பாட்டு விலையை 2020ஆம் ஆண்டு பெரும் போகத்தில் குறைந்தபட்சம் 55 ரூபாவாக கொண்டு வருவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. 2022ஆம் ஆண்டு பெரும் போகத்தில், ஒரு கிலோ நெல்லின் விலை 95 ரூபாவாக உயர்வடைந்துள்ளதால், அதிகமாக நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த முடிந்ததாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உப தவிசாளர் துமிந்த பிரியதர்ஷன தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையானது 315,000 மெற்றிக் தொன் கையிருப்பை பேணுவதற்குரிய இயலுமையைக் கொண்டுள்ளது. அதனை 04 இலட்சம் வரை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் 315 களஞ்சியசாலைகள் புனரமைக்கப்பட்டன. எஞ்சிய 35 களஞ்சியசாலைகளும் விரைவில் புனரமைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நெல் கொள்வனவை துரிதப்படுத்துவதற்காக 40 பட்டதாரிகள் உதவிப் பிரதேச முகாமையாளர்களாகவும், 200 பல்நோக்கு உத்தியோகத்தர்களை களஞ்சிய நடவடிக்கைகளுக்காகவும் உடனடியாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

நெற் களஞ்சியசாலைகளை பாதுகாக்க யானை வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையை இலாபம் ஈட்டும் நிறுவனமாக கட்டியெழுப்புவதோடு, எவ்வித முறைகேடுகளுக்கும் இடமளிக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்






இரண்டு அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் ஒரு இராஜாங்க அமைச்சர்கள் நேற்று (04) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். சி.பி. ரத்நாயக்க வனவிலங்கு மற்றும் வன விலங்கு பாதுகாப்பு அமைச்சர், திலும் அமுனுகம போக்குவரத்து அமைச்சர், விமலவீர திஸாநாயக்க அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர், அருந்திக பெர்னாண்டோ தென்னை, கித்துல் மற்றும் பனை சாகுபடி ஊக்குவிப்பு மற்றும் அதனுடன் இணைந்த கைத்தொழில் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்.

# இந்தியாவில் பட்டப் படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பிற்கான புலமைப் பரிசில்

## இந்திய உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களை கோரியுள்ளது

கலாசார உறவுகளுக்கான இந்தியக் கவுன்சிலின் (ICCR) 20222023 கல்வி அமர்வுகளுக்கான பின்வரும் புலமைப் பரிசில்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களை கோரியுள்ளது:

★நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டத்தில் பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/துணை மருத்துவம், ஆடை வடிவமைப்பு & சட்டத்துறை கற்கைநெறிகள் தவிர்ந்தவை) அனைத்து பட்டப்படிப்பு (Undergraduate) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

★மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டத்தில் பொறியியல், விஞ்ஞானம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/துணை மருத்துவம், ஆடை வடிவமைப்பு & சட்டத்துறை கற்கை நெறிகள் தவிர்ந்தவை) முதுமாணிப் பட்டக் (Masters Degrees) கற்கைகளை உள்ளடக்குகிறது. எவ்வாறாயினும், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ராஜிவ் காந்தி புலமைப் பரிசில் திட்டத்தில் B.E அல்லது B.Tech பட்டப் படிப்புகளுக்கு வழிசமைக்கும் 'தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கை நெறிகள்.

இந்தப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசாங்கம் தெரிவு செய்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு தகுதிவாய்ந்தவந்தவர்களை தெரிவுசெய்யும் செயற்பாடுகள் இலங்கை கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும். அனைத்துப் புலமைப் பரிசில்களும் கற்கை நெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம் மற்றும் புத்தகங்கள் & காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றது. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக தேவையான தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இந்த கற்கை நெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவு செய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் இலங்கை கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றை அணுகி தகவல்களைப் பெறமுடியும்.

## உக்ரைனுக்கு இந்தியா நிவாரண உதவிகள்

# போலந்துக்கு எடுத்துச் செல்லும் விமானங்கள்



உக்ரைனுக்கு உடனடியாகத் தேவைப்படும்நிவாரண உதவிகளை இந்திய அரசு போலந்துக்கு அனுப்பத் தொடங்கியிருக்கிறது. மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய நிவாரண பொதிகளை ஏற்றிக்கொண்டு போலந்து சென்றிருபப்தாகவும் மற்றொரு விமானம் சில தினங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப் பட்டதாகவும் இந்திய வெ ளிவிவகார செயலாளர் ஹர்ஷ்வர்தன சிங்ஹா தெரிவித்துள்ளார். 'ஒபரேஷன் கங்கா' என்ற இந்தியர் மீட்பு திட்டம் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதை அவர் தெரிவித்தார்.

இந்திய நிவாரண உதவிகளில் மருந்துகள், போர்வைகள், கூடாரங்கள், தார்பலின் கூரைகள், கண் பாதுகாப்பு கவசங்கள், தண்ணீர் தொட்டிகள், படுக்கைகள், கையுறைகள் என்பன அடங்குகின்றன. இவற்றை ஏற்றிக்கொண்டு மேலும் மூன்று விமானங்கள் போலந்து ஹங்கேரி மற்றும் ருமேனியாவுக்கு செல்லவுள்ளன. இந்நாடுகளின் எல்லை வழியாக இவை உக்ரைனுக்குள் அனுப்பப்படும்.

புதுடில்லியில் உள்ள உக்ரைனிய தூதுவர் இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்துள்ள அதேசமயம் நிவாரண உதவிகள் மற்றும் இந்தியர்களை மீட்டுவருதல் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த கரிசனை காட்டி வருவதாக புதுடில்லி தகவல்கள் கூறுகின்றன.

# எரிபொருள், மின்சார கட்டணங்களை குறைத்துள்ள பாக். அரசு




பாக். பிரதமர் இம்ரான் கான், மின்சாரம் மற்றும் எரிபொருட்களின் விலைகளைக் குறைத்திருப்பது மக்களை ஏமமாற்றி தன் அரசாங்கத்தின் இருப்பை காப்பாற்றிக் கொள்வதற்கான கடைசி முயற்சியாகும் என பாகிஸ்தான் எதிர்க் கட்சிகள் விமர்சித்துள்ளன.

கடந்த 28 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பாக். பிரதமர், பெட்றோல் மற்றும் டீசலின் விலைகளை லீட்டருக்கு 10 ரூபாவாகவும், ஒரு அலகு மின்சாரம் ஐந்து ரூபாவினாலும் குறைக்கப் பட்டுள்ளதாகவும் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு வரி விலக்கு அளிக்கப்படும் என்றும் அறிவித்தார். இதையடுத்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி, தமது கட்சி ஒழுங்கு செய்திருக்கும் 'அவாமி மார்ச்' என அழைக்கப்படும் பேரணிப் பவனிக்கு பயந்த நிலையிலேயே விலை குறைப்பு அறிவிப்பை இம்ரான்கான் விடுத்திருப்பதாகக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி மட்டுமன்றி, பாக். முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி மற்றும் அவாமி தேசிய கட்சித் தலைவர்களும், எதிர்ப்புப் பேரணி, நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பனவற்றுக்கு பயந்தும் அரசு மீதுள்ள பல்வேறு அழுத்தங்கள் காரணமாகவுமே பாக். பிரதமர் இந்த அறிவிப்பைச் செய்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர். இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் நிவாரணங்கள் போதுமானவை அல்ல என்றும் எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ளன. அச்சம் கொண்ட தோல்வியடைந்த மனிதரின் உரை அது என்றும் இதுவே அவரின் கடைசி உரையென்றும் கருத்துகள் வெளியிடப்பட்டிருப்பதாக 'டோன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# இந்திய மாணவர் மீட்புக்கு அமைச்சர்கள் அனுப்பி வைப்பு



தாய்நாடு திரும்ப முடியாமல் உக்ரைனில் சிக்கித் தவிக்கும் சுமார் 16 ஆயிரம் இந்தியர்களை திருப்பி அழைக்கும் முயற்சியில் இந்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இது தொடர்பாக புதுடில்லியில் நடைபெற்ற உயர் மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தனது நான்கு சிரேஷ்ட அமைச்சர்களை உக்ரைனை சுற்றியுள்ள நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். எல்லை தாண்டி வரும் இந்தியர்களின் நலன்களை நேரடியாகக் கண்காணிக்கவும் சிக்கியிருப்போரை மீட்டு வரவும் இவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என இந்திய அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சர்களான ஹர்தீப் பூரி, ஜயோதிராடியா சிந்தியா, கிரண் ரிரிஜு, வி.கே. சிங் ஆகியோர் ஹங்கேரி, போலந்து, ருமேனியா ஆகிய நாடுகளுக்கு புறப்பட்டுள்ளனர். உக்ரைனில் 76 ஆயிரம் வெ ளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களில் 16 ஆயிரம் பேர் இந்தியர்களாவர். ஆயிரக்கணக்கான ஆபிரிக்க மாணவர்கள் உக்ரைனிலிருந்து நாடு திரும்பமுடியாமல் தவித்து வருகிறார்கள். இதேசமயம் உக்ரைன் ஷெய்னி எல்லையோரமாக போலந்துக்காக காத்திருப்பவர்களை அழைத்து வர போலந்து அரசு பஸ்களை ஏற்பாடு செய்துள்ளது.


# '2030–இல் யாவருக்கும் உறையுள்' சம்மாந்துறையில் வீடு கையளிப்பு



சம்மாந்துறை பிரதேசத்தில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் '2030 இல் யாவருக்கும் உறையுள்' எனும் திட்டம் கடந்த ஆண்டு சமூக சேவையாளர் அஸ்மி யாசீனினால் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி வறிய நிரந்தர வசிப்பிடமற்ற ஏழாவது குடும்பத்திற்கான புதிய வீடு அண்மையில் சமூக சேவையாளர் அஸ்மி யாசீனினால் கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை உயர் தொழிநுட்ப கல்லூரியின் கணக்காளர் எஸ்.ஏ ஜிப்ரி, பள்ளிவாசல் தலைவர்களான ஏ.எல்.எம் றிப்கான், எம். இஸ்மாயில் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஒட்டுசுட்டானில் உழுவதற்கு எரிபொருள் இல்லை

**முத்தையன் கட்டு குளம் திறப்பு:**

**25 ஆம் திகதிக்கு முன்னர் பயிர்செய்கையை மேற்கொள்ளுமாறு அறிவிப்பு**

*புதுக்குடியிருப்பு விசேட நிருபர்*

ஒட்டுசுட்டான் பிரதேசசபைக் குட்பட்ட பகுதிகளில் சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான எரிபொருள் கிடைக்காமையால் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

சிறுபோக நெற்செய்கைக்காக நிலத்தினை பதப்படுத்துவதற்கு உழவு இயந்திரத்திற்கான எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஒட்டுசுட்டானில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் இல்லாமையால் உழவு இயந்திரங்களுடன் நீண்ட வரிசையில் விவசாயிகள் காத்திருக்கின்றனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகின்ற நிலையில் மழையினையும் பொருட்படுத்தாது விவசாயிகள் எரிபொருளினை பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற முனைப்பில் ஈடுபட்டுள்ளதை காணக்கூடியதாகவிருந்தது.

முத்துஜயன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு குளத்து நீர் திறந்து விடப்பட்டுள்ளது. எனினும் உழவு இயந்திரங்களுக்கு டீசல் இன்மையால் விவசாயிகள் பெரிது பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீதிகளில் நீண்ட வரிசையில் உழவு இயந்திரத்தினை நிறுத்திவைத்துவிட்டு மழையில் காத்திருக்கின்றனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் முத்தையன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் டீசல் இன்மையால் உழவுசெய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேட்டுநில பயிர்செய்கையாளர்கள் மற்றும் உப உணவு பயிர்செய்கையாளர்கள், நெற்செய்கையாளர்கள் என அதிகளவான விவசாயிகள் டீசல் இல்லாமையால் நிலத்தினை பதப்படுத்தமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்., பருத்தித்துறை நிருபர்கள்

# மறைந்த ஊடக மாணவிக்கு ஏகாந்த நிலையில் பட்டம்

*பருத்தித்துறை விசேட, யாழ்., நிருபர்கள்*






யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு ஏகாந்த நிலையில் பட்டமும், நினைவுத் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகத் துறையில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்ற செல்வி தில்காந்தி நவரட்ணம் பட்டமளிப்பு விழாவின் போது உயிருடன் இல்லாமையால் அவருக்கான சிறப்புப் பட்டம் அவரது தயாரிடம் வழங்கப்பட்டது. மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சிக்காக வழங்கப்படும் மறைந்த மாணவன் சகாதேவன் நிலக்ஷன் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் இம் மாணவிக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வனப்பாதுகாப்பு அமைச்சினால் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு

*வவுனியா விசேட, தலைமன்னார் தினகரன் விசேட நிருபர்*

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய பிரச்சினைகள் தொடர்பாக நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்களினால் இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதனை தீர்த்து வைப்பதற்கான கலந்துரையாடலொன்று இதன்போது இடம்பெற்றது.



வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட வனவளத் திணைக்களத்தின் காணி தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றுக்கு துரிதமாக தீர்வு காணும் முகமாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக வனவள பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ. ரத்நாயக்காவின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்களது காணிகள், விவசாய நிலங்கள், அரச தேவைக்கான காணிகள் என்பவற்றை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவித்தல் தொடர்பாக ஆராயப்பட்டது. நீண்டகாலமாக வனவளத்தினால் விடுவிக்கப்படாமல் இருந்த மக்களது காணிகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

# உழவு இயந்திர பெட்டியில் மோதி விரிவுரையாளர் உயிரிழப்பு

*கரவெட்டி தினகரன், யாழ். விசேட நிருபர்*



யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் உயிரிழந்துள்ளார். கரவெட்டியைச் சேர்ந்த, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கனகசபை பாஸ்கரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கல்வியியற் கல்லூரியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெறவிருந்த நிகழ்வுக்காக தனது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்த போதே கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடி சந்தி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திர பெட்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். போதிய வெளிச்சமின்றி உழவு இயந்திர பெட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் இவ்விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஆணொருவரின் சடலம் மீட்பு

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம், பொன்னாலை, பருத்தித்துறை வீதியோரமாக காயங்களுடன் ஆணொருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

பொன்னாலைக்கும் திருவடிநிலைப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலத்தின் அருகே ஓர் மோட்டார் சைக்கிளும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமான பணிகளை மீள ஆரம்பிக்க அனுமதி

*வவுனியா விசேட நிருபர்*

தொல்பொருள் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்த வவுனியா, சமனங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தினுடைய கட்டுமான பணிகளுக்கு தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, சமனங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்திற்கு நேற்று முன்தினம் மாலை (03.03) அமைச்சர் தலைமையிலான குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

வவுனியா, சமனங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயம் 1952 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களினால் வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளது. குறித்த கோவில் அமைந்துள்ள மலைப்பகுதியில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற்தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டட இடிபாடுகள் என்பன காணப்படுகின்றன.

அத்துடன், ஆலயத்தின் புனர்நிர்மாண கட்டுமான பணிகள் இடம்பெற்று வந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் ஆலயம் அமைந்திருந்த பகுதி தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான பகுதி என தெரிவித்து கட்டுமான பணிகளுக்கு தடையுத்தரவு பிறப்பித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அப்பகுதி மக்கள் அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு தெரியப்படுத்தியிருந்ததுடன், கடந்த காலங்களில் கவனயீர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர். இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கு.திலீபனின் கோரிக்கைக்கு அமைய இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினர், மக்களின் கோரிக்கையினை கேட்டறிந்தனர். ஆலயத்தின் கட்டுமான பணிக்காக மாதிரி வரைபடத்தினை தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கி தொல்பொருட்களுக்கு சேதத்தினை ஏற்படுத்தாத வகையில், புனர்நிர்மாண வேலைகளை முன்னெடுத்து ஆலய வழிபாடுகளை மேற்கொள்ள அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.





# மக்களின் பாதுகாப்புக்கு தீங்கை ஏற்படுத்தும் வகையில் கனிய மணல் அகழ்வு இடம்பெறாது

*மன்னார் குறூப், தலைமன்னார் நிருபர்கள்*

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கனிய மணல் அகழ்வின் முதற்கட்ட செயற்பாடான கனிய மணல் பரிசோதனை நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக தீவு பகுதியில் பல இடங்களில் கனிய மணல் அகழ்வு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதுகுறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை (4) காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்டவர்கள் ஒன்றிணைந்து மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் கனிய மணல் பரிசோதனை நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின் போது அவுஸ்திரேலியா கனிய மணல் அகழ்வு நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் சாலிய கலந்து கொண்டிருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மற்றும் தனியார் அமைப்புகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மாவட்டத்தில் ஏற்படவுள்ள அபாய நிலை குறித்து 'மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

# மின்தடை நேரத்தில் பிரதேசசபை உறுப்பினர் மீது தாக்குதல்

*யாழ்.விசேட நிருபர்*

மானிப்பாய் பிரதேச சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினரான அ.ஜோன் ஜிப்பிரிக்கோ என்பவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பிலுள்ள அவரது வீட்டினுள் நேற்றுமுன்தினம் இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த போதே மதுபோதையில் நுழைந்த நபர் ஒருவர் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளார். அதன்போது, பிரதேச சபை உறுப்பினரின் தந்தையார் தாக்கப்பட்டுள்ளதுடன் வீட்டின் கேற் கதவு சேதப்படுத்தியதுடன், வேலி தகரங்களையும் சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து சென்றுள்ளார்.

# கிழக்கின் குரல்



## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்;
# அம்பாறைக்கு கொண்டு செல்வதை தடுக்க இளைஞர்கள் மகஜர் கையளிப்பு

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தை அம்பாறை நகரத்திற்கு கொண்டு செல்ல வேண்டி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அதனை தடுத்து நிறுத்தி அவ்விடத்திலேயே தொடர்ந்தும் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்து முன்னோடி இளைஞர்கள் சிலர் அரச மேல்மட்டத்திற்கு அனுப்ப வேண்டி சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கிடம் மகஜரொன்றை நேற்று முன்தினம் (03) மாலை கையளித்தனர்.



இளைஞர்கள் மகஜரை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,...

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் எவ்வித தடைகளுமின்றி முறையாக இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் வகையில் சிலர் ஈடுபட்டு வருவதையிட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

ஓரிரு உத்தியோகத்தர்களுக்காக எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தமிழ் பேசும் இளைஞர்கள் பயன்பெறும் குறித்த அலுவலகம் ஏன் மாற்றப்பட வேண்டும்? நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுணர்வு பற்றியும் இளைஞர்களின் அபிவிருத்தி பற்றியும் மக்களும் அரசாங்கமும் கருத்து கூறிவரும் இச் சூழ்நிலையில் அதனைச் சிதைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக கிள்ளி எறிய வேண்டும் என்பதே எமது குறிக்கோளாகும்.

எனவே சாய்ந்தமருதில் இயங்கிவரும் கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அதே இடத்தில் மேற்கொள்ளும் வகையில் அதற்கான உத்தரவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் ஜனாதிபதி, பிரதமர், இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தவிசாளர் ஆகியோர் தலையிட்டு இவ் வநீதிக்கு எதிராக நீதியை பெற்றுத் தரவேண்டும் என்று அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசாங்கத்தின் 200 மில்லியன் பாரிய குடிநீர்த் திட்டம்; தடுக்காது முன்னெடுக்க கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அரசாங்கத்தினால் திருக்கோவில் பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட 200 மில்லியன் பாரிய குடிநீர்த் திட்டத்தை தடுக்க வேண்டாம் என திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டது.



அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு குளத்தின் புனரமைப்புத் திட்டத்தினை தடுக்காது முன்னெடுத்து தமக்கான சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு உதவுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இவ் ஆர்ப்பாட்டமானது திருக்கோவில் பிரதேசத்திலுள்ள திருக்கோவில் 4 மண்டானை, குடிநிலம், நேருபுரம், தாண்டியடி, சங்கமன்கண்டி ஆகிய ஆறு கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் அணிதிரண்டு திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு குளத்தினை புனரமைத்து நீர் மட்டத்தினை ஒரு அடியால் உயர்த்தி பிரதேசத்திற்கான குடிநீரை தடையின்றி தொடர்ச்சியாக வழங்கும் நோக்குடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தினை அமுல்படுத்தும் போது விவசாயம் மற்றும் மீன்பிடி தொழில் பாதிப்படையக்கூடும் என தெரிவித்து அனுமதி வழங்க முடியாது எனவும் அதற்கு பதிலாக ஜெய்கா நீர்வழங்கல் திட்டத்தினை அமுல்படுத்தி தங்கவேலாயுதபுரம் கஞ்சிகுடிச்சாறு கிராம மக்களுக்கு நீரை வழங்குமாறு அப்பகுதி விவசாய மற்றும் மீன்பிடி அமைப்புக்கள் கருத்து தெரிவித்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிநீர் திட்டத்திற்கு முற்றும் முழுதாக மறுப்பு தெரிவித்து இருந்தனர்.

விவசாயம் மற்றும் மீன்பிடி தொழில்கள் பாதிக்கப்படாத வகையில் திட்டத்தினை முன்னெடுத்து திருக்கோவில் பிரதேச மக்களுக்கு தொடர்ச்சியான சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்குமாறு ஜனாதிபதி பிரதமர் அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து மகஜரும் கையளிக்கப்பட்டது.

# ஈழமதி ஜப்பாரின் கவிதை நூல் வெளியீடு

**பாலமுனை தினகரன் நிருபர்**



கவிஞரும், பிரபல எழுத்தாளருமான ஈழமதி ஜப்பார் எழுதிய கவிதை தொகுதி நூல் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில்(தேசிய பாடசாலை) நடைபெறவுள்ள இவ் விழாவுக்கு பாராளுமன்ற உறுப்பினரும்,முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் பிரதம அதிதியாகவும், முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களுமான ரவூப் ஹக்கீம்,றிஷாட் பதியுதீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்

சுமார் 280 துறைசார்ந்தவர்களது சுய சரிதம் கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ள இந்நூலானது அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள்,இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவன தலைவர்கள் உள்ளடக்கிய நூலாக வெளிவரவுள்ளது.

# மட்டக்களப்பில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வு

**கல்லடி குறூப் நிருபர்**

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக போதையற்ற தேகாரோக்கியமான, உள சுகாதாரமான நீங்களே சிறந்த மனிதன் எனும் தொனிப் பொருளிற்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வொன்று நேற்று (04) புனித மிக்கேல் கல்லூரியின் சிரேஷ்ட சாரணர் குழுவின் ஏற்பாட்டில் புனித மிக்கேல் கல்லூரியில் இடம்பெற்றது.



இதன்போது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் உள நல வைத்திய நிபுணர் அருள்ஜோதி கலந்துகொண்டு போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புகள், அதனை தடுப்பது அல்லது குறைப்பது தொடர்பான கருத்துரைகளை முன்வைத்ததுடன், சமூகத்திற்கு இவ் விடயங்களை சாரண மாணவர்கள் ஊடாக எவ்வாறு கொண்டு சேர்ப்பது மட்டுமல்லாது கொண்டு சேர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன்போது விபரித்திருந்தார்.

# நிந்தவூரில் நாளை இரத்ததான முகாம்

**நிந்தவூர் குறூப் நிருபர்**

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிலவும் குருதிக் குறைபாட்டை நிவர்த்தி செய்யு முகமாக, நிந்தவூர் லகான் விளையாட்டு கழகம், 06வது முறையாகவும் ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாமானது, நாளை நிந்தவூர் அல் மஷ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் காலை 08:00 மணி முதல் மாலை 02:30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதேவேளை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிலவும் குருதிக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு அண்மைக் காலமாக, நிந்தவூர் பிரதேசத்திலிருந்து சமூக சேவைகள் அமைப்புக்கள், பள்ளிவாசல்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் என்பன அதிகமான குருதிகளை தானமாக வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்த இரத்ததான முகாமில் தங்களது குருதிகளை தானம் செய்ய விரும்புபவர்கள், தங்களது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், நேரம் என்பவற்றை 0759117474, 0767550911, 0775385416 எனும் இலக்கங்களுக்கு SMS / whatsapp செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# மட்டக்களப்பில தீப்பந்தம் ஏந்தி போராட்டம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மின்சாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மெழுகுவர்த்தி, தீப்பந்தம் மற்றும் டோர்ச் லைட் ஏந்திய போராட்டமொன்று வியாழக்கிழமை (03) இரவு மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.



மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு மற்றும் பெரிய கல்லாறுக்கிடைப்பட்ட பாலத்தில் வியாழக்கிழமை (03) 8.30 மணியளவில் ஒன்றுகூடியவர்களால் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.



தற்போது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத்தடை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் பங்கேற்று கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், நாடளாவிய ரீதியில் இந்த போராட்டத்தினை விஸ்தரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

# வெள்ளநீரை வெளியேற்றுவதில் இரு கிராமத்தவர்களிடையே முறுகல்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பலத்த மழைபெய்து வருகின்ற நிலையில் பெரும்பாலான தாழ் நிலப்பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதனால் பொதுமக்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள தாள் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதனால் பல வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளது. இதனால் அங்குள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள், குழந்தைகள் என பலதரப்பட்டவர்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறு இருக்க அப்பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டிருப்பு, எருவில் பகுதியில் தேங்கிநிற்கும் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு மண்முனை தென் எருவில் பிரதேச சபையினர் பெக்கோ இயந்திரத்துடன் குறித்த இடத்திற்கு வியாழக்கிழமை (03) வருகை தந்திருந்தனர். எனினும் வெள்ள நீரை வெளியேற்றுவது தொடர்பில் பட்டிருப்பு மற்றும் எருவில் கிராம மக்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.



அவ்விடத்திற்கு வருகை தந்த மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை செயலாளர் சா.அறிவழகன், கிராம சேவை உத்தியோகஸ்த்தர், களுவாஞ்சிகுடி பொலிசார் விஜயம் செய்து நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். இறுதியில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேய விக்கிரம ஸ்தலத்திற்கு விஜயம் செய்து இரு கிராமத்தவர்களுடனும் கலந்துரையாடி மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் வெள்ள நீரை வெளியேற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கியதற்கிணங்க பிரதேச சபையினரால் வெள்ளநீர் வட்டி வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# மட்டக்களப்பு காத்தான்குடி மீனவர் தொழில் பாதிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

தற்போதைய சீரற்ற கால நிலையினால் மட்டக்களப்பு காத்தான்குடி மீனவர்களின் மீன் பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு சில தினங்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலையினால் மட்டக்களப்பு பூநொச்சிமுனை கடற்கரை மீனவர்கள் மற்றும் காத்தான்குடி மீனவர்களின் மீன் பிடி தொழில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. கடலில் வேகமாக காற்று வீசுவதால் கடலுக்கு மீன் பிடிக்க செல்லமுடியாதுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இவர்களின் மீன் பிடி தொழில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை ஓரமாக மீன்பிடி படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படுகின்றது.

இதே நேரம் எரி பொருள் தட்டுப்பாட்டினாலும் மீன் பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் குறிப்பிடுகின்றகர்.

## தென்கிழக்குப் பல்கலை;
# நிருவாக உத்தியோகத்தர்களுக்கு திறன் விருத்தி பயிற்சிப் பட்டறை

**ஒலுவில் விசேட நிருபர்)**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் நிருவாக உத்தியோகத்தர்களின் திறன்களை மேலும் வளப்படுத்தும் நோக்கிலான பயிற்சிப் பட்டறை வியாழக்கிழமை (03) பல்கலைக்கழக ஒலுவில் வளாக அபிவிருத்தி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'திறன் மேம்பாட்டுத் திட்டம்' எனும் தொனிப்பொருளிலான பயிற்சிப்பட்டறை பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ. ஜௌபர் தலைமையில் நடைபெற்றது.


இப்பயிற்சிப்பட்டறையில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் பிரதம அதிதியாகவும், பதிவாளர் எச். அப்துல் சத்தார் மற்றும் இப்பயிற்சிப்பட்டறையின் வளவாளராக ஓய்வு பெற்ற பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி ஏ.எல். ஜௌபர் சாதீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உலக வனவிலங்கு தினத்தை முன்னிட்டு இலங்கை வன விலங்கு திணைக்களத்தினால் (Department of Wildlife Conservation, Sri Lanka ) நடாத்தப்பட்ட வனவிலங்குகல் புகைப்பட போட்டியில் மூதூரைச் சேர்ந்த இளம் புகைப் படப் பிடிப்பாளர் முஹமட் ரஸீம் மூன்றாம் இடத்தைப் பெற்று ஊருக்கு பெருமை சேர்த்துள்ளார். அத்தோடு Wildlife photography தொடர்பான மூன்று நாள் பயிற்சி மற்றும் world wildlife Day நிகழ்வும் Horton Plains National Park நடைபெற்றதில் அதிலும் பங்கு பற்றும் வாய்ப்பும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(படம்: தோப்பூர் குறூப் நிருபர்)

# மலைச்சாரல்





மாத்தளை மாவட்டத்தில் உல்லாசப்பிரயாணிகளை கவரும் இயற்கை எழில் கொஞ்சும் ரிவஸ்டன் பகுதிக்கு செல்லும் மாத்தளை - இரத்தோட்டை பாதை அபிவிருத்தி பணிகளை மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தோட்டை, உக்குவளை அபிவிருத்தி குழுத்தலைவருமான ரோஹண குமார திஸாநாயக்கவினால் பார்வையிடப்பட்டது.
படம்: உக்குவளை நிருபர்



# மலையக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்டவரிசையில் மக்கள்

**ஹற்றன் விசேட, தலாவக்கலை குறூப் நிருபர்கள்**

மலையக பகுதிகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் தொடர் வாகன வரிசையும் மக்கள் கொள்கலன்களை வைத்து கொண்டு நீண்ட வரிசையில் நின்று கொண்டிருப்பதையும் காணமுடிந்தது. ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டு மூன்று கிலோமீற்றர் வரை வாகன தொடரணி காணப்பட்டது.

ஒரு சில எண்ணை நிரப்பு நிலையங்களில் எண்ணை பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்தவர்கள் கடமை புரியும் ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தலவாக்கலை, கொட்டகலை, பத்தனை, வட்டகொட, லிந்துலை, நாகசேன, ரஹான்வத்தை, மெரயா, ஹோல்புரூக், மன்ராசி, அக்கரப்பத்தனை, டயகம, போபத்தலாவ போன்ற மலையக பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள வாகன சாரதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். அன்றாட நடவடிக்கைகளும் மரக்கறி போக்குவரத்தும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.





மாத்தளை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று மாத்தளை பௌத்த மந்திரய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக கோட்ட கொட, ரோஹண திசாநாயக்க, மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.
படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

# கொழுந்து பறிக்கும் போட்டியில் சீதையம்மாள் முதலிடம்





**தலவாக்கலை குறூப் நிருபர்**

ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் நானுஓயா சமர்செட் தோட்ட நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண் தொழிலாளர்களுக்கான 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த கொழுந்து பறிப்பாளர் போட்டி நிகழ்ச்சிகள் சமர்செட் தோட்டத்தில் இடம்பெற்றன. இதன்போது தோட்ட அதிகாரி கோசல விஜேசேகர, உதவி அதிகாரிகள், அனுஷ்க ஜயசுந்தர, கெனித் கமகே, நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் தோட்ட உத்தியோகத்தர்கள் பலர் கலந்துக்கொண்டனர். இருபது நிமிடங்களில் பறிக்கப்பட்ட கொழுந்தின் நிறைக்கு ஏற்ப வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அதற்கேற்ப சீதையம்மாள் முதலாம் இடத்தையும்; புஸ்பலதா இரண்டாம் இடத்தையும் யோகராணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும், பெறுமதிமிக்க பரிசுப் பொருட்களும் தோட்ட நிர்வாகத்தால் வழங்கி வைக்கப்பட்டு தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# பலாங்கொடை பகுதியில் திடீர் சுற்றிவளைப்பு

## 27 சந்தேக நபர்கள் கைது

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசேட திடீர் சுற்றிவளைப்பின் போது பல்வேறுபட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி இரவு முதல் இரண்டாம் திகதி அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு குற்றச்செயல்களுக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள், மதுபாவனையில் வாகனம் செலுத்திய சாரதிகள், போதைப் பொருளுடன் தொடர்புடைய நபர்கள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை பலாங்கொடை மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். பலாங்கொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான தமிழ்த் ஜயகொடியின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஹக்கிந்த தீவுத் தொகுதியில் ஹோட்டலின் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு உத்தரவு

**எம்.ஏ.அமீனுல்லா**

கண்டி வரதென்ன ஹக்கிந்த தீவுத் தொகுதியில் சூழலியல் தொகுதிக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் நிர்மாணிக்கப்படவிருந்த ஹோட்டலின் கட்டுமானப் பணிகளை நிறுத்துமாறு நேற்றுமுன்தினம் (3) கண்டி மேலதிக மஜிஸ்ட்ரேட் எம்.ஃபரீக்டீன் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

இரண்டாம் இராஜசிங்க மாவத்தையில் 'வைநொட் கார்டன்' என்ற பெயரில் ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் உரிமையாளரை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு, கடந்த ஜனவரி 13ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழக்கு தாக்கல் செய்திருந்தது. இந்த ஹோட்டல் ஹக்கிந்த தீவுத்தொகுதியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்படுவதால், இதனை நிறுத்துமாறு உத்தரவிட வேண்டும் என மனுவின் ஊடாக நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஹக்கிந்த தீவுத் தொகுதி மகாவலி நதியில் கண்டி கெற்றம்பே பாலத்திற்கும், தொடங்வெல பாலத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. இது உயர்ப்பன்முகத்தன்மையுடன் கூடிய சூழலியல் அமைப்பாகும். இங்கு சட்டவிரோதமாக பெரும் கட்டடம் நிர்மாணிக்கப்படுவதாக மத்திய சுற்றாடல் அமைப்பிற்கு முறைப்பாடு கிடைத்திருந்தது. இதன் அடிப்படையில், அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் களத்திற்கு சென்று நிலைமையை நேரில் கண்டறிந்தார்கள்.

இதன்போது, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தரவுகளுக்கு முரணாக, வைநொட் கார்டன் உரிமையாளர் சிதைவுகளை மகாவலி ஆற்றில் கொட்டுவதன் மூலம் கரையை நிரப்பி, அதன்மேல் கட்டடத்தை அமைக்க நடவடிக்கை எடுத்திருந்தமை தெரியவந்தது. அதன் அடிப்படையில், அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.



எம்பிலிபிடிய மாவட்ட வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்துக்குள் பொறுப்பெடுத்து பல்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வழிவகுத்த முன்னாள் சுகாதார அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியை வைத்திய சாலை நிர்வாகம் பாராட்டி அண்மையில் விசேட நினைவு சின்னம் ஒன்றை கையளித்துள்ளது.

# கைத்துப்பாக்கி ரவை பாய்ந்து ஒருவர் உயிரிழப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

நாவுல பிரதேசத்தில் பொலிஸாரின் கைத்துப்பாக்கி ரவை பாய்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாவுல எலஹர வீதியில் இரண்டாம் கட்டை என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, வீதியில் வந்த முச்சக்கர வண்டியொன்றை நாவுல பொலிஸார் நிறுத்தி அதில் வந்த இருவரையும் சோதனைக்கு உட்படுத்திய போது அதில் ஒருவர் பொலிஸாருடன் மோதலை ஏற்படுத்தியுள்ளார். இதன்போதே துப்பாக்கி வெடித்த சம்பவம் இடம்பெற்றதுள்ளது. இதுகுறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அதே நேரம் முச்சக்கர வண்டியில் வந்தவர்கள் வளர்ப்பு நாய் ஒன்றை சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற சமயமே மேற்படி சம்பவம் இடம்பெற்றதாக மரணித்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். சந்தேக நபர்கள் வசமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் பக்கட்டுக்கள் சில கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர் 37 வயதுடைய துசார சந்திரரத்ன எனவும் அவரது மைத்துனரே உடன் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

# கேகாலை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் வெற்றி

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

அரச மற்றும் அரை அரசு சேவையாளர்களுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கேகாலை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் வெற்றியீட்டியுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் அரச மற்றும் அரை அரசு சேவையாளர்களுக்கிடையே கிரிக்கெட் சுற்று போட்டி ஒன்று அண்மையில் கேகாலை ரம்புக்கன அசோக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கேகாலை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற அணியினர் மஅண்மையில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவை மாகாண சபை கட்டடத்தொகுதியில் வைத்து சந்தித்த போது ஆளுநர் வாழ்த்து தெரிவித்தார். இதன்போது மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல மற்றும் சப்ரகமுவ மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# தேயிலை கொழுந்தை கொண்டு செல்வதில் சிக்கல்

எரிபொருள் பிரச்சினையால் மாத்தளை மாவட்ட சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பறிக்கப்படும் கொழுந்துகளை தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்றிச் செல்வதற்கான லொறிகளுக்கு தேவையான டீசல் கிடைக்காமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை, யட்டவத்த, அம்பகங்கோரல, உக்குவளை உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்



## பேசத் தொடங்கியது ஆயுதம்

தோட்டாக்களை எங்கு
நுழைப்பேன் என்று
சிந்தித்த மூலை
சிறகடித்துப் பறக்கின்றது
புதுமையான நூலினால்.

ஐயம் இழந்து
யுகம் மறந்து
பறந்து கொண்டிருக்கின்றது
இன்றைய நாளில்.

அரக்க மனம்
உறக்கம் கொண்டது
இரக்கம் காட்ட
நேர கிடைத்துப்
போனதால்.

ஆயுதங்களால் வரையப்பட்ட
வலிகளை மறைத்து
இனிமையான பொழுதுக்காய்
காத்திருக்கிறது இவ்
நாள்.

உயிர்களை காவு
கொண்டு உயரப்
பறந்தும் ஓராயிரம்
பதட்டங்களை தந்தது
போனது அன்றைய
நாள்.

இன்றை நாள்!
பதற்றம் மறைந்து
என்னையும் மறந்து
மகிழ்ந்து பேசிக்
கொண்டிருக்கின்றேன் இவ்
நூலுடன்.

**பொத்துவில் அஜ்மல்கான்**



## போர்

இரு தலைவர்களின்
தனித்துவ
தீர்மானத்தால்
தீப்பிளம்பாய்
பனிப்படிவு
நகரங்கள்
தீப்பற்றும் காட்சி ....

ஒன்றாயிருந்து
பிரிந்ததாலோ
பிளவு தோன்றி
மீண்டும் இணைய
விருப்பின்றி
போரை சுவைத்திட்ட
உக்ரைன் ....

மானிடர் வாழ
வழி சமைக்கா
தேசத் தலைகள்
உயிரைப் போக்க
வழி சமைத்த
சிந்தனை
அதிகாரம் வேண்டாம் இனியும்...

நிம்மதியாய் வாழ
பிரதிநிதியாய்
வாக்கிட்டு தெரிந்த
நபரொருவர் அதிகாரம்
கட்டுக்கடங்கா இருப்பதாலே

போர் தோன்றிய
படிப்பினை பாரில் ஏராளம்....

இரும்புத் தோட்டா
ஏற்றுக் கொள்ள
கேடயமாய் அப்பாவி மக்கள்
பதறியளும் சிறுசுகளும்
நகர முடியா வயசுகளும்
களத்திலே மாயும்
சிப்பாய்களும் ....

போர் தொடங்கி
முடிந்த தேசமுண்டா பாரில்
முடியும் போது மிச்சம்.
இழந்த உயிர்களும்
அழிந்த சொத்துக்களும்
அங்கவீனமாய் போன
மானிடமும் கட்டடமும் ....

போருக்குக் காரணம்
தனி மனித சர்வதிகாரம்
நாட்டை ஆள குழுவே
வேண்டும் எதிர்கால
அரசியல் சித்தாந்தம்
மாற வேண்டும்
மனித உயிருக்காய்......

தோப்பூர்
**முகம்மது முகைதீன் நெளபீக்**



## கறை படிந்த மனிதம் கரையேறுமா...

மதி கொண்டு எழுகையில்
சதி வந்து விழுகிறதே
விதி என்றே தரிப்பேனோ
நதி போல இருப்பேனோ

கூடியிருந்து குழிபறிப்போர்
நாடி பிடித்து அறிந்திடவோ
தேடியிவர் அம்பெய்தால்
ஓடித்தான் போய்விடவோ

உதவியென்று பிறர்க்கும் செய்யார்
நாம் செய்யும் உதவியும் காணச் சகியார்
இவர் போல மானிடரை
இருந்தும் இறந்தவரென்பேனோ

தன் குடும்பம் தன் வீடு
அவர் வாழ்க்கை பூக்காடு
அன்றாடம் பல வீடு
எரிகின்ற சுடுகாடு

என் நாமம் என் புகழ்
என்பதுதான் அவர் குறி
அதனாலே சமூகத்தில்
பல கருமம் இழுபறி

நற்பணிகள் நடக்கையிலே
முட்டுக்கட்டை இடவே ஒரு கூட்டம்
தனைத் தவிர்த்து பிறிதொருவர்
உயர்ந்திடக் கூடாதென்பதே
அவர்தம் நாட்டம்.

முள்ளாகக் குத்திடவும்
பழிதீர்த்து மகிழ்ந்திடவும்
கல் நெஞ்சம் அவர் கொண்டார்
இழி நிலையே இவர் கண்டார்

என் பாதை என் பயணம்
முடியும் வரை ஏது சயனம்
இறை தந்த வரம் கொண்டு
குறை தீர்க்க செய்வேன் தொண்டு.

விமர்சனங்களில் எனக்கில்லை மதிப்பு
இறை திருப்தி மட்டுமே
என் விருப்பு
ஈகையில் இனிதாகும் உவப்பு
ஈருலக வாழ்வுக்கும் அதுவே சிறப்பு.

**மக்கொனையூராள்**

## காயங்களின் உரையாடல்



மனமே மனமே...
இனி மேலும் கலங்காதே
முழுசா நனைந்த போது
முக்காடு எதற்கு

புதுசா பார்த்து..
புது குடியிருப்பில்
புது கவிதை எழுது

பறந்து போனே
பறவையைத் தேடி
பார்வை இழந்த மனமேன்
பறக்க துடிக்கிறது

பால் பண்ணை வீதிக்கும்
மாடிந்துரை ஓடைக்கும்
நீ என்ன தபால்காரனா?

காதலென்ற கத்தி
உன்ன குத்தியும்
புத்தி வரவில்லையடா!

காயங்கள் ரணமாகி
ரத்த ஆறு ஓட
மேன் ரோட் பாலத்தில்
என்னடா கூட்டம்?

**டி. எல். நஸீம்**
கிண்ணியா 01



## புதிய பதாகைகள்

பகலையும் சேமித்து
பட்டினி கிடக்கிறது காலம்
சித்தெறும்பும் ஏமாந்து போகிறது
சீனிப்போத்தலை நம்பி

காலை நேரத்தையும் தன்
கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது
பிளேன் டீ

பாதையில் புதிய
பதாதைகள்
வெள்ளம் வராத வீடு
வெடிக்காத சிலிண்டர்

ராத்திரித் திருமணங்களும்
ரகசியத் திருமணங்களும் அதிகரிப்பு
வெறுமையின் வெளிப்பாடு
நகைக்கு செலவழிக்க வேண்டாம்
பெண்வீட்டாரின் பெருந்தன்மை

மண்ணை அள்ளித் தலையில்
கொட்டுகிறது குழந்தை
புரிந்தா? புரியாமலா?

நிலவே நீ
தூரத்தில் இருந்து விடு
அல்லது எப்போதும் போல
நில்லாமல் ஓடிவிடு
காற்றே நீ
கைகளுக்குள் அகப்பட்டு
விடாதே

அசந்து தூங்கி விட்டால்
ஆளையே விற்கின்ற காலம்
பஞ்ச பூதங்களே
பயந்து கொள்ளுங்கள்

பகல் நேரத்திலும் யானைகள்
பயப்படாமல் வருகிறது
ஐந்து மணிநேர மின்வெட்டாம்

டீசல் இல்லாத காரணத்தால்
டிப்பர் விபத்துக்களில்
குறைவு

பாலுக்கு வரிசையில் நின்ற
தகப்பனுக்கு
பாணும் பருப்பும் கொண்டு செல்லும்
பிள்ளை

விளைந்த வயலில்
காவல் பொம்மையாய்
வெட்டு மிஷின்

**பெரியமடு நிஹ்ரி**

## ரஷ்யா + உக்ரைன் போர்



உலக அரசியல்
உள்வாங்கி உலுக்கிய யுக்தி
அதிகார மோகம்
முரண்பாட்டின் சக்தி
அகங்காரத்தின் வேகம்
பிளவுகளின் பக்தி

சோவியத்து யூனியனில் ஏற்பட்ட விரோதம்
யூரோப் யூனியனில் கொடுக்கப்பட்ட குரோதம்
நிலத்தில் இருந்து விலகிய பூர்வீகம்
களத்தில் திறந்து ஒழுகிய தீவிரம்.

உறவுகளின் உணர்வுபூர்வம் எங்கும்
புகைப்படத்தில் உருக்குலைப்பது ஏங்கும்
வலியுடன் வாழ்வில் தங்கும்
கவலைகளில் கண்கள் கலங்கும்.

வழி விடாது சதி தீட்டிய திட்டம்
ரணங்கள் நதியாக வழிந்தோடும் கட்டம்
ஐ நா மௌனம் காக்கும் சட்டம்
சாபத்தின் சகாப்தம்.

இதற்கிடையிலும் இயற்கை
காற்றின் அனுமதியில்
பூக்கள் மண்ணில் மலரும்
துர்நாற்றம் விண்ணில் வீசும்
விதிக்கு சாயம் பூசும்
சதிக்குள் காயம் பேசும்.

அப்பாவி மக்கள்
அனாதையாக்கப்படும் வடுக்கள்
தப்பித்து தாவி முட்கள்
விளாசிய குண்டுகள்
துணுக்கை துளைக்க
தணிக்கை நிலைக்க
பகடுகாயாக திணிக்கப்பட்டு
புறக்கணிப்பட்ட யுத்தத்தின்
இரத்தம் தேய்ந்து கிடக்கிறது.

நேட்டாவின் படைகள்
தோட்டாவின் தடைகள் நுழைய
விளையும் மூன்றாம் உலக போரின்
பிரகடனம் பின்வரும் பிரதிபலிப்பு
பிரத்தனைகள் கோர்க்கட்டும்.

**மபாஸ்**

## பேருவளையில் நவீன வசதிகளுடன்

# 'Futsal' விளையாட்டு திடலுடன் கூடிய சிற்றுண்டிச்சாலைகளின் திறப்பு விழா இன்று


இராஜாங்க அமைச்சர்
பியல் நிசாந்த டி சில்வா


பாராளுமன்ற உறுப்பினர்
மர்ஜான் பளீல்


பேருவளை நகர பிதா
மஸாஹிம் மொஹமட்


தொழிலதிபர்
பாஹிம் தாலிப்

**பேருவளை, காலி வீதி ஹெட்டிமுல்ல சந்தியில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள புட்சல் (Futsal) விளையாட்டுத் திடல் மற்றும் பேர்கோ ஸிடி (Burgo City) பல்வகை உணவகம் உள்ளடங்கிய உல்லாசபுரி இன்று 05ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வாவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது**

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத் மற்றும் பிரதேச அரசியல் பிரமுகர்கள், பிரதேச, மாவட்ட, மாகாண முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பேருவளை தேர்தல் தொகுதியிலுள்ள தர்கா நகரை பிறப்பிடமாகக் கொண்ட பிரபல தொழிலதிபரும் சமூகநலன் விரும்பியுமான பாஹிம் தாலிப் அவர்களின் உழைப்பில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பேர்கோசிடி 'Burgo City' என்ற பெயரில் அமையப் பெற்றுள்ள இவ் வேலைத்திட்டம் சுமார் 67 பேர்ச் நிலப்பரப்பில் சுமார் 26 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு இன்று பிரதேசத்தை சேர்த்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்திலுள்ள மூவினங்களையும் சேர்ந்த (தமிழ், முஸ்லிம், சிங்களம்) வாலிப, யுவதிகளே தற்போது இங்கு பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் இன, ஐக்கியம் நல்லிணக்கத்திற்கு ஒரு முன்மாதிரியாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகவுள்ளது.

அதேபோன்று சங்கிலித் தொடரான பயன்பாடாகவும் இதன் பணிகள் வியாபிக்கவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கும் கூடிய வேலை வாய்ப்புகள், வருமான உயர்வுகளும் ஏற்பட வழி பிறந்துள்ளதை பலரும் பாராட்டியுள்ளனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இப்பிரதேசத்தின் மாவட்ட இளம் வாலிப, யுவதிகளின் வாழ்வை நாசமாக்கும் வீண் பொழுது போக்குகளில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய பேராபத்தான சூழ்நிலையை மாற்றி, உள்ளத்திற்கும் உடலுக்கும் சிறந்த ஆரோக்கியம் கிடைக்கும் சிறப்பான வாய்ப்புக்கு வழி பிறக்கிறது எனலாம்.

உரிமையாளர் பாஹிம் தாலிபும், வாலிபர்கள் தவறான திசையில் பயணிப்பதை திசை திருப்புவதை தடுப்பதை பிரதான நோக்காகக் கொண்டே இதனை நிர்மாணித்ததாகக் குறிப்பிடுகிறார்.



கம்பீரமாக அழகாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் எங்கும் காணப்படாத வகையில் ஒரே இடத்தில் பல்வகையான விளையாட்டுக்களும் அதனை ஒட்டிய நிலையில் பலதரப்பட்ட உணவுகளை உள்ளடக்கிய உல்லாச உணவகமும் அமையப் பெற்றுள்ளன. மாவட்டம், மாகாணத்தில் மட்டும் அல்லாது இலங்கைத் தீவிலேயே இத்தகைய திட்டமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

பூர்வீக வரலாறு படைத்த பேருவளை பிரதேசம் இதன் மூலம் மேலும் புகழ் பெறும் என்பதை எதிர்பார்க்கலாம்.

இது இப்பிரதேசத்திற்கு புகழ் சேர்ப்பதுடன் நின்றுவிடாது இப்பிரதேசத்தில் உள்ள இளைஞர், யுவதிகள் பலருக்கும் இதன் மூலம் தொழில் வாய்ப்பையும் பெற்றுத் தருவதாகவும் அமைந்துள்ளது.

இத்திடலில் தலைநகரின் முன்னோடி நட்சத்திர ஹோட்டலில் பணிபுரிந்து அனுபவம் பெற்ற 45 இளைஞர், யுவதிகள் வேலை செய்து வருகின்றனர். இதில் 22 பேர் இதே

வாலிப பருவத்தினர் போதையின் பின்னால் வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இத்தகைய முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலில் கிரிக்கெட், பெட்மின்டன், பிலியட், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற வாலிபர்களைக் கவர்ந்திழுக்கும் விளையாட்டுகளுக்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்றே, உணவகத்திலும் நவீன உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

இங்கு *ice burg* என்ற பெயரில் *desserts , gelato ice cream* பலவகையான *coffee* மற்றும் குளிர்பானங்கள் தயாரிக்கப்படுகிறது. பேருவளையில் இவையெல்லாம் ஓர் இடத்தில் ஒரே கூரையின் கீழ் கிடைப்பது மிகவும் அருமையானதாக இருக்கிறது.

இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலில் கிரிக்கெட், பெட்மின்டன், பிலியட், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற வாலிபர்களைக் கவர்ந்திழுக்கும் விளையாட்டுகளுக்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்றே, உணவகத்திலும் நவீன உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

மூவேளை உணவுகள், இடைவேளை சிற்றுண்டி வகைகள் மற்றும் சுவைமிகு குளிர்பானங்கள், தயிர், யோகட் உள்ளிட்ட ஆரோக்கிய உணவுகள் என்பன தயார் செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. இது 'கொபி ஷொப்' என்றபெயரில் இயங்குகின்றது.

பேர்கர், பீஸா, அரேபிய உணவு, துருக்கி, இத்தாலி நாடுகளின் உணவுகள் கூட இங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்த வேலைத்திட்டத்தில் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதால் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள தொழில் வளங்கள் சுமையும் சற்றுதளர்வு காணவும் வழி பிறக்கிறது.

*ice burg dessert* உணவகம் காலை 7:30 மணிக்கும் பிரதான உணவகம் பிற்பகல் 12 மணிக்கும் ஆரம்பிக்கப்பட்டு அதிகாலை 2 வரை திறந்திருக்கும். விளையாட்டு அரங்கங்கள் காலை 8 மணியில் இருந்து இரவு 2 மணி வரை திறந்திருப்பதோடு றமழான் மாதங்களில் அதிகாலை 3 மணி வரை திறக்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்காக சகல ஏற்பாடுகளும் இங்கு எப்போதும் தயார் நிலையில் உள்ளன. எதிர்காலத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு நட்சத்திர ஹோட்டல் அமைப்பிலான விடுதி வசதிகள், பல்வகை உணவுகளும் இங்கு பெற்றுக்கொள்ள முடியுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

**தொழிலதிபர் பாஹிம் தாலிபுடன் நேர்காணல்;**



**கேள்வி: களுத்துறை மாவட்டத்திலேயே முதலாவது உயர்தர நட்சத்திர ஹோட்டலாக அமையும் என்கிறீர்களா?**

**பதில்:** ஆம். இது மட்டுமல்ல. எனது புட்சல் விளையாட்டு திடலும் களுத்துறை மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கை நாட்டிலேயே எங்கும் அமையப்பெறாத மிகவும் பாரியளவிலான கருத்திட்டமாக உள்ளது.

**கேள்வி: மேற்படி கருத்திட்டங்கள் உங்கள் உள்ளத்தில் உருவெடுக்க காரணியாக அமைந்த பின்னணி என்ன?**

**பதில்:** நான் ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் நகரில் சுமார் 22 வருடங்களாக பல தரப்பட்ட வியாபாரங்கள் செய்து வந்துள்ளேன். அதில் சுமார் 17 வருடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான போக்குவரத்து சேவையை ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்கத்துக்கு வழங்கும் நிறுவனத்தை நடத்தி அதில் பல தேச மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்துள்ளேன். அத்தகைய என்னுடைய வியாபார அனுபவங்களை வைத்து இலங்கையிலும் நிறுவனமொன்றை ஆரம்பித்து பலருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனை எனக்குள் தோன்றியது.

**கேள்வி: நீண்ட காலம் அங்கு வாழ்ந்த நீங்கள் ஐக்கிய இராச்சியத்தின் பிரஜாவுரிமை பெற்றுள்ளீர்களா?**

**பதில்:** ஆம். அந்நாட்டின் பிரஜா உரிமை பெற்று இலங்கைப் பிரஜையாகவும் இரட்டைப் பிரஜா உரிமை பெற்றுள்ளேன். எனது மனைவி உட்பட நான்கு பிள்ளைகளும் இவ்வாறே இரட்டைப் பிரஜா உரிமையுடன் வாழ்கிறோம்.

**கேள்வி: இலங்கையில் உங்கள் வசிப்பிடம் எங்குள்ளது?**

**பதில்:** தர்ஹா நகரில் பிறந்த நான், தற்போது தெஹிவளையையே வசிப்பிடமாக்கியுள்ளேன்.

**கேள்வி: இவ்வளவும் கூறிய நீங்கள், உங்கள் வாழ்க்கைச் சுருக்கத்தை கூறவில்லையே?**

**பதில்:** தர்ஹாநகரில் பேரும் புகழும் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த மர்ஹூம்களான தாலிப் மரிக்கார் ஹாத்தமுல் ஜன்னா தம்பதிகளின் புதல்வனாக 1968 ஆம் ஆண்டு பிறந்தேன். ஆரம்பக்கல்வியை அல்ஹம்ரா கல்லூரியில் பெற்றேன். பின்னர் தர்ஹாநகர் ஸாஹிரா கல்லூரியில் இணைந்து க.பொ.த. சாதாரண தரம் வரை படித்தேன். அதனைத் தொடர்ந்து தந்தையின் தொழிலில் ஈடுபடாமல் சுயமாக தொழில் செய்யும் நோக்குடன் 1987இல் என்னுடைய 18ஆம் வயதில் ஜப்பான் பயணமானேன். 08 வருடங்கள் உழைத்து என்னுடைய கணவரை இழந்த தாயின் கடமைகளை நிறைவேற்றிவிட்டு 1995ஆம் ஆண்டு 'டோபி கம்பனி' உரிமையாளரின் இளைய மகளை கரம் பிடித்தேன்.

தொடர்ந்து வாழ்க்கையில் பல சவால்களுக்கும் முகம் கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டேன். பல இழப்புகளையும் சந்தித்தேன். தோல்வியின் விளிம்புக்கே சென்று பெரும் கடனாளியான நிலையில் மீண்டும் ஜப்பான் சென்று உழைத்து நிவாரணம் பெற்று, குடும்பத்தோடு ஐக்கிய இராச்சியம் சென்று மாற்றுத்திறனாளி, மனநலக்குறைபாடுகள் உள்ள பிள்ளைகளைப் பராமரிப்பதில் கை தேர்ந்தேன். இன்பம் துன்பம் ஆகிய சந்தர்ப்பங்களில் எல்லாம் என் மனைவியே மீண்டெழ உறுதுணையாக நின்றார். இன்னும் எனது வர்த்தக, தொழில் முயற்சிகளில் எல்லாம் பக்கபலமாக இருந்து கைகொடுத்துக் கொண்டிருக்கிறார்.

**கேள்வி: உங்கள் பிள்ளைகளும் வெளிநாடுகளிலே வசிப்பதாகக் கூறினீர்கள். அவர்களின் நிலை என்ன?**

**பதில்:** எனது பிள்ளைகளும் என்னைப் போன்றே சுயமாகப்படித்து, தம் அறிவுக்கேற்றபடி சுயமாகவே தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். மூத்தமகன் எகிப்து நாட்டில் சோனிஹமாக உணவகம் ஒன்றை நடத்தி வருகிறார். இரண்டாவது மகள் அவரும் பல்கலைகழக பட்டதாரி. லண்டனில் உள்ள என்னுடைய நிறுவனத்தை என் இடத்தில் இருந்தே நடத்தி வருகிறார். இளைய மகன் பல்கலைக்கழகத்தில் கடைசி வருடம் படித்துக்கொண்டிருக்கிறார். இளைய மகள் 9ம் வருட மாணவி.

**கேள்வி: நீங்கள் எழுத்துத்துறையிலும் ஈடுபாடு காட்டுகிறீர்களாமே?**

**பதில்:** 2007 முதல் 2014 ஆம் ஆண்டுவரை இலங்கையில் வெளிவந்த 'நேர்வழி' மாத சஞ்சிகையை நடாத்தி வந்துள்ளேன். தற்போது சமூக வலைத்தளத்தில், சமூக விழிப்புணர்வுக் கட்டுரைகளை எழுதி வருகின்றேன். அவற்றுக்கென்றும் பெரும்பாலான வாசக, நேயர்கள் உள்ளார்கள்.

**கேள்வி: இவற்றுக்குப் புறம்பாக வேறு விசேட ஈடுபாடுகள் உண்டா?**

**பதில்:** நான், எனக்கு வசதி வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் சமூக நலத்தொண்டுகளில் ஈடுபடுவதுண்டு. இப்போதும் எனக்குக் கிடைக்கும் வருமானத்தில் 10 வீதத்தை ஒதுக்கி வருகிறேன். தேவையுடைய மக்களுக்கும் வசதி குறைந்த மக்களுக்கும் வழங்கி, ஏழைகளின் துயர் துடைத்து வருகிறேன். நானும் பல கஷ்ட நஷ்டங்களுக்கு முகம் கொடுத்து முன்னேறியதால் கஷ்டப்படுவோருக்கு கைகொடுப்பதில் ஈடுபாடு காட்டவும் தவறமாட்டேன்.

**கேள்வி: நீங்கள் வெளி நாட்டில் இருக்கும் சந்தர்ப்பங்களில் இங்குள்ள நிறுவனங்களைக் கவனிப்பது எப்படி?**

**பதில்:** என்னால் இயக்கப்படும் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் நம்பிக்கையான முகாமையாளர்களை அமர்த்தியுள்ளேன். எனவே அவர்கள் என்னைப் போன்றே தம் பணியினை மேற்கொள்கிறார்கள் என்ற நம்பிக்கையுடனே எனது நிறுவனங்கள் எல்லாம் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

**கேள்வி: வருங்கால சந்ததியினருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

**பதில்:** முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். தொழில் மட்டுமல்ல எல்லா முயற்சிகளின் போதும் கஷ்டம், நஷ்டம் வரலாம். எந்த சந்தர்ப்பத்திலும் முயற்சியைக் கைவிடக்கூடாது. விரக்தியடைந்து சோர்ந்து போகக்கூடாது. பயணத்தைத் தொடர்ந்தால் வெற்றி இலக்கை அடையலாம். வெற்றியின் ஒருபகுதி தர்மத்திற்காகவும் ஒதுக்க வேண்டும். அப்போதே முயற்சி மேலும் அபிவிருத்தியடையும். நான் அனுபவத்தில் கண்ட உண்மை இதுவாகும். இருகை சேவை போல துணைவியும் துணை நின்றால் மேலும் முன்னேற்றம் காணலாம்.









பி.எம் முக்தார்
பேருவளை விசேட நிருபர்

# ரஷ்யா - உக்ரைன் போர்

# அணு ஆயுத பாவனைக்கு வித்திடுமா?



ரஷ்யா உக்ரைன் மீதான படையெடுப்பை ஆரம்பித்து பத்து நாட்களுக்கும் மேலாகி விட்டன. தரை, கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவரும் இப்போர் தொடர்ந்த வண்ணமுள்ளன. இப்போரின் விளைவாக பெரும் அழிவுகளும் இழப்புகளுக்கும் சேதங்களும் ஏற்பட்டு வருகின்றன.

இப்போரை ஆரம்பித்த சில தினங்களுக்குள் உக்ரைய்னின் செயலிழந்துள்ள செர்னோபில் அணு உலையை ரஷ்யப் படையினர் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்த சில தினங்களுக்குள் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், 'அணு ஆயுத தடுப்புப் படைகளை தயார் நிலையில் வைக்குமாறு பாதுகாப்பு துறைக்கு உத்தரவிட்டார். அத்தோடு உக்ரைன் விவகாரத்தில் வேறு யாராவது தலையீட்டால் வரலாற்றில் கண்டிராத பேழிவைச் சந்திக்க நேடும்' என்றும் வெளிப்படையாக எச்சரித்தார்.

புட்டினின் உத்தரவுக்கு அமைய அணு ஆயுதத் தடுப்பு படை தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியது.

இவ்வாறு உக்ரேய்ன் மீதான போர் இடம்பெற்றுவரும் சூழலில் உக்ரைய்னில் அமைந்திருக்கும் ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய அணு உலையான சபோரிஸ்ஸியாவை ரஷ்யப் படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர். இதனை உக்ரைன் உறுதிப்படுத்தியுள்ளதோடு ரஷ்ய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் அந்த அணு உலையின் கட்டடத்தில் தீ பரவல் ஏற்பட்டுள்ள போதிலும் அத் தீயை அணைக்க உக்ரைன் தீயணைப்பு படையினருக்கு ரஷ்ய படையினர் இடமளிக்காது தாக்குதல் நடாத்துவதாகவும் இதன் விளைவாக பெரிய பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ரஷ்யா, உக்ரைன் மீது முன்னெடுத்துள்ள போரின் ஒவ்வொரு அசைவும் அணுவாயுதங்கள் பயன்படுவதற்கான வாய்ப்பை அதிகரித்து வருவதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் பென் வாலஸ், 'மேற்கு நாடுகள் அணு ஆயுதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க வல்லவை' என்பதை அறிந்துதான் புட்டின் அணுவாயுத தடுப்பு படைகளை தயார் நிலையில் வைக்குமாறு குறிப்பிட்டாரேயொழிய அவர் உண்மையில் அதைப் பயன்படுத்த விரும்ப மாட்டார். அது வெறும் வாய் வார்த்தை அறிவிப்பாகவே இருக்கும்' எனத் தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் உக்ரைன் மீதான போரின் நகர்வுகளை உன்னிப்பாக அவதானிப்பது மிகவும் அவசியமானது என்று பாதுகாப்பு துறை ஆய்வாளர்கள் சிலர் தெரிவித்துள்ள நிலையில் ஓய்வு பெற்ற பிரித்தானிய ஜெனரல் ஒருவர் புட்டினின் அறிவிப்பை, 'கோபம், விரக்தி மற்றும் ஏமாற்றத்தின் அடையாளம்' என்றுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியின் அச்சுறுத்தல் வெறும் எச்சரிக்கை மட்டுமேயன்றி அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியத்தைக் குறிக்கவில்லை எனக் கொள்ளப்பட்டாலும், ஒரு தரப்பு தவறாகப் புரிந்து கொண்டால் நிலைமை கைமீறிப் போகும் அபாயமும் உள்ளது என்ற கருத்தும் நிலவவே செய்கிறது. .

இற்றை வரையும் மேற்கத்திய நாடுகள், அளவுகடந்து எதிர்வினையாற்றாமல் எச்சரிக்கையாக உள்ளன. அமெரிக்க ராணுவம் டெப்கோன் (Defcon) எனப்படும் தன் சொந்த பாதுகாப்பு தயார்நிலை எச்சரிக்கை நிலையைக் கொண்டுள்ளது, வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி, 'இந்த நேரத்தில் தன் அணு ஆயுத எச்சரிக்கை நிலையை மாற்றுவதற்கு எந்தக் காரணமும் இல்லை' என்று கூறியுள்ளார்.

பிரித்தானியாவும் கடலில் அணு ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்திருக்கின்றன. ஆனால், பகிரங்கமாக எதையும் கூற அது விரும்பவில்லை. ரஷ்ய அறிக்கையைப் பெரிய அளவில் பொருட்படுத்தாமல் இருப்பதாகக் காட்டிக் கொள்வதே அதன் நோக்கமாகத் தெரிகிறது. மாறாக, அதற்கு முக்கியத்துவமளித்து எதிர்வினையாற்றினால் ரஷ்யா மேலும் நடவடிக்கைகளில் இறங்கக்கூடும்.

இது தற்போது அணுசக்தி நெருக்கடி அன்று என்றும் அவ்வாறு மாறிவிடக்கூடாது என்றும் மேற்கத்திய பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சர் பென் வாலஸ், 'ரஷ்ய அணு ஆயுதங்களின் நிலையில் எந்த மாற்றமும் தென்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் உன்னிப்பாக கவனிக்கப்படும் என உளவுத்துறை வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

பனிப்போரின் போது, மொஸ்கோவின் அணு ஆயுதக் கிடங்கைக் கண்காணிக்கவென மேற்கில் ஒரு பெரிய உளவுத்துறை கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அவற்றின் ஊடாக அணுவாயுதங்களையும் படைகளையும் தயார் செய்தல் போன்ற நடத்தை மாறுபாட்டைக் கண்டறிய, செயற்கைக் கோள்கள், இடைமறித்த தகவல் தொடர்புகள் மற்றும் பிற ஆதாரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அவற்றில் பெரும்பாலானவை அணு ஆயுதங்களின் நிலையில் மாற்றமிருப்பதாகத் தெரிவிக்கவில்லை.

மேலும் நடத்தையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுமா என்பதைப் புரிந்து கொள்ள மேற்கு நாடுகள் ரஷ்ய நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. இதுவரை எந்த அறிகுறியும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இப்போர் அணுவாயுதப் பயன்பாட்டுக்கும் வித்திடாத வகையில் விரைவாகவும் வேகமாகவும் முடிவுக்கு வர வேண்டும் என்பதே அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களின் ஒரே எதிர்பார்ப்பாக உள்ளது.

# கலீபதுல் குலபா மர்ஹூம் மௌலவி ஜே. அப்துல் ஹமீத் ஆலிம் (பஹ்ஜி)

ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபா மர்ஹூம் மௌலவி ஜே. அப்துல் ஹமீத் ஆலிம் (பஹ்ஜி) யின் 40வது நாள் நினைவு மஜ்லிஸ் அண்மையில் ஷாதுலிய்யா தரீக்காவைப் பின்பற்றும் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டது.

உலகில் பிறந்து வாழ்ந்து மரணிக்கின்ற எல்லா மனிதர்களும் மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடிப்பதில்லை. அவர்கள் மக்களால் முறையாக நினைவு கூறப்படுவதுமில்லை.

வாழும் காலத்தில் மக்களுக்கு சமூகத்திற்கு நாட்டுக்கு நன்மை பயக்கும் நற்கருமங்கள் தன்னை அர்ப்பணித்த மனிதர்களே மக்கள் உள்ளங்களில் பதிந்து விடுகிறார்கள். அண்மையில் எம்மை விட்டும் பிரிந்து சென்ற கலீபத்துல் குலபா மர்ஹூம் அப்துல் ஹமீத் பஹ்ஜியும் குறிப்பிடத்தக்க ஒருவராகவே விளங்குகிறார்.

வடமேல் மாகாணத்தில் உள்ள புத்தளம் மதவாக்குளம் முஸ்லிம் கிராமத்தில் 1956 இல் மர்ஹூம்களான ஜமால்தீன் நெய்னாலெப்பை உம்முகுல்தூம் தம்பதியின் புதல்வராகப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மதவாக்குளம் முஹம்மத் அலி மகா வித்தியாலயத்திலும் ஆன்மீகக் கல்வியை இப்பகுதியிலுள்ளகுர்ஆன் மத்ரஸா விலும் கற்றுத் தேர்ந்தார். இவரை ஒருசன் மார்க்க அறிஞராக உருவாக்க வேண்டும் என்ற பெற்றோரின் பேராவலினால் 1970 ஆம் ஆண்டில் இலங்கையில் முதலாவது அரபிக் கல்லூரியாக மிளிர்கின்ற காலி மக்கிய அரபுக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார்.

அங்குசன் மார்க்க அறிஞர் அறிவுதீபம் மர்ஹூம் அல் உஸ்தாத் கலீபத்துல் குலபா அஷ்ஷாதுலி மௌலவி எம்.எம். ஸூ{ஹருத்தீன் ஆலிம் அல் பஹ்ஜி தனது முதலாவது அரபுக் கல்வியை ஆரம்பித்தார். அந்தஅடித்தளம் அவரது ஆன்மீக பயணம் சிறப்பாக அமைய வழி கோலியதென்றால் மிகையாகாது.

1972 ஆம் ஆண்டுமார்க்க உயர் கல்விபெறுவதற்காக காலி கோட்டையில் உள்ள பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யா அரபுக் கல்லூரியில் இணைந்து கற்றார்.ஏழு வருடங்கள் கற்றுத் தேர்ந்து 1979 ஆம் ஆண்டு பஹ்ஜி பட்டம் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து காலி ஜிப்ரியா அரபுக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். இரண்டு ஆண்டுகள் அங்கு கடமையாற்றிய பின்னர் 1981ஆம் ஆண்டு ஷாதுலிய்யா தரீக்காவின் தலைமையகமான கொழும்பு உம்மு ஸாவியாவில் பிரதம இமாமாக நியமிக்கப்பட்டார்.

அன்று முதல் தொடர்ந்து 42 ஆண்டுகளாக உம்மு ஸாவியாவின் பிரதம இமாமாக இருந்து மரணிக்கும் வரை பணியாற்றி வந்தமை சிறப்பம்சமாகும். முகத்தமாகவும் ரயீஸுல் முகத்தமாகவும் திகழ்ந்த அன்னார் 1983ஆம் ஆண்டுமார்ச் மாதம் 20ஆம் திகதி ஷேகு நாயகம் கலாநிதி முஹம்மத் பாஸி பின் முகம்மது இப்றாஹிம் (ரஹ்) அவர்களினால் உம்மு ஸவாயா கலீபாவாக நியமிக்கப்பட்டார். அத்துடன் கொழும்பு பெரியபள்ளி வாசலின் கதீபாகவும் சுமார் முப்பது வருடங்களாக கடமையாற்றினார் என்பது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். கொழும்பு பெரிய பள்ளி வாசலில் மாதந்தோறும் நடைபெறும் தலைப் பிறை தீர்மானிக்கும் மாநாட்டில் முக்கிய பங்காற்றி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவர் பின்னர்; பிறைக் குழுத் தலைவராகவும் பணியாற்றிவந்துள்ளார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் கோட்டையாக போற்றப்படும் சீனன் கோட்டையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக கௌரவ கதீபாக பணிபுரிந்து இப்பகுதிமக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்திருந்தார். அத்தோடு நாடளாவிய ரீதியில் ஜூம்மா பிரசங்கங்களும் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்தார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் நிறைவேற்று குழு உறுப்பினராகவும் மேற்படி சபையின் கீழ் இயங்கும் பல்வேறு குழுக்களிலும் பிரதான பதவிகள் வகித்துபங்களிப்பு செய்தார். காலி பஹ்ஜதுல் இப்ராஹி மிய்யா கலா பீட உதவிப் பணிப்பாளராகவும் கொழும்பு உம்மு ஸாவியா அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி,புத்தளம் மதவாக்குளம் ஷரபிய்யா அரபுக் கல்லூரி என்பவற்றின் பணிப்பாளராகவும் சீனன் கோட்டை ஜமியத்துல் பாஸிய துஷ் ஷாதுலிய்யா கலாபீட ஆலோசகராகவும் இருந்து சன்மார்க்க அறிஞர்களின் உயர்ச்சிக்கு உரம் சேர்த்து அரும் பணியாற்றினார். தான் பிறந்து வளர்ந்த கிராமமான புத்தளம் மதவாக்குளத்தில் இஸ்லாமிய அறிஞர் பெருமக்களை உருவாக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் ஷரபிய்யா அரபுக் கல்லூரி எந்தப் பெயரில் 1992 ஆம் ஆண்டு அரபுக் கல்லூரி ஸ்தாபித்து இன்று வரை தங்குதடையின்றி சிறப்பாக இயங்க வழி வகுத்தார். இக்கலா பீடத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் இவர் இருந்தார். வடமேல் மாகாணத்தில் ஷரபிய்யா அரபுக் கல்லூரி சன்மார்க்க அறிவு தீபத்தை ஏற்றி வீறு நடை பயின்று கொண்டிருக்கிறது. இதன் மூலம் நூற்றுக்கணக்கான உலமாக்களை உருவாக்கி சமுதாயத்தில் மார்க்க அறிஞர்கள் ஊற்றெடுக்கும் தொண்டாற்றி வருவது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.



இலங்கை ஷரீஆகவுன் சிலின் உப தலைவராகவும் கொழும்பு மெஸஞ்சர் வீதி இஸ்லாமிய நலன் புரி அமைப்பின் தலைவராகவும் பல்லாண்டு காலமாக கடமையாற்றி இப்பகுதியில் பல தரப்பட்ட சமூகநலத் திட்டங்களையும் மேற்கொண்டு அங்குள்ள மக்களின் உயர்வுக்காக தொண்டாற்றியுள்ளார்.

அவரின் இத்தகைய பணிகளை அங்கீகரித்து அரசு அன்னாருக்கு அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியை வழங்கி கௌரவித்திருக்கிறது. ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்கும் சமுதாய பணிக்கும் தன்னையே அர்ப்பணித்த அவர் ஏனைய தரீக்காக்களின் ஷேகுமார்கள் முரிதீன்களுடனும் நட்புறவையும் சகோதர வாஞ்சையையும் வைத்து அனைவருக்கும் முன் மாதிரியாக திகழ்ந்து வந்தார்.

மர்ஹூம் கலீபதுல் குலபா ஸூ{ஹருத்தீன் ஆலிம் 2001 ஆம் ஆண்டு வபாத்தானார்கள். அதன் பின் நீண்ட காலமாக கலீபதுல் குலபா நியமனம் இடம்பெறவில்லை. 12 வருடங்களின் பின்னர் 57 வயதை பூர்த்தி செய்துள்ள மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜி அவர்கள் ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவாகநியமிக்கப்பட்டார்கள்.

அவர் ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிவரும் மகத்தான பணிகளை அங்கீகரித்து ஆமோதித்து புனித மக்க மாநகரில் உள்ள உலக பாஸிய்யதுஷ் ஷாதுலிய்யா தரீக்காவின் தலைமையகமான பைத்துல் பாஸியில் இருந்து அப்போதைய இருந்து அப்போதைய ஷேகு நாயகம் அவர்களினால் மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜி அவர்கள் அகில இலங்கை ஷாதுலிய்யா தரீக்காவின் தலைவராக கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டார்.

கலீபதுல் குலபா மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜி அவர்கள் 40 ஆண்டுகளாக இத்தரீக்காவின் கலீபத்துல் குலபாவாக

மகத்தான பணியாற்றியுள்ளார். கஷ்டமான சவால்கள் நிறைந்த கால கட்டங்களில் அவர் தரீக்காவின் வளர்ச்சிப் பணிக்காக மக்களை ஆன்மீக வழியில் ஈடுபடுத்துவதற்காக தன்னையே அர்ப்பணித்து பங்காற்றினார்.

இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சி கருதி கலீபதுல் குலபாமர்ஹூம் ஸு{ஹருத்தீன் ஆலிம் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட குலபாக்கள் முகத்தமின்கள் கவுன்சில் அன்னவர்களின் மறைவுக்குப் பின் 2001 ஆம் ஆண்டு அகில இலங்கை குலபாக்கள் முகத்தமின்கள் கவுன்சிலின் தலைவராக மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜி நியமிக்கப்பட்டார். அன்று முதல் அன்னார் தரீக்காவின் பணிகளை நாடளாவிய ரீதியில் தலைமை வகித்து திறம்பட செய்து வந்தார்.

நாட்டின் பலபாகங்களுக்கும் குறிப்பாக தரீக்காவின் பணிகள் மங்கி வருகின்ற கிழக்கு

மாகாணத்துக்கும் பல முறை விஜயம் செய்து இப்பணிகளில் முழு மூச்சாக ஈடுபட்டு 2009 ஆம் ஆண்டு கொழும்பு உம்மு ஸாவியாவிலும் 2010ஆம் ஆண்டு பாணந்துறை தொட்டவத்தையிலும் ஷாதுலிய்யா தேசிய மாநாடுகளை நடாத்தி தரீக்காவின் சிறப்பம்சங்களை மேலோங்கச் செய்தார். அத்துடன் மாவட்ட,பிரதேச ரீதியாகவும் சிறு கருத்தரங்கு கூட்டங்கள் போன்ற நிகழ்வுகளை நடாத்தி தரீக்காவின் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தோடு எகிப்து,யெமன்,சவுதிஅரேபியா,லிபியா இந்தியா மற்றும் பல நாடுகளில் உள்ள ஷாதுலிய்யா தரீக்காவின் குலபாக்கள், இஸ்லாமிய அறிஞர்கள் போன்றவர்களுடன் சினேகபூர்வ தொடர்புகளை வைத்திருந்த அவர் லிபியா,ஈராக், இந்தியா,சவுதிஅரேபியா,பலஸ்தீன்,குவைத்,கத்தார் ஜோர்தான்,பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாடுகளிலும் சூபித்துவ கருத்தரங்குகளிலும் இலங்கையை பிரதிநிதிப்படுத்தி பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். அன்னார் 2009 ஆம் ஆண்டு எகிப்து ஹுமைஸராவில் உள்ள ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் குதுபுல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரழி) அவர்களின் புனித ரவ்ழாவை தரிசித்து அன்னவர்களின் ஆசீர்வாதத்தையும் பெற்றவராவார். அத்தோடு எகிப்தில் உள்ள அல் அஸ்ஹர் சர்வகலாசாலையில் நடைபெற்ற கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார். மர்ஹூம் கலீபதுல் குலபா அவர்கள் நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாது கடல் கடந்த நாடுகளிலும் மார்க்க சொற்பொழிவுக்காக விசேடமாக அழைக்கப்பட்டார். தமக்கு இவ்வாறான நாவன்மை,தரிக்காவுடைய விளக்கங்கள் போன்றவை கிடைக்க தமது குருநாதர் ஷேகு நாயகம் டாக்டர் முஹம்மது இப்ராஹிம் அல் பாஸி (ரஹ்) அவர்களுடைய துஆ பரக்கத்தும் ஆசீர்வாதமும் என்பதனை நன்றியுணர்வோடு சதாவும் நினைவுபடுத்துபவராகத் திகழ்ந்தார்.

சுன்னத் ஜமாஅத் அகீதாவில் இறுதி மூச்சுவரை உறுதியுடன் இருந்தார். சன்மார்க்கத் துறையில் ஆழமான தெளிவான பழுத்த சிந்தனை மிக்க நல்ல அனுபவசாலி.65 வருட வாழ்க்கையில் 42 வருடத்தை சன்மார்க்க,தரீக்கா,சமய,கலாசார பணிக்காக தன்னையே அர்ப்பணித்தார்.

தாய் நாட்டின் மீது பற்றும் பாசமும் கொண்டவராகவும் இன,மத ஒற்றுமைக்காகவும் அன்னார் பங்களிப்புச் செய்துள்ளார் இதனால் சர்வமத குருமார்கள் பெரும்பான்மை சமயத்தினரால் பெரிதும் மதிக்கப்பட்டார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காக இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக அஹ்லுஸ் சுன்னத் வல் ஜமாஅத் அகீதாவை கட்டிக்காக்க அன்னார் பல சவால்களையும் தைரியத்துடன் எதிர் கொண்டு இரவு,பகல் பாராது பயணித்த பாதைகள் எமதுவாழ்வில் என்றும் மறக்க முடியாது. ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபத்துல் குலபாவாக இருந்து முன்மாதிரியான தலைமைத்துவம் வழங்கினார்.

ஊடகவியலாளர் என்ற வகையிலும் இத் தரீக்காவின் இஹ்வான் என்ற வகையிலும் சுமார் 37 வருடகாலம் இப் பெரியாருடன் மிக நெருங்கிப் பழகினேன்.ஒரு ஆலிமுக்கு இருக்க வேண்டிய அத்தனை நற்பண்புகளும் இவரிடம் காணப்பட்டன. ஊடகவியலாளர்களுடன் மிக அன்பாகப் பழகினார். பிரச்சினைகளை சரியாக அணுகி அவற்றை சுமுகமாக தீர்த்து வைக்கும் திறமை இவரிடம் காணப்பட்டது. ஒப்படைத்த பணியை சிறப்பாகவே செய்து முடிப்பார்.

முஸ்லிம் தனவந்தர்களுக்கு ஆன்மீகக் கல்வி, உலகக் கல்விக்கு உதவி செய்வதைப் பற்றி குர்ஆன், ஹதீஸ் விளக்கமளித்து இப்பணிக்காக வாரி வழங்க அறிவுரை வழங்கி வந்தார். அதன் ஒரு வெற்றியாக மதவாக்குளம் ஷரபிய்யா அரபுக் கல்லூரியைக் குறிப்பிடலாம். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். நோயுற்ற நிலைகளில் கூட ஷாதுலிய்யாத் தரீக்காவின் வளர்ச்சிக்காக பாடுபட்டார்.

தனவந்தர்களின் உதவி கொண்டு மதவாக்குளத்தில் 5000 பேர் வரை தொழக் கூடிய பெரியபள்ளிவாசல் ஒன்றை அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு உம்மு ஸாவியாவிலும் ஓர் அரபுக் கல்லூரியை அமைப்பதில் அதன் நிர்வாகத்தோடு அயராது பாடுபட்டார். ஏழை எளிய பிள்ளைகளின் கல்வி விடயத்தில் இரகசியமான முறையில் உதவிகளை செய்த மாமனிதர். ஒரு மனிதனின் ரூஹு எப்படிப் பிரியும் என்று மார்க்க உபன்னியாசம் செய்து கொண்டிருந்த சமயம் திடீரென சுகவீன முற்று கொழும்பிலுள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். ஒரு மாத காலமாக அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 2022 01 09 ஆம் திகதிகாலை இறையடி சேர்ந்தார்.

பேருவளை
பீ.எம். முக்தார்...

# தமிழகம் முழுவதும் மேயர் நகராட்சி தலைவர் தேர்தல்








தமிழகம் முழுவதும் சென்னை, திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட மாநகராட்சி மேயர், நகராட்சி தலைவர், பேரூராட்சி தலைவர் பொறுப்பிற்கு அறிவிக்கப்பட்டவர்கள் அந்தந்த கட்சி கவுன்சிலர்கள் ஓட்டளித்து தேர்வு செய்து வருகின்றனர்.

21 மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள்; 138 நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள்; 489 பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள் பதவிகளுக்கான மறைமுக தேர்தல், இன்று நடக்கிறது. ஒட்டுமொத்தமாக 1,296 பதவிகள், மறைமுக தேர்தல் வாயிலாக நிரப்பப் பட உள்ளன.

மொத்தம் 21 மாநகராட்சியில் 20 மாநகராட்சியில் திமுக மேயர் பொறுப்பை பெற்றுள்ளது. காங்கிரசுக்கு ஒரு மேயர், இரு துணை மேயர் பதவிகளும், இ.கம்யூ., மா.கம்யூ., வி.சி.க., மதிமுக., உள்ளிட்ட கட்சிகளுக்கு தலா ஒரு துணை மேயர் பதவிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இன்று காலை தமிழகம் முழுவதும் மேயர், நகராட்சி தலைவர், பேரூராட்சி தலைவர் பதவிக்கு மறைமுக தேர்தல் நடந்தது. பல பகுதிகளில் போட்டி இல்லாமல் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு கமிஷனர் மற்றும் அதிகாரிகள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தனர்.

# அதிகம் கடன் வாங்கிய தமிழகம்



2022 நிதியாண்டில், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட தமிழக அரசு அதிக கடன் வாங்கி உள்ளது. அதே நேரத்தில் கடந்த ஆண்டை விட குறைவாகும்.

இது தொடர்பாக ஐசிஆர்ஏ லிமிடெட் ரேட்டின் நிறுவனத்தை சேர்ந்த பொருளாதார நிபுணர் அதிதி நாயர் கூறுகையில்,

கடந்த ஏப்ரல் முதல் பிப்ரவரி வரை பத்திரங்களை வெளியிட்டு தமிழக அரசு ரூ.65,400 கோடி திரட்டி உள்ளது. இது கடந்த 2021 நிதியாண்டில் திரட்டப்பட்ட ரூ.79,500 கோடியை காட்டிலும் 18 சதவீதம் குறைவாகும்.

2022 நிதியாண்டின் முதல் 9 மாதத்தில், மாநில அரசின் வருவாயும் 17 சதவீதம் அதிகரித்து 1.3 லட்சம் கோடி ரூபாய் கிடைத்துள்ளது. வருவாய் செலவீனமும் 1 சதவீதம் அதிகரித்து 1.5 லட்சம் கோடி ரூபாய் செலவாகி உள்ளது. 2022 நிதியாண்டில், ஏப்ரல் டிச., மாதத்தில் மாநில அரசின் மூலதன செலவும் 25,200 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஆண்டை காட்டிலும் அதிகம். கடந்த பட்ஜெட்டில், 2022 நிதியாண்டில் மூலதன செலவு ரூ.42,200 கோடி என மதிப்பிடப்பட்டிருந்தது.அதேபோல், 2022 நிதியாண்டில், 4வது காலாண்டில்(ஜன., மார்ச் ) ரூ.25,800 கோடி கடன் வாங்க உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனவரி மற்றும் பிப் மாதத்தில் மட்டும் ரூ.13,400 கோடி கடன் வாங்கியது.

தமிழகத்திற்கு அடுத்த மஹாராஷ்டிரா ரூ.64,750 கோடி, கர்நாடகா ரூ.59 ஆயிரம் கோடி , உ.பி., ரூ.57.500 கோடி, மேற்கு வங்கம் 57,500 கோடி கடன் வாங்கி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியர்களை மீட்க 130 ரஷ்ய பஸ்கள் தயார் நிலையில்



உக்ரைனில் சிக்கி உள்ள இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினரை மீட்க 130 பஸ்கள் தயாராக உள்ளதாக ரஷ்ய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் சிக்கி உள்ள இந்தியர்கள் அண்டை நாடுகளுக்கு அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து விமானம் மூலம் டில்லி அழைத்து வரப்படுகின்றனர். இதுவரை 17 ஆயிரம் இந்தியர்கள் அழைத்து வரப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள 7 ஆயிரம் பேரையும் மீட்க துரித கதியில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, உக்ரைனில் சிக்கி உள்ள இந்தியர்களை பாதுகாப்பாக அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில், ரஷ்ய தேசிய பாதுகாப்பு கட்டுப்பாட்டு மைய தலைவர் மிகைல் மிஜின்ட்சேவ் கூறியதாக அந்நாட்டு செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டு உள்ளதாவது:

உக்ரைனின் கார்கிவ் மற்றும் சுமி பகுதியில் சிக்கி உள்ள இந்திய மாணவர்கள் மற்றும் வெளிநாட்டினரை, ரஷ்யாவின் பெல்கோரோட் பகுதிக்கு அழைத்து வர 130 பஸ்கள் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். இவ்வாறு அந்த செய்தியில் கூறப்பட்டு உள்ளது.

**முருகப்பெருமான் குறித்து அவதூறு பேச்சு:**

# ஹிந்துக்கள் மனதை புண்படுத்திய சினிமா தயாரிப்பாளர்



சினிமா தயாரிப்பாளர் கே.ராஜன் ஹிந்து கடவுள் முருகனை அவதூறாக பேசி ஹிந்துக்கள் மனதை புண்படுத்தியதாக பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

சென்னையில் நடைபெற்ற 'முகமறியான்' என்னும் திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தை சேர்ந்த கே.ராஜன் பேசுகையில்,

கடவுள் முருகனை கிண்டல் செய்யும் விதமாக கொச்சையாக பேசியுள்ளார். இது ஹிந்துக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பலரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

விழாவில் அவர் பேசியதாவது:

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.. தாயையும் தந்தையையும் வணங்குபவன் வேற கடவுளயுமே நீ வணங்க வேணாம். வணங்காதே.. கடவுள் இல்லை. அம்மா, அப்பாவ தவிர வேற யாருமில்ல. சரி, அந்த கடவுள வச்சு ஒரு புத்தி சொன்னானே. கடவுளையே வச்சு புராணத்துல புத்தி சொன்னானே.. ஒரு நாரதர் வந்து மாம்பழம் கொடுக்குறாரு பார்வதி, சிவன் கிட்ட. ஒரு பழம் கொடுத்துட்டு அவன் போயிட்டான். அந்த மாதிரி ஆள்காட்டி இங்க நிறைய இருக்காங்க சினிமால.. குடும்பத்த ரெண்டா ஆக்கிருவாங்க.

அது மாதிரி நாரதர் கொடுத்துட்டு போயிட்டான். இப்போ அந்த பழம் யாருக்குனு போட்டி. 'உலகத்தை யார் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கு தான் இந்த மாம்பழம் ஞானப் பழம்'னு சொல்லிட்டான். அப்போ முருகன் மயில் ஒன்ன எடுத்துட்டு உலகம் பூரா சுத்தி வர்றான். ஆனா விநாயகர் என்ன பண்ணான், அப்பா அம்மாவ சுத்தி வந்தான். கடவுள் அப்பா, அம்மா தான் என்பதை விநாயகர் மூலமாக சொல்கிற புராணம் அது. வேற ஒன்னுமில்ல அதுல. எவ்வளவும் படிக்க வேண்டாம், அந்த ஒன்ன படிங்க.

விநாயகரே சொல்லிட்டாரு தெய்வம். அப்பா, அம்மா தான் இந்த உலகம். அது தெரியாத தறுதல தான், ஒரு மயில தூக்கிட்டு ஊரெல்லாம் சுத்தி கோவிச்சுகிட்டு பழனில போய் உட்காந்துட்டு இன்னிக்கு வரையும் இறங்க மாட்டீங்குது. ஆனா அது என்னனா.. திருத்தணில ஒன்னு இருக்குனுறான்.. அங்கெங்க ஒரு ஆறு இடம் சொல்றாங்க, அறுபடை வீடுன்றாங்க. அது இருந்துட்டு போகட்டும். அவன் அந்த கோவணத்துக்கு மேல ஒரு வேட்டி கட்டட்டும் அதான் என்னுடைய எண்ணம், அந்த பழனி முருகன். இவ்வாறு தயாரிப்பாளர் ராஜன் பேசியுள்ளார்.

# உக்ரைனில் இருந்து மாணவர்களை மீட்பதில் தாமதம் ஏன்?

## மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி

உக்ரைன் ரஷியாவிற்கு இடையே நடந்து வரும் போரால் மாணவர்கள் உள்பட ஏராளமான இந்தியர்கள் வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். இதனால், மாணவர்களை அழைத்து வர மத்திய அரசு ஆபரேஷன் கங்கா என்ற திட்டத்தின் கீழ் சிறப்பு விமானங்கள் ஏற்பாடு செய்துள்ளன. இருப்பினும், உக்ரைனில் இருந்து தப்பித்து வர முடியாத சூழ்நிலையில் பல இடங்களில் இந்தியர்கள் சிக்கியுள்ளனர்.

உக்ரைனில் சுமார் 20,000 இந்தியர்கள் இருப்பதாகவும், அவர்களில் கிட்டத்தட்ட 6000 பேர் கடந்த சில நாட்களில் இந்தியா திரும்பியுள்ளதாகவும் வெளியுறவுச் செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா நேற்று தெரிவித்தார்.

இந்நிலையில், மத்திய அரசை தாக்கி மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் இந்திய மாணவர்களின் உயிரைப் பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். உயிர் மிகவும் விலைமதிப்பற்றது. அவர்களை அழைத்து வருவதற்கு ஏன் இவ்வளவு நேரம் எடுக்கிறது? ஏன் முன்னதாகவே நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

மாணவர்கள் உள்பட இந்தியர்களை அழைத்துவர உடனடியாக போதுமான எண்ணிக்கையிலான விமானங்களை ஏற்பாடு செய்து, அனைத்து மாணவர்களையும் விரைவில் அழைத்து வர வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன் இவ்வாறு அவர் கூறினார்.

# பாஜக வேட்பாளர்களை ஆதரித்து வாரணாசியில் பிரதமர் மோடி பிரசாரம்

உத்தர பிரதேசத்தில் கடைசி கட்ட தேர்தல் 7ம் தேதி நடைபெற உள்ள நிலையில், பிரசாரம் விறுவிறுப்படைந்துள்ளது. பிரதமர் மோடி நேற்று மதியம் மிர்சாபூரில் பிரசாரம் மேற்கொண்டார்.பிரசாரகூட்டத்தில்பேசிய அவர்,

போர் நடைபெறும் உக்ரைனில் இருந்து ஆயிரக்கணக்கான மாணவர்களை ஆபரேசன் கங்கா திட்டத்தின் கீழ் மீட்கப்பட்டு அழைத்து வந்திருப்பதாகவும், அங்கு சிக்கித் தவிக்கும் மீதமுள்ளவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

பரம்பரை வம்சங்கள் மற்றும் மாஃபியாவாதிகளை உத்தரபிரதேச வாக்காளர்கள் தோற்கடித்து பாஜக அரசாங்கத்தை கொண்டு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் வாரணாசியில் பாஜக வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி பிரசாரம் செய்தார். அதன் ஒரு பகுதியாக மால்தாகியா சவுக் பகுதியில் இருந்து வாகன பிரசாரம் மேற்கொண்டார். இதில் ஏராளமான தொண்டர்கள் பங்கேற்றனர்.

# கல்வி புரட்சி மூலமே சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம்



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

மலையக மக்களுக்கு சேவையாற்றுவதும், அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதுமே காங்கிரஸின் பிரதான நோக்கம். கல்வி புரட்சி மூலமே எமது சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்பதில் காங்கிரஸ் உறுதியாக நிற்கின்றது. எனவே, எமது இலக்கை நோக்கிய பயணத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி பன்வில ஹாத்தல கீழ் பிரிவு மற்றும் கெலாபொக்க சோலங்கந்த ஆகிய தோட்டப்பகுதிகளில் தோட்ட வீடமைப்பு, சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட கொங்ரீட் பாதை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தலைமையில் நடைபெற்றது. இதன் போது நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியில் இருந்து நாம் தலை தூக்க ஆரம்பிக்கும்போது, ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதலும் எமது பொருளாதாரத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை உச்சம் தொட்டுள்ளது. இப்படியான நெருக்கடிகள் இருந்தும் மலையகத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை நாம் கைவிடவில்லை. அவை உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அப்பால் கல்வித்துறை எழுச்சியே எமது பிரதான இலக்கு. அத்துடன், சுகாதாரம், விளையாட்டு மற்றும் சுயதொழிலும் ஊக்குவிக்கப்படும். இவை சமாந்தரமாக இடம்பெற்றால் நிச்சயம் எமது சமூகம் மாற்றம் காணும். அந்த இலக்குடன்தான் ஜீவன் தொண்டமான் தலைமையில் காங்கிரஸ் தற்போது பயணித்துக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் வலிகளை தாங்கிக்கொண்டாலும் மக்களுக்கு சுகங்களை கொடுக்கவே முயற்சிக்கின்றோம். அப்படி இருந்தும் சிலர் எம்மீது விமர்சனக் கணைகளைத் தொடுக்கின்றனர். எமது பாதையில் முற்களை விதைக்க முற்படுகின்றனர். எமக்கு உதவாவிட்டாலும் பரவாயில்லை, பயணத்துக்கு தடையாக இருக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்." என்றார்.



கொழும்பு கங்காராம விகாரையில் அமைந்துள்ளது ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழா அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்ரூபன் யாத்திரை குழுவின் தலைவர் ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்



'ஒரே நாடு ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் பெண்கள் அமைப்பின் செயலாளர் தேசமான்ய தனு ரஸியா பானுவின் ஏற்பாட்டில் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனுக்கு கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பிரார்த்தனையின் போது பிடிக்கப்பட்ட படம்.

## சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

320

**வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பு 05, ஹெவ்லொக் ரோட் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016122

323

**வெற்றிடங்கள்**
**தொழிலாளர்கள்**

பண்டிகைக்காலப் பொருட்களை வாடகைக்கு விடும் கடைக்கு ஊழியர்கள் தேவை. சம்பளம் ரூபா 35,000/- முதல் ரூபா 40000/- மற்றும் OT, தங்குமிடம் கிடையாது. முகவரி 125, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு10. Tel 0755008996 016000

**காணி/தோட்டம்**

641

**வீடு சொத்து**
**கொழும்பு மாவட்டம்**
**விற்பனைக்கு**

முகத்துவாரம் அளுத்மாவத்த, கொழும்பு 15, 178, 155 பஸ் பாதையில் வீடு வாடகைக்கு உண்டு. மாதாந்த வாடகை 50,000. 0773965117 015817

Repeat Your ad For Better Offers

---

எமது இல. BD/UP/LND 1/ UMAYA/THALP1/02
காணி அமைச்சின் இல. 4-3/18/2019/WS/164

பிரதேச செயலகம்
ஊவா பரணகம.
2022-03-04.

## காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7ஆம் அத்தியாயத்தின் கீழான அறிவித்தல்

காணி சுவீகரித்தல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொண்டுள்ள பின்வரும் காணிக்காக அந்தச் சட்டத்தின் 9ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமைத்துவம் மற்றும் நட்டஈடு பரிசீலனை 2022-04-06ஆம் திகதி ஊவா பரணகம பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்படும் என பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்த காணியோடு தொடர்புள்ளவர்கள் இந்தப் பரிசீலனைக்காக முன்தோற்றுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 2022-02-26ஆம் திகதிய மற்றும் 2268/96ஆம் இலக்க அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| **பிரதேச செயலாளர் பிரிவு** | - ஊவா பரணகம |
| **ஆரம்ப வரைபட இலக்கம்** | - அ.க.பி. 391இன் மேலதிக இலக்கம் 03இல் படிவ இல. 04 |
| **துண்டு இலக்கம்** | - 768 முதல் 789 வரை (19 துண்டுகள்) |
| **காணியின் மொத்த அளவு** | - 56.1898 ஹெக்டயார் |
| **காணி அமைந்துள்ள கிராமம்** | - 37-E யாலகமுவ |
| **அமைவிடம்** | - |

பதுளை மாவட்டத்தின், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் கம்பஹா கோரளையின் சிறு பிரிவின் யாலகமுவ கிராம சேவையாளர் பிரிவிலுள்ள யாலகமுவ.

**கையொப்பம்: சுவினீதா குணசேக்கர**
**பிரதேச செயலகம்,**
**ஊவா பரணகம.**

**பீ.எல்.ஜீ. கீதிகா,**
**உதவி பிரதேச செயலாளர்,**
**ஊவா பரணகம பிரதேச செயலாளர் சார்பாக.**

---

## தெவிநுவர பிரதேச சபை
## விலைமனுக் கோரல்

**தெவிநுவர பிரதேச சபைக்கு உரித்தான Mitsubishi L200 4WD double Cab வாகனத்திற்கு புதிய கெபின் உடற்பாகம் (CABIN BODY) ஒன்றை வழங்கி நிறுவி புதுப்பிப்பதற்காக விலைமனு கோரல்**

இதற்காக பதிவு செய்யப்பெற்றுள்ள வாகனப் புதுப்பித்தல் மற்றும் பூச்சு வேலைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

இதற்கான விபரக்குறிப்புக்களுடன் கூடிய விலைமனுப்படிவத் தொகுதிகளை வேலை நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 3.00) 2022.03.07 முதல் 2022.03.21 வரை தெவிநுவர பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விலைமனு ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் 2022.03.22 அன்று நண்பகல் 12.00 என்பதுடன் அன்றைய தினம் பி.ப. 2.00 இற்கு விலைமனுத் திறக்கப்படும். விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்கையில் உங்கள் நிறுவனத்தின் பதிவுச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் மேலதிக விபரங்களிற்காக 041-2222571 மற்றும் 041-2225685ஐ அழைக்கவும்.

**தலைவர்,**
**தெவிநுவர பிரதேச சபை,**
**தெவிநுவர.**

---

## பொதுமக்களுக்கு விடுக்கப்படும் தயவான அறிவிப்பு

வெலிசர நீதவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் 63077/22 இன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சட்டவிரோதமாக, போலியான முறையில் கடத்திவரப்பட்ட (Smuggled) வைத்திய உபகரணங்களான NovoMix 30 Flex Pen என்ற இன்சுலின் மருந்து உள்ளடங்கிய வைத்திய உபகரணங்கள் 11ஐ விநியோகித்தல் சேவையில் ஈடுபட்டிருந்த மருந்து விற்பனையாளரினால் கடமை தவறிய குற்றச்சாட்டு காரணமாக தொடரப்பட்ட வழக்கில் எம்மால்

2022-02-18 தினத்தன்று
மதிப்புக்குரிய வெலிசர நீதவான் முன்னிலையில்
குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

2015ம் ஆண்டு 05ஆம் இலக்கம் பிரிவு 106(1) தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டமூலத்தின் 131 பிரிவு (1) (d) (1) மற்றும் 131 பிரிவு (1) (e) என்பவற்றினை மீறியுள்ளதை தெரிவிப்பதோடு, இந்த குற்றத்தை மீளவும் செய்யமாட்டேன் எனும் உறுதியுடன் அனைத்து பொதுமக்களிடமும் மன்னிப்பு கேட்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிடம் மிகவும் மதிப்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படிக்கு,
**அப்துல் ராசிக் மொஹமட் வாஜித்**
**ARM பார்மசி**
**எல்ஜி/3, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு 12.**

---

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

### திருத்தப்பட்ட பெறுகை அறிவித்தல்

2022 மார்ச் 04ம் திகதி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையினால் பிரசுரிக்கப்பட்ட 'தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் 500 ஏக்கர் காணி விலங்கு உணவிற்காக சோளம் பயிர்ச் செய்கைக்கு அல்லது போசனையுடைய புல் பயிர்ச் செய்கைக்கு குறுகிய காலத்திற்கு குத்தகைக்கு விடல்' என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் 500 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ள முழுக் காணியின் அளவு 1000 ஏக்கர் என திருத்தப்பட வேண்டுமென இவ் அறிவித்தலின் மூலம் அறிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இதுபற்றி 2022 மார்ச் 04ம் திகதி பிரசுரமான பத்திரிகை அறிவித்தலில் உள்ள ஏனைய விடயங்கள் அந்த முறையிலேயே அமுலில் இருக்கும் என மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல. 40, நாவல வீதி,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு -05.**
**தொ.பே. இல. 011 2501701/2 011 5746308**

---

## மீளப் பெறாத அடகுப் பொருட்களைப் பகிரங்க ஏலத்தில் விற்றல்

உடிஸ்பத்துவை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் நான்கு வங்கிகளிலும் 2020.06.30ஆம் திகதி வரை அடகு வைத்து மீளப் பெறாத தங்க நகைகளை வரும் 2022.03.11 வரை கிராமிய வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு வட்டியை செலுத்தி ஏலத்தில் விற்பதை தடுக்கலாம். இல்லையெனில், வரும் 2022.03.12ஆம் திகதி காலை 9.00 மணிக்கு உடிஸ்பத்துவை பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**இங்ஙனம்**
**முகாமையாளர்,**
**'உடிஸ்பத்துவ பலநோக்கு கூட்டுறவு சங்கம்.**

2022.02.26
**தொலைபேசி இலக்கம்.**
**081-2053740**

---

## பெறுகை அறிவித்தல்

### இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
### தேசிய இளைஞர் படையணி

**தேசிய இளைஞர் படையணியின் மாகாண அலுவலகத்தின் பாவனைக்காக ஒருவருட கால எல்லைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் 09 வாகனங்களை வழங்குதல் – 2022/2023**

தேசிய போட்டி கேள்வி கோரல் இல. 01

இளைஞர் மற்றும் விளையாட்டத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய இளைஞர் படையணியின் கீழ்க்காணும் மாகாண அலுவலகங்கள் 09 இற்கு தேவையான வாகனங்களை 2022.04.01 முதல் 2023.03.31 வரையான ஒருவருட கால எல்லைக்காக மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகைமையான வாகன வழங்குநர்களிடமிருந்து/ நிறுவனங்களில் இருந்து 2022.03.05 முதல் 2022.03.28 மு.ப. 11.00 வரை இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | மாகாண அலுவலகம் | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 01 | வடமாகாண அலுவலகம் | வவுனியா தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 02 | தென்மாகாண அலுலகம் | வீரகெட்டிய தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 03 | மேல்மாகாண அலுவலகம் | யக்கல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 04 | கிழக்குமாகாண அலுவலம் | திருகோணமலை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 05 | வடமத்தியமாகாண அலுவலகம் | கெக்கிராவ தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 06 | வடமேல்மாகாண அலுவலகம் | மாவத்தகம தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 07 | சப்ரகமுவ மாகாண அலுவலகம் | கேகாலை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 08 | ஊவா மாகாண அலுவலகம் | பண்டாரவளை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 09 | மத்திய மாகாண அலுவலகம் | செங்கடகல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |

2. குறித்த சேவையின் கேள்வி மாதிரியில் இணைந்துள்ள விபரங்களுக்கு அமைவாக வழங்க வேண்டியதுடன் அதற்காக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கேள்விக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். (ஒவ்வொரு மாகாணத்திற்கும் வேறுவேறாக கட்டணங்களைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களை கொள்வனவு செய்தல் வேண்டும்) அத் தொகையை 2022.03.05 முதல் 2022.03.25 வரை அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை தேசிய இளைஞர் படையணியின் தலைமையகத்தின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டை பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன தேசிய இளைஞர் படையணியின் தலைமையகத்தில் பாதுகாப்பு பிரிவு கரும பீடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

   (கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக எழுத்து மூல வேண்டுதலைச் சமாப்பித்தல் வேண்டும்)

3. சமர்ப்பித்துள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக தெளிவாக கேள்விகளைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை நகல் பிரதியுடன் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு (சிறிய), தேசிய இளைஞர் படையணி தலைமையகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு -07 என்ற முகவரிக்கு 2022.03.28 மு.ப. 11.00 இற்கு முன் கிடைக்ககுமாறு அனுப்புவதற்கு அல்லது தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தின் தரைமாடியில் பிரதான கேட்போர் கூடத்தின் அருகில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். அன்றைய தினம் அதாவது 2022.03.28 கேள்விப் பத்திரங்கள் மூடப்பட்டவுடன் தேசிய இளைஞர் படையணி தலைமையக கேட்போர் கூடத்தில் அக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
4. கேள்விப் பத்திரத்துடன் கேள்விக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியுடன் கேள்விதாரர்கள் இலங்கை மத்திய வங்கியின் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் முதல் அதாவது 2022.03.28 முதல் 2022.07.11 வரை செல்லுபடியாகுமாறு தலைவர்/ பணிப்பாளர், தேசிய இளைஞர் படையணி, இல. 420, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு -07 என்ற பெயரில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு மாகாணம் சார்பாக ரூபா ஆறாயிரம் (ரூ. 6,000.00) பெறுமதியான ஒவ்வொரு மாகாணம் சார்பாக வேறு வேறாக கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரத்துடன் கேள்விக் கட்ணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் கீழ்க்காணும் ஆவணங்களின் தெளிவான புகைப்படப் பிரதிகளை கேள்விதாரர்களால் உண்மைப் பிரதியென உறுதி செய்து இணைத்தல் வேண்டும். தேவைப்படும்போது அவ் ஆவணங்களின் மூலப் பிரதியை சமர்ப்பிப்பதற்கு இயலுமாதல் வேண்டும்.
   - வாகனத்தைப் பதிவு செய்யும் சான்றிதழின் உண்மைப் பிரதியென உறுதி செய்த போட்டோப் பிரதியொன்று
   - முழுமையான காப்புறுதி சான்றிதழின் உண்மைப் பிரதியென உறுதி செய்த புகைப்படப்பிரதி
   - இவ் வருடத்துடன் சம்பந்தப்பட்ட வாகனத்தின் வருமான அனுமதிப்பத்திரத்தின் உண்மைப் பிரதியென உறுதி செய்த போட்டோப் பிரதி
   - வெட் வரிக்காக பதிவு செய்து இருப்பின் அச் சான்றிதழின் உண்மைப் பிரதியென உறுதி செய்த புகைப்படப் பிரதி/விடுவித்தல் சான்றிதழ்
   - வாகன உரிமைத்துவம் தமக்குரியதாக இருப்பதுடன் அவ்வாறு இல்லையெனில் வாகனப் பதிவு வாடகை அடிப்படையில் போக்குவரத்து வழங்கல்கள் நிறுவனம் வரை உள்ள கால எல்லைக்குள் சட்டரீதியான ஒப்பந்தம் ஒன்றின் மூலப் பொறுபேற்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.
   - இலங்கை போக்குவரத்து சபையின் தலைமையகத்தில் அல்லது பிரதேச அலுவலகத்தின் மூலம் பெற்றுக் கொண்ட எரிபொருள் எரித்தல் அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. 2022.03.15 மு.ப. 11.00 இற்கு தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தில் முன் தெளிவுபடுத்தல் கலந்துரையாடல் (Pre-Bid Meeting) நடைபெறும்.
7. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் முதல் அதாவது 2022.03.28 முதல் 2022.06.27 வரை 90 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. மேற்படி 4, 5 மற்றும் 7ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
9. இது பற்றிய இறுதித் தீர்மானம் தேசிய இளைஞர் படையணி திணைக்கள பெறுகைக்குழு (சிறிய) வசமாகும்.
10. இது பற்றிய விசாரணைகள் இருப்பின் தொ.பே. இல. 011-2688885/ 0112 690294 ஊடாக தேசிய இளைஞர் படையணி மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)ஐ அழைக்கலாம்.

**திணைக்கள பெறுகைக்குழு (சிறிய),**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு -07.**

2022.03.05

---

### அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்தல்

ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச குடியரசிற்கும் பொது மக்களுக்கும் மற்றும் அனைவரும் அறிந்துக் கொள்வதற்காக அறியத்தருவதாவது,


நுவரெலியா, ஹாவாஎலிய, வஜிர வீதி, இல. 17 என்ற விலாசத்தில் வசிக்கும் **விதான ஆராச்சிகே சஞ்ஜீவனி இந்துகா** (தேசிய அடையாள அட்டை இல. 785741960V) ஆகிய நான் என்னுடைய அற்றோணித் தத்துவப்பத்திரத்தை நுவரெலியா, ஹாவாஎலிய, வஜிர மாவத்தை, இல. 17 என்ற விலாசத்தில் வசிக்கும் **அமில மதுரங்க பிரதிநந்திஸ் அபேவிக்ரம** என்பவருக்கு, பதிவாளர் ஜெனரால் திணைக்களத்தின் அதிகாரத்தில் மற்றும் அற்றோணித் தத்துவப்பத்திர புத்தகத்தின் 56 காண்டத்தில் 17 இருமடிப்புத்தாளில் 2909 நாட்புத்தகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பிரசித்த நொத்தாரிசு **எச்.பி.டி. நாணயக்கார** அவர்களால் 2010 நவம்பர் 25ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 3940 என்ற அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. இன்றிலிருந்து மேற்குறித்த **அமில மதுரங்க பிரதிநந்திஸ் அபேவிக்ரம** என்பவருக்காக செய்யப்படும் செயற்பாடுகள் சம்பந்தமாக அல்லது உள்ளடக்கப்படும் எவ்வித ஒப்பந்தங்கள் சம்பந்தமாக எனக்கு பொறுப்பாளியல்ல என இத்தால் அறியத்தருகிறேன்.

**விதான ஆராச்சிலாகே சஞ்ஜீவனி இந்துகா**

---

BE BETTER INFORMED!

Dinamina
Daily News
Thinakaran




News you can trust now free on your mobile phone.

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

---

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
வர்த்தக அமைச்சு

EDB

## பெறுகை அறிவித்தல்

EDB/DPC/NCB/2022/02

**கோப்பி கன்றுகள் மற்றும் நைலோன் நீல வலையின் கொள்வனவுக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைகளுக்கான அழைப்பு**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகளுக்கு அமைய நைலோன் நீல வலை மற்றும் கோப்பி கன்றுகளின் கொள்வனவுக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**நைலோன் நீல விலைக்கான விபரக்குறிப்பு**

| விபரக்குறிப்பு | குறிப்புரை |
|---|---|
| தயாரிப்பு | நைலோன் நீல நெய்த வலை |
| தயாரிப்பு நாடு | குறிப்பிட்டுக் கூறவும் |
| வர்த்தகநாமம் | குறிப்பிட்டுக் கூறவும் |
| நிறம் | சிவப்பு நிற விளிம்புடன் நீல நிறம் |
| அளவுகள் | 0.9m x 30m (ஓர் அங்குலத்திற்கு 34 அல்லது 40 சதுரம்) |
| தேவையான அளவு | 2175 சுருள் |
| விநியோகத் திகதி | கொள்வனவுகட்டளை கோரப்பட்ட திகதியில் இருந்து 1 வாரத்திற்குள் |

அலகு எண்ணிக்கைகளுடன் வழங்கப்பட்ட விநியோக இடங்களுக்கு தனியான போக்குவரத்து கட்டணங்களை குறிப்பிடவும்.
பின்வரும் மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பிரதேச செயலகங்கள்.
கண்டி - கேகாலை - குருநாகல்

**கோப்பி கன்றுகளுக்கான விபரக்குறிப்பு**

| விபரக்குறிப்பு | குறிப்புரை |
|---|---|
| வகை | *Collece Arabica, Lak Parakum* |
| இலைகளின் எண்ணிக்கை | ஆறு (06) சோடி இலைகள் |
| வளரும் பை அளவு | 8''x5'' அங்குல பை/250 guage |
| பூச்சிகள் மற்றும் நோய் | பீடை மற்றும் நோய்கள் அற்றது |
| சேதங்கள் (செடிகள்/ படரும் கொடி) | செடிக்கு எந்த சேதமும் அற்றது |
| தேவையான கோப்பி கன்றுகளின் எண்ணிக்கை | 350,000 கன்றுகள் |
| விநியோகத் திகதி | கொள்வனவுகட்டளை கோரப்பட்ட திகதியில் இருந்து 1 வாரத்திற்குள் |

அலகு எண்ணிக்கைகளுடன் வழங்கப்பட்ட விநியோக இடங்களுக்கு தனியான போக்குவரத்து கட்டணங்களை குறிப்பிடவும்.
பின்வரும் மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட பிரதேச செயலகங்கள்.
கண்டி - மாத்தளை - நுவரெலியா - கேகாலை

கூறுவிலைகளை சமர்ப்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் மற்றும் விதிகள் பின்வருமாறு.

1. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "EPV இற்கான கோப்பி கன்றுகள் மற்றும் வெனிலா-EPV இற்கான நைலோன் நீல வலை" என்று குறிப்பிட்டு 2022 மார்ச் 28ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பெருகை பிரிவில் (கட்டம் 06) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவது அல்லது கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அதன் பின் கேள்விமனுக்கள் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் கூறுவிலைகள் நிராகரிக்கப்படும். கூறுவிலைகள் திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.
3. விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழு வசமானது.
4. மேலதிக விபரங்களுக்கு, 0718-041180 என்ற தொலைபேசி இலக்கத்தில் EDB மத்திய மாகாண அலுவலக, உதவிப் பணிப்பாளர் - திரு ஜயலத் அவர்களை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**பெறுகைப் பிரிவு,**
**6ஆவது மாடி, 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு 02, இலங்கை**
**தொ.: 0112-300700, தொலைநகல்: 011-2300715**
**இணையதளம்: www.srilankabusiness.com**

---

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to: classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals

# இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் : முதல் நாளில் இந்தியா 357/6 ஓட்டங்கள்



இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 357 ஓட்டங்களை பெற்றது.

இந்தியா- இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி மொகாலியில் நேற்று ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அதன் படி இந்திய அணி சார்பாக மயங் அகர்வால் மற்றும் அணியின் தலைவர் ரோஹித் சர்மா இருவரும் களமிறங்கி ஆடிக் கொண்டிருந்த வேளை அணியின் தலைவர் 29 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் அகர்வாலுடன் இணைந்தார் ஹனுமன் விகாரி அவரும் இணைந்து நன்றாக ஆடுவார்கள் என்ற நிலையில் அகர்வால் 33 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க பின்னர் தனது 100 ஆவது டெஸ்டில் களமிங்கிய விராட் கோலியின் 100வது டெஸ்டில் இலங்கை அணி அரைசதம் கூட அடிக்கவில்லை. ஹனுமா விஹாரி தனது 100வது முதல் தர போட்டியில் தனது அரைசதத்தை சதமாக மாற்ற அவர்கள் அனுமதிக்கவில்லை. அவர் 58 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க சிரேஷ் அய்யர் 27 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினார். நாளின் முடிவில், அவர்கள் 19 மகிழ்ச்சிகரமான பந்துகளில் 50 முதல் 96 வரை சென்று தனது வாழ்க்கையில் ஐந்தாவது முறையாக 90களில் ஆட்டமிழந்த ரிஷப் பந்த். முதல் நாள் முடிவில் இந்திய அணி 85 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 357 ஓட்டங்களை பெற்றது. இலங்கை அணி சார்பாக பந்து வீச்சில் சுரங்க லக்மால் ,விஸ்வ பெர்னாண்டோ,லகிரு குமார மற்றும் தனஞ்சய டி சில்வா தலா ஒரு விக்கெட்டையும் லசித் எம்புல்தெனிய இரண்டு விக்கெட்டையும் வீழ்த்தினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

**புதிய மைல்கல்லை எட்டிய**




**விராட் கோஹ்லி**

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி, சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 8000 ஓட்டங்களை கடந்த 6வது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி மொஹாலியில் நடைபெற்று வருகின்றது. இந்த போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகின்றது. முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணிசார்பாக விராட் கோஹ்லி தன்னுடைய 100வது டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்றார். அதன்படி, இந்திய அணிசார்பாக 100வது டெஸ்ட் போட்டியில் விளையாடும் 12வது இந்திய வீரர் என்ற பெருமையையும் இவர் பெற்றுக்கொண்டார். நேற்றைய ஆட்டநேரத்தில் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்திவந்த விராட் கோஹ்லி 38 ஓட்டங்களை பெற்றிருந்த போது, 8000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார்.

விராட் கோஹ்லி 8000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை 169 இன்னிங்ஸ்களில் கடந்துள்ளதுடன், 27 சதங்களையும் விளாசியுள்ளார். இதில், வேகமாக 8000 ஓட்டங்களை கடந்த இந்திய வீரர்கள் வரிசையில் 5வது இடத்தையும் பிடித்துக்கொண்டார்.

சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன், சுனில் கவாஸ்கர், வீரேந்திர ஷெவாக் மற்றும் ராஹுல் டிராவிட் ஆகியோர் இதற்கு முதல் இந்திய அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் 8000 ஓட்டங்களை கடந்துள்ளனர். இதேவேளை, சர்வதேச ரீதியில் 8000 டெஸ்ட் ஓட்டங்களை கடந்த 33வது வீரராகவும் விராட் கோஹ்லி பதிவாகினார்.

இலங்கை அணிக்கு எதிரான இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 45 ஓட்டங்களுடன் விராட் கோஹ்லி ஆட்டமிழந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

# தியகமவில் தேசிய மெய்வல்லுநர் 2ஆவது தகுதிகாண் போட்டிகள்

Sri Lanka Athletics

Entry Standards to the 2nd Selection Trails for Asian Games, to be held on 10th & 11th of March 2022

| Event | Male | Female |
|---|---|---|
| 100m | 10.85 | 12.50 |
| 200m | 22.00 | 25.50 |
| 400m | 48.20 | 57.00 |
| 800m | 1:55.00 | 2:15.00 |
| 1500m | 3:56.00 | 4:50.00 |
| 5000m | 15:10.00 | 18:00.00 |
| 10000m | 31:45.00 | 38:30.00 |
| 110mH/100mH | 15.50 | 15.80 |
| 400mH | 55.00 | 63.00 |
| 3000mSC | 9:35.00 | 11:00.00 |
| High Jump | 2.00 | 1.58 |
| Pole Vault | 4.40 | 3.10 |
| Long Jump | 7.30 | 5.70 |
| Triple Jump | 15.30 | 12.00 |
| Shot Put | 13.00 | 10.50 |
| Discus Throw | 40.00 | 33.00 |
| Hammer Throw | 37.00 | 30.00 |
| Javelin Throw | 64.00 | 38.00 |

Period of consideration of the above Performances
07th April 2021 – 20th February 2022

ஆசிய விளையாட்டு விழாவை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகளின் இரண்டாவது அத்தியாயம் மார்ச் மாதம் 10ஆம், 11ஆம் ஆகிய திகதிகளில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

முன்னதாக குறித்த தகுதிகாண் போட்டிகளை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடத்துவதற்கு இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் உள்ள செயற்கை ஓடுபாதையின் நிர்மானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததால் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக எந்தவொரு மெய்வல்லுனர் போட்டிகளும் அங்கு நடைபெறவில்லை. குறித்த செயற்கை ஓடுபாதையின் நிர்மானப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்ததை அடுத்து நடத்தப்படுகினற முதலாவது மெய்வல்லுனர் போட்டியாக தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகளின் இரண்டாவது அத்தியாயம் நடைபெறவுள்ளது. கொரோனா வைரஸ் பரவலை கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட வீரர்களை மாத்திரம் இந்த தகுதிகாண் போட்டியில் பங்குபெறச் செய்வதற்கு இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் சீனாவில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகளின் முதலாவது அத்தியாயம் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

இதில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சச்சினி பெரேராவும், பெண்களுக்கான நீளம் பாய்தலில் சாரங்கி சில்வாவும் புதிய இலங்கை சாதனைகள் படைத்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகளின் இரண்டாவது அத்தியாயத்தில் இடம்பெறவுள்ள போட்டிகள் மற்றும் அதற்கான அடைவுமட்டங்கள் குறித்த அட்டவணையை கீழே பார்க்கலாம்.

# சப்ரகமுவவை பெனால்டியில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு சென்ற தென் மாகாணம்

## வடமாகாண அணியுடன் இன்று மோதல்

**திருகோணமலை குறூப் நிருபர்**

மாகாண அணிகளுக்கு இடையிலான சுதந்திர கிண்ண கால்பந்து சுற்றுத் தொடரில் மிகவும் விறுவிறுப்பான இரண்டாம் கட்ட அரையிறுதியின் நிறைவில் சப்ரகமுவ அணியை பெனால்டியில் வெற்றிகொண்ட தென் மாகாண அணி, தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.தொடரின் சம்பியனைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டியில் தென் மாகாண வீரர்கள் வட மாகாணத்தை எதிர்த்தாடவுள்ளனர். இந்த இறுதிப் போட்டி இன்று 5ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த வாரம் காலியில் இடம்பெற்ற இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் கட்ட அரையிறுதிப் போட்டியில் முஷ்பிக் பெற்ற கோலினால் சப்ரகமுவ அணி 10 என வெற்றி பெற்றிருந்தது.

எதிரணியின் மைதானமான இரத்தினபுரி சீவலி அரங்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் தென் மாகாண அணிக்கு வெற்றி கட்டாயமாக இருந்தது.

போட்டியின் ஆரம்பம் முதல் கோலுக்கான முயற்சிகளை சப்கரகமுவ வீரர்கள் மேற்கொண்டாலும் அவற்றினால் அவர்களுக்கான கோல் கிடைக்கவில்லை.

மத்திய களத்தில் இருந்து வழங்கப்பட்ட பந்தை அணியின் தலைவர் சிபான் முன்னே எடுத்துச் சென்ற போதும் அவர் பந்தை வெளியே அடித்து சிறந்த வாய்ப்பை வீணாக்கினார். முதல் பாதியின் உபாதையீடு நேரத்தில் தென் மாகாணத்திற்கு கிடைத்த பிரீ கிக்கின்போது ஷதுரங்க மதுஷான் எதிரணியின் கோல் எல்லைக்கு செலுத்த, சக வீரரிடமிருந்து வந்த பந்தை துமிந்த கோலாக்கி தென் மாகாணத்தை முன்னிலைப்படுத்தினார்.

ஏற்கனவே முதல் பாதியில் மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டிருந்த சபரகமுவ அணி வீரர் அவிஷ்க டேஷானுக்கு இரண்டாம் பாதி ஆரம்பமாகி சில நிமிடங்களில் அடுத்த மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. எனவே, அவர் சிவப்பு அட்டையுடன் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட, சப்ரகமுவ அணி 10 வீரர்களுடன் விளையாடியது.



அடுத்த சில நிமிடங்களில் எதிரணியின் கோல் திசையில் வைத்து தென் மாகாணத்திற்கு கிடைத்த பிரீ கிக்கை லக்ஷான் தனன்ஜய பெற்றார். அவர் உள்ளனுப்பிய பந்தை இளம் வீரர் மொஹமட் ரிஸ்லான் கோலுக்கு அருகில் இருந்து வேகமாக முன் வந்து ஹெடர் செய்ய, தென் மாகாணம் இரண்டு கோல்களால் முன்னிலை பெற்றது.

போட்டி 90 நிமிடங்களை அண்மித்ததும் சப்ரகமுவ வீரர் எதிரணியின் கோல் எல்லையில் வைத்து கோலுக்கான முயற்சியை மேற்கொள்ளும்போது, தென் மாகாண பின்கள வீரரால் முறையற்ற விதத்தில் தாக்கப்பட்டமையினால் சப்ரகமுவ அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. அதனை சபரகமுவ அணியின் பின்கள வீரர் ஹிஜாஸ் கோலாக்கினார்.

முதல் கட்ட அரையிறுதியைப் போன்றே, இந்தப் போட்டியிலும் தென் மாகாண வீரர் விகும் அவிஷ்க, சிபானை தடுத்தாடியமை சப்ரகமுவ அணிக்கு பாதகமாக அமைந்தது.

பின்னர் போட்டியின் உபாதையீடு நேரத்தில் சப்கமுவ வீரர்கள் அடுத்தடுத்து கோலுக்கான முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும், ஆட்ட நிறைவில் 2–1 தென் மாகாணம் வெற்றி பெற்றது.

இரண்டு கட்ட அரையிறுதிகளினதும் நிறைவில் முழு கோல்களின் எண்ணிக்கை தலா இரண்டாக இருந்தமையினால் ஆட்டம் சமநிலையடைய வெற்றியாளரைத் தெரிவு செய்ய பெனால்டி முறைமைக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது.

பெனால்டி சூட் அவுட்டில், தென் மாகாண அணித் தலைவரும் கோல் காப்பாளருமான ராசிக் ரிஷாட் இரண்டு சிறந்த தடுப்புக்களை மேற்கொள்ள அவ்வணி பெனால்டி நிறைவில் 4–1 என வெற்றி பெற்று சுதந்திர கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

INDEPENDENCE TROPHY
CEYLON PROVINCIALS LEAGUE 2022

# 'தினகரன் கிண்ணம்' அணிக்கு 05 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டி 27ம் திகதி பேருவளையில்

90th ANNIVERSARY தினகரன்

பேருவளையில் அணிக்கு 05 பேர் கொண்ட தினகரன் கிண்ணத்துக்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி பேருவளை ஹெட்டிமுல்ல BURGO CITY உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.பத்திரிகையின் தாய் வீடாக போற்றப்படும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் வெளியீடான தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பேருவளை வாசகர்களுக்காக இந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சுற்றுப்போட்டி நடைபெறவுள்ள மைதானம் இன்று மாபெரும் விழாவில் திறந்து வைக்கப்படுகிறது.இப் போட்டியில் 16 கழகங்கள் மாத்திரமே உள்ளீர்க்கப்படுவதால் விரும்பும் கழகங்கள் ஏற்பாட்டுக் குழு தலைவரை இன்றே தொடர்பு கொள்ளவும்.

(எம்.என்.எம்.ரிம்ஸான்0776226790)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.